உ

நற்றிணை
கதைகள் - நூறு

மு. சுயம்புலிங்கம்

M S R கிரியேஷன் வெளியீடு

நூல் விபரப் பட்டியல்

தலைப்பு	: நற்றிணை கதைகள் நூறு
ஆசிரியர்	: **மு. சுயம்புலிங்கம்**
உரிமை	: ஆசிரியர்க்கு
முதல் பதிப்பு	: 2025
மொழி	: தமிழ்
கணிணி	: வியாழம் கணிணிஅச்சகம்.
அச்சாக்கம்	: காரணைப்புதுச்சேரி-603 202.
வெளியீடு	: M S R கிரியேஷன். பிளாட் நம்பர்: 2/3 (வெஸ்டர்ன் பார்ட்) பாலாஜி நகர் மெயின் ரோடு ஸ்ரீ பாலாஜி நகர் புதுப்பெருங்களத்தூர் சென்னை - 600 063.

மு. சு. ரிஷி	: 9840370200
மு. சுயம்புலிங்கம் (ஆசிரியர்)	: 9003196380

Natrinai Kathaigal Nooru

Subject	:	Literature Stories from Nattrinai
Author	:	M. Suyambulingam
Language	:	Tamil
Edition	:	First 2025
Size of Book	:	Demy 1x8
Point Size	:	12.5
No. of Pages	:	186
No. of Copies	:	50
Type & Design	:	Jupitar DTP 9962241090
Printer	:	Kabali Printers. Ch-91
Publisher	:	M S R CREATION. e.mail : msrishiadvocate@gmail.com Chennai - 600 063.
Price	**:**	**Rs 200/-**

ஆசிரியர் உரை

07-10-2025

அது, இரண்டாயிரத்திப் பதினாறாம் ஆண்டு. என் பையன் ரிஷி, எனக்கு நற்றிணைப் புத்தகம் வாங்கிக் கொடுத்தான். அந்த நற்றிணையில், நானூறு பாட்டுக்கள் இருந்தது. அவ்வை. சு. துரைசாமிப் பிள்ளை, அந்த நானூறு பாட்டுக்களுக்கும் உரை எழுதியிருந்தார்.

தமிழறிஞர் அவ்வை சு. துரைசாமி பிள்ளை அவர்கள் எழுதிய உரை எனக்கு ரொம்பப் பிடித்திருந்தது. நான், நற்றிணைப் பாட்டுக்கள் நானூரரையும் விரும்பி, ரசித்து ரசித்துப் படித்தேன்.

நான், நற்றிணைப் பாட்டுக்களைப் படிக்கப் படிக்க, அந்த நற்றிணையில் நல்ல நல்ல கதைகள் இருப்பதைப் புரிந்து கொண்டேன்.

உடனேயே அந்தக் கதைகளை எழுத ஆரம்பித்தேன். எழுத எழுத, நற்றிணைக் கதைகள் உண்மைக் கதைகளாக இருப்பது எனக்கு ரொம்பப் பிடித்திருந்தது.

ஒரு ஒரு கதைகளாக எழுதி எழுதி, நூறு கதைகள் எழுதி

விட்டேன்.

அதுக்குப் பிறகு, நற்றிணையில் இருந்து, இன்னும் இன்னும் கதைகளைத் தேடித்தேடி, மறுபடியும் அறுபத்து மூன்று கதைகள் எழுதினேன்.

தமிழ்ச் சங்க இலக்கியத்தில், நற்றிணையில் **மு. சுயம்புலிங்கம்** எழுதியிருக்கிற கதைகள் மாதிரி, வேறு யாரும் கதைகள் எழுதியிருக்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை.

மு. சுயம்புலிங்கம் எழுதியிருக்கிற இந்தக் கதைகள், இந்தப் பெரிய உலகத்தில், இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்கள் எல்லாரும் படிக்க வேண்டிய கதைகள்.

இது, சிறு கதைகளிலேயே மிகச் சிறந்த சிறுகதைகள்.

பாசத்துடன்
மு. சுயம்புலிங்கம்.
04-01-2025.

உ

வாழ்த்துரை

அவரை நான் இதுவரை கண்டதில்லை. இருந்தும், காண ஆசை......இரு கையும் கூப்பி, திருப்பாதத்தைப் போற்றி வாழ்க தமிழ்..! வளர்க மெய்ஞானம்..! நல்லதே நடக்கும்.

மேற்சொன்னது போல, நான் இப்பிறவியில் நான் காண ஆசை கொள்ளும் ஒருவரில் திருவுடையான் சுயம்புலிங்கம் அவர்களைக் காண ஆவா.

ஆம். என்ன எளிமை.! என்ன யதார்த்தம்.! என்ன உண்மை.! என்ன அன்பு.! என்ன எடுத்துக்காட்டு.! என்ன தொடர்மை.!.. என எண்ணிலடங்கா உயர்திணைப் பண்புகளைத் தன்னகத்தே வைத்து இத் தரணியும் சிறக்க தன் யதார்த்த தமிழ் நடையில் பலப்பல கதைகளையும், பலப்பல அர்த்தங்களையும் சிறப்பு நூலில், தன் சார்பு அழகான எண்ணங்களை வடிவமைத்து வருகிறார்.

இந்த அரிய சேவை புவியில் இப்போது தேவை..! அவரின் அன்பு மகன் ரிஷி, அவருக்கான திருமேடையில் நற்றிணை நூலில் அவர் தன்பால் பார்த்து உணர்ந்த கதைகளை வடிவமைத்து வெளியிட உள்ளார் என்ற செய்தி கேட்டு அகமகிழ்ந்தேன்.

அக்கதைகளைப் படித்து மகிழ்ச்சி கொண்டேன். சின்னஞ்சிறு உயிர் முதல் அவர் மனதில் வைத்து பார்க்கும் கதா பாத்திரங்களைக் கண்டு மெய்சிலிர்த்தேன்.

இப்புவியை, அவர் பார்க்கும் பார்வை, எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. வாழ்க அவர் தொண்டு..! வாழ்க அவர் குடும்பத்தார்..! வாழ்க தமிழ் அடியார்களெல்லாம்..! வாழ்க தமிழ்..! என்றும் புதியது தமிழ்..!

இங்ஙனம்
ஸ்ரீ மகா லட்சுமி நரசிம்ம சுவாமிகள்,
இந்தியா.

21-01-2025

" புறா "

ஒரு பாலைவனம்.

அந்தப் பாலைவனத்தில் உயரமான ஒரு கள்ளி மரம் இருக்கு.

அந்தக் கள்ளி மரத்தில் இரண்டு புறாக்கள் கூடு கெட்டியிருக்கு.

அந்த இரண்டு புறாக்களும் வெள்ளை வெளேர்னு வெள்ளையா இருக்கு.

அந்த இரண்டு புறாக்களுக்கும் கால்கள் செக்கச் செவேர்னு சிகப்பா இருக்கு.

பெண் புறா குஞ்சு பொரிச்சிருக்கு.

பெண் புறா இரை தேட போகவில்லை.

ஆண் புறா இரை தேட போய்ருக்கு. அந்த ஆண் புறா அதன் மனைவிக்காகவும், குஞ்சுகளுக்காகவும் அந்தப் பெரிய பாலைவனத்தில் அலைந்து அலைந்து இரை தேடுகிறது. அந்த ஆண் புறாவுக்கு பாலைவனத்தில் இரை கிடைக்கவேயில்லை.

அந்த ஆண் புறா இரை தேடிக்கொண்டு அந்தப் பாலை வனத்தைத் தாண்டிப் பறந்து போய்க் கொண்டிருக்கிறது.

அந்த ஆண் புறா பறந்து பறந்து அன்னிய தேசத்திற்குப் போய்விட்டது.

அந்த ஆண் புறா தரையிறங்கி இருக்கிற அந்த ஊரில் ஆள்

நடமாட்டம் இல்லை.

வீடுகள் இடிந்து தரைமட்டமா கெடக்கு.

இரண்டு அரசர்களுக்கு இடையில் இந்தப் பகுதியில் போர் நடந்திருக்கிறது. பகை அரசர்களின் வீரர்கள் கிராமங் களைச் சூறையாடிவிட்டார்கள்.

பகை அரசர்களின் வீரர்கள் இங்குள்ள கிராமங்களைத் தீவைத்துக் கொளுத்தி கிராமங்களை அழித்து விட்டார்கள்.

இங்குள்ள வயல் வெளிகளில் தானாகவே முளைத்து தானாகவே விளைந்து நெல் உதிர்ந்து கெடக்கு.

அந்த ஆண் புறா அந்த நெல் மணிகளைப் பொறுக்கிக் கொண்டு கூட்டுக்குப் பறந்து வந்து கொண்டிருக்கிறது.

பாலை பாடிய பெருங்கடுங்கோ.

கதை-1.
நற்றிணை 384.

" இடிந்த கரை "

ஒரு காட்டாறு,

அந்தக் காட்டாற்றின் கரையில் ஒரு மாமரம் இருக்கிறது.

மாமரத்துக்கு நேர்மேலே மழை மேகங்கள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன.

மழை கொட்டு கொட்டுனு கொட்டுகிறது.

வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

அந்தப் பெரிய காட்டாற்றின் வெள்ளம் மாமரத்தில் மோதுகிறது.

கரை இடிந்து விழுகிறது.

மாமரத்தின் வேர்களை மூடிக்கொண்டிருந்த மண்ணை வெள்ளம் கொண்டு போய்விட்டது.

மாமரத்தின் வேர்களை, மண்ணில்லாமல் வெள்ளம் கழுவி வைத்திருக்கிறது.

மாமரத்தின் உச்சியில் கொழுந்து இலைகளாக இருக்கு.

மாமரத்தில் குளிர்ந்த காற்று மோதுகிறது.

மரண பயத்தில் மாமரத்தின் கொழுந்து இலைகள் நடுங்குகிறது.

ஔவையார்.

கதை- 2.
நற்றிணை - 381.

"குழந்தை பிறந்த வீடு"

பாணனே..

நீ ஒரு யாழ் இசைக் கலைஞன்.

நான் சாதாரணப் பெண்.

நீ என் வீட்டு வாசலில் நின்று கொண்டு, உன் முதுகை வளைத்துக் கொண்டு, கூழைக் கும்பிடு போட்டுக் கொண்டிருக்கிறாய்.

நீ என்னைக் கும்பிட வேண்டாம்..கும்பிடாதே.

நீ என்னைப் புகழந்து புகழந்து பாடிக் கொண்டிருக்கிறாய்..

நீ எதுவும் பாட வேண்டாம்..பாடாதே..

இரண்டு குதிரைகள் பூட்டிய அழகான ஒரு தேரில் வந்திருக்கிறாய்..

உன் தேரில் என் கணவனை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறாய்..

பாணனே..எங்கள் வீட்டில் அழகான ஒரு பாலகன் பிறந்திருக்கிறான்.

இது பிள்ளை பிறந்த வீடு.

பிள்ளை பிறந்த இந்த வீடு முடை நாற்றம் நாறிக் கொண்டிருக்கிறது. பிள்ளையைப் பெத்த தாயும் முடை நாற்றம்தான் நாறிக்கொண்டிருக்கிறாள். அவள் சேலையில்

அடுப்பாங்கரைக் கரியும், அடுப்பாங்கரை எண்ணைப் பிசுக்கும் அவள் சேலையை அழுக்காக்கி வைத்திருக்கிறது. குழந்தைக்குக் கண்களில் எழுதிய மையும் அவள் சேலையில் தான் ஒட்டிக் கொண்டிருக்கிறது. அம்ம மார்பில் கசிந்த பாலும், குழந்தை கக்கிய பாலும் கூட அம்ம சேலையில் தான் ஊத்தை படிந்து போய் இருக்கிறது. குழந்தையைப் பெத்தவள் உடுத்தி இருக்கிற சேலை அழுக்கும் ஊத்தை யும் நாறிக் கொண்டிருக்கிறது.

பாணனே..

உன் தலைவன் பெண்களின் வெளி அழகை மட்டும் பார்க்கிறவன். ஒரு பெண்ணின் உள் மனதைப் புரிந்து கொள்ளக் கூடிய அறிவு அவனுக்கு இல்லை.

அவனால் என்னோடு வாழ முடியாது. அவன் விருப்பப் படுகிற மாதிரி அவனோடு கூடி முயங்குவதற்குப் பொருத்த மான பெண் நானில்லை.

அவனுக்குப் பொருத்தமான பெண்கள் பரத்தைச் சேரியில்தான் கிடைப்பார்கள். பரத்தைதான் நாகரிமாக உடுத்துவாள். பரத்தைதான் அவளைக் கவர்ச்சியாக அலங்காரம் பண்ணிக் கொள்வாள்.

பாணனே..

உன் குதிரைகள் என் முற்றத்தில் ரொம்ப நேரமாக நின்று கொண்டிருக்கிறது. உன் குதிரைக்கும் கால்கள் கடுத்து விட்டன. நீ உன் தேரை பரத்தைகள் வாழும் சேரிக்குக் கொண்டு போ. உன் தலைவன் விருப்பப் பட்ட படி கூடி முயங்குவதற்குப் பொருத்தமான பரத்தைகள் சேரியில் கிடைப்பார்கள்.

நீ என்னிடம் பயனில்லாத வார்த்தைகளைத் திரும்பத் திரும்பப் பேசிக் கொண்டிருக்கிறாய்..

பேசாதே..
பேச்சை நிறுத்து..
நீ கிளம்பு..
நீ போ..
நீ வீட்டுக்கு முன்னால் நின்று கொண்டு இருக்காதே.

கூடலூரர்ப் பல் கண்ணனார்.

கதை- 3.
நற்றிணை 380.

" பெலம் இல்லாத ஒரு பெண் குழந்தை "

ஒரு மலைக்கிராமம்.

அந்த மலைக் கிராமத்தில் ஒரு சிறிய வீடு.

ஒரு சிறிய பெண் அந்த வீட்டுக்கு முன்னால் அவள் முற்றத்தில் உட்கார்ந்து கொண்டு பால் குடித்துக் கொண் டிருக்கிறாள்.

ஒரு வேங்கை மரம் அந்த முற்றத்தில் இருக்கிறது. அந்த வேங்கை மரத்தில் தாழ்ந்த கிளையில் ஒரு குட்டிக் குரங்கு உக்காந்துக்கிட்டு இருக்கு. அந்தக் குட்டிக் குரங்கு வேங்கை மரத்தில் இருந்து இறங்கி கீழே வருகிறது. அந்தக் குட்டிக் குரங்கு பால் குடித்துக் கொண்டிருக்கிற அந்தச் சிறிய பெண்ணிடம் போகிறது. அந்தச் சிறிய பெண்ணிடம் இருந்த பால் கிண்ணத் தைப் பறித்துக் கொண்டு அந்தக் குட்டிக் குரங்கு ஓட்டமாய் ஓடிப்போய் வேங்கை மரத்தில் ஏறி உக்காந்துகிட்டு இருக்கு.

குட்டிக் குரங்கிடம் பால் கிண்ணத்தைப் பறிகொடுத்து விட்டு அந்தச் சிறிய பெண் மூசு மூசுன்னு அழுது கொண்டிருக் கிறாள்.

மூசு மூசுன்னு அழுது கொண்டிருக்கிற அந்தச் சிறிய பெண்ணின் விரல்கள் அழகா இருக்கு. அவள் வயிறு ரொம்ப அழகா இருக்கு. அவள் கண்கள் ரொம்ப ரொம்ப அழகா இருக்கு.

அந்தச் சிறிய பெண் அவளுடைய அழகான பிஞ்சு விரல்களைக் கொண்டு அவளுடைய அழகான சின்ன வயிற்றில் ஓங்கி ஓங்கி அடிச்சி அடிச்சி அழுதுக்கிட்டு இருக்காள்.

அந்தச் சிறிய பெண் அழுது அழுது அவள் கண்கள் ரெத்தமாச் சிவந்திருக்கு. அவள் சின்ன வயிற்றில் ஓங்கி ஓங்கி அடிச்சி அடிச்சி அவளுடைய அழகான பிஞ்சு விரல்கள் ரத்தம் கன்றிச் சிவந்திருக்கு.

குடவாயில் கீரத்தனார்.

கதை- 4.
நற்றிணை 379.

" மணல் வீடு "

வயதான ஒரு நோயாளிப் பாட்டி. படுத்த படுக்கை யிலேயே எந்திரிக்க முடியாமல் படுத்தே கிடந்தாகளாம். அவுக முதுகில் படுக்கைப் புண் வந்ததாம். அந்தப் படுக்கைப் புண் பாட்டியைப் பாடாய்ப் படுத்தியதாம்.

படுக்கைப் புண் வந்த அந்தப் பாட்டி உறக்கம் வராமல் படுத்தே கிடந்ததைப் போல் நான் என் படுக்கையில் படுத்துக் கொண்டு உறக்கம் வராமல் கண் முழித்துக் கொண்டிருக்கிறேன்.

இரவு போவனாங்கு.

இந்த இரவு என் காமத்தைத் தூண்டி விடுகிறது. என் காமத்தைத் தூண்டிவிட்டு விட்டு என் காமத்தை இது மேலும் தீவிரப்படுத்துகிறது.

நான் கண்ணுறக்கம் இல்லாமல் இந்த நடுச்சாமத்தில் கண் முழித்துக் கொண்டிருக்கிறேன்.

தீராத என் காம நோய்க்கு முழுக்க முழுக்க நான் தான் காரணம்.

நான் ஒருத்தனைக் காதலித்தேன். நாங்கள் ரெண்டு பேரும் தனிமையில் சந்தித்தோம். நாங்கள் நெருங்கிப் பழகினோம். நாங்கள் ரொம்ப நெருங்கி நெருங்கிப் பழகி னோம்.

இப்போ அவன் என்னைச் சந்திக்க வரவே மாட்டடங் கான். எனக்கு அவனை மறக்க முடியல. எங்கள் ஊர் ஒரு

கடலோரக் கிராமம். நான் எங்கள் வீட்டில் எங்கள் முத்தத்தில் மணல் வீடு கட்டி விளையாடிக் கொண்டிருந்தேன். என் மணல் வீட்டுக்கு முன்னால் அழகான ஒரு கோலமும் வரைந்திருந்தேன்.

ஒரு ஆள் வந்தான். அவன் என் மணல் வீட்டை அழித்தான். என் மணல் வீட்டுக்கு முன்னால் நான் வரைந் திருந்த கோலத்தையும் அவன் அழித்தான். அழகான என் மணல் வீட்டையும், அழகான என் கோலத்தையும் அந்த ஆள் முரட்டுத் தனமாக காலால் மிதித்து அழித்தான்.

இந்த முரடன் என்னைக் காதலித்தான்.

நானும் விழுந்து விழுந்து இந்த முரடனைக் காதலித் தேன்.

என் காமம் இந்த முரடனைக் காதலிக்கும்படி என்னைத் தூண்டியது.

நான் இந்த முரடனைக் காதலிக்கிறதுக்கு முன்னால், இவனுடைய குணாதிசங்களை ஆராய்ந்து சீர் தூக்கிப் பார்த்து தெளிவு பெறுவதற்கு என் அறிவு அன்று முதிர்ச்சி அடையாமல் இருந்தது.

இது நடுச்சாமம்.

நான் எங்கள் வீட்டில் படுத்திருக்கிறேன். எனக்கு உறக்கம் வரமாட்டங்கு.

என் காமத்தை இந்த இரவு வளர்க்கிறது. இந்த இரவு என் காமத்தைத் தூண்டி விட்டு என் காமத்தை அது மேலும் மேலும் தீவிரப்படுத்துகிறது.

வடம வண்ணக்கண் பேரி சாத்தனார்.

கதை- 5.
நற்றிணை 378.

" பனம் பழம் "

அழகான ஒரு கடல்கரை.

அந்தக் கடல்கரையில் அழகான ஒரு சோலை.

அந்தச் சோலையில் உயரமான ஒரு பனைமரம். அந்தப் பனைமரத்தில் பனம்பழம் குலை குலையாய்த் தொங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு குலையில் பனம்பழம் கனியப் பழுத் திருக்கிறது. அந்தப் பனங்குலையில் இருந்து ஒரு பனம்பழம் நெட்டு இல்லாமல் கீழே விழுகிறது.

உயரமான அந்தப் பனைமரத்திற்குப் பக்கத்தில் ஆழமான ஒரு தண்ணிக் கிடங்கு இருக்கு. அந்தக் கிடங்கில் தண்ணி நெறையா இருக்கு. அல்லி இலைகள் அந்தக் கிடங்குத் தண்ணீரை மூடிக் கொண்டிருக்கிறது. கொக்குகள் எராளம் நின்று கொண்டிருக்கின்றன அந்தக் கிடங்கில்.

உயரமான அந்தப் பனை மரத்திலிருந்து நெட்டில்லாமல் கீழே விழுந்த அந்தப் பனம்பழம் ஆழமான அந்தக் கிடங்குத் தண்ணீரில் விழுகிறது. தண்ணீரில் விழுந்த பனம்பழம் உடை கிறது. தண்ணீரை மூடிக் கொண்டிருந்த அல்லி இலைகள் நசுங்கு கின்றன. தண்ணீரில் நின்று கொண்டிருந்த கொக்குகள் பறந்து விட்டது.

மணமா மணந்து கொண்டிருந்த அந்தப் பனம்பழம் அழிக் கிடங்கில் விழுந்து அது அழி நாத்தம் நாறிக் கொண்டிருக் கிறது.

உலோச்சனார்.

கதை- 6.
நற்றிணை 372.

"நாகரிகமான வியாபாரிகளின் நாகரிகமான பேச்சு"

எங்கள் முற்றத்தில் அவ்வளவும் குருத்து மண்தான். எங்கள் முற்றத்துக்கு அந்தக் குருத்து மண் அவ்வளவு அழகாருக்கு.

எங்கள் ஊரைச் சுற்றிச் சுற்றி நாலு திசைகளிலும் பனை மரங்கள்தான். அந்தப் பனைமரங்களின் தூரில் இருந்து மண்டை வரைக்கும் அவ்வளவும் ஓலைகள்தான். பனை ஓலைகள் பனை மரங்களில் கருக்கு மட்டைகளோடு அழகாகத் தொங்கிக் கொண் டிருக்கிறது.

பனை ஓலைகளைக் கொண்டுதான் நாங்கள் கொட் டாரங்களை அடைத்து இருக்கிறோம். பனை ஓலைகளைக் கொண்டு அடைத்த எங்கள் கொட்டாரங்கள் அழகாக இருக்கிறது.

எங்கள் ஊர் கடல்கரையில் ஒரு புன்னை மரம் இருக்கிறது. அது தூர் பருத்த மரம். அந்தப் புன்னை மரத்தில் ஒரு வள்ளத்தைக் கட்டி வைத்திருக்கிறார்கள்.

கடல் அலைகள் புரண்டு புரண்டு மேலே எழும்பி எழும்பி அலைகள் கரைக்கு வந்து கொண்டிருக்கின்றன. கரைக்கு வந்ததும் கடல் அலைகள் உடைந்து சிதறுகிறது. கடல் அலைகளிலிருந்து சிதறித் தெறிக்கிற நீர்த்திவலைகள் புன்னை

மரத்தில் கட்டி வைத்திருக்கிற வள்ளத்தை நனைத்துக் கொண்டே இருக்கிறது.

எங்கள் கடல் கரையில் ஒரு உப்பளம் இருக்கிறது. அம்பாரம் அமபாரமான உப்பு, உப்பளத்தில் குமிச்சி வைச்சிருக்கு. இந்த உப்பு அம்பாரங்கள் எங்கள் ஊருக்கு ஒரு தனி அழகாருக்கு.

வெளியூர் வியாபாரிகள் உப்பு வாங்க எங்கள் ஊர் உப்பளத்திற்கு வந்திருக்கிறார்கள்.

எங்கள் ஊர் உப்பளத்தில் வெளியூர் உப்பு வியாபாரி களின் நாகரிகமான பேச்சுச் சத்தம் கேட்டுக் கொண்டிருக்கிறது. உப்பு வியாபாரிகளின் நாகரிமான பேச்சுச் சத்தம் கேட்க மகிழ்ச் சியாக இருக்கிறது.

உப்பு வியாபாரிகளைப் பார்த்துக் கொண்டிருப்பதும், உப்பு வியாபாரிகளின் மாட்டு வண்டிகளைப் பார்த்துக் கொண்டிருப்பதும் கூட மகிழ்ச்சியாக இருக்கிறது.

உப்பு மூடைகளை ஏற்றிக் கொண்டு உப்பு வண்டிகள் சாரை சாரையாகப் போகிற அழகு பார்க்க வேண்டிய ஒரு அழகு.

உப்பு வண்டிகள் ஒன்றன் பின் ஒன்றாக அவைகள் நடந்து போகிற அழகைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அது கண்கொள்ளாக் காட்சி.

உலோச்சனார்

கதை- 7.
நற்றிணை 354.

"கானல் நீர்"

ஒரு பாலைவனம்.

அந்தப் பாலைவனத்தில் ஒரு ஒத்தையடிப் பாதை.

அந்த ஒத்தையடிப் பாதையில் மனிதப் பிணங்கள் கெடக்கு.

அந்தப் பிணங்களை கழுகுகள் தின்று கொண்டிருக்கின்றன.

அந்தப் பாதையில் ஒரு நரி வருகிறது.

அந்த நரி, அதன் நிழலைப் பார்த்துக் கொண்டு, அதன் நிழலோடு அது விளையாடிக் கொண்டு வந்து கொண்டிருக் கிறது.

அந்த நரி பிணங்களைத் தின்று கொண்டிருக்கிற கழுகுகளைப் பார்க்கிறது.

அந்த நரி கழுகுகளைத் துரத்துகிறது. அந்த நரி அந்தப் பிணங்களைத் தின்கிறது.

அந்த நரி அந்தப் பிணங்களை அவக் காச்சையோடு தின்று கொண்டிருக்கிறது. எவ்வளவு பிணம் தின்னாலும் அந்த நரிக்கு செழிக்கவே இல்லை. அது பிணத்தை விழுங்கிக் கொண்டே யிருக்கிறது.

பிணம் தின்ன அந்த நரிக்கு சரியான தண்ணித் தாகம். நரி தண்ணித் தாகத்தோடு அந்தப் பாலைவனத்தில் தண் ணீரைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறது.

நரி கண்களுக்குக் கானல் நீர்தான் தெரிகிறது.

நரி, கானல் நீரைத் தண்ணீர் என்று நம்பி அது கானல் நீரிடம் போகிறது.

நரி, கானல் நீர் கிட்டப் போகப் போக கானல் நீர் விலகி விலகி வெகு தொலைவிற்கப்பால் போய்விடுகிறது.

பிணம் தின்ன நரி தண்ணித் தாகத்தைத் தீர்ப்பதற்கு அந்தப் பாலைவனத்தில் எங்குமே தண்ணீர் இல்லை.

நரி இளைப்பாறுவதற்கு ஒரு நிழலைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறது.

மதுரை மருதங் கிழார் மகனார் சொகுத்தனார்.

கதை- 8.
நற்றிணை 352.

"சந்தனம் அணிந்த மார்பு"

ஒரு வயல்.

அந்தப் பெரிய வயலில் அகலமான ஒரு வரப்பு. அகலமான அந்த வரப்பில் ஒரு மருத மரம் இருக்கிறது. அந்த மருதம் மரத்தில் ஏராளமான கிளைகள். அந்தக் கிளைகள் வளைந்து தாழ்வாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது.

அந்தப் பெரிய வயலில் இன்று அறுவடை. அறுவடைக்கு வந்த உழவர்கள் அந்தப் பெரிய வயலில் இறங்கி இருக்கிறார்கள்.

அந்தப் பெரிய வயலில் ஏகப்பட்ட பறவைகள் மேய்ந்து கொண்டிருக்கின்றன.

அந்தப் பெரிய வயலில் உழவர்கள் அந்தப் பறவைகள் கலைந்து போவதற்காக முரசு கொட்டுகிறார்கள்.

முரசுச் சத்தம் கேட்ட பறவைகள் அந்தப் பெரிய வயலை விட்டுப் பறந்து போகிறது. வயலிலிருந்து பறந்து வந்த பறவைகள் அந்தப் பெரிய மருத மரத்தின் தாழ்ந்த கிளைகளில் உட்காருகிறது. அந்தப் பெரிய மருத மரத்தின் தாழ்ந்த கிளைகள் மேலும் வளைந்து தொங்குகிறது.

பெரிய பெரிய வயல்கள் சூழ்ந்த செழிப்பான இந்தப் பெரிய நகரத்தில் ஒரு பணக்கார வீடு. அந்தப் பணக்கார வீட்டின் தலைவன் ஒரு பரத்தைப் பெண் வீட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

இன்று, அவன், அந்தப் பரத்தைப் பெண்ணிடம் இருந்து விலகி. அவன் மனைவியிடம் வந்திருக்கிறான்.

அவன் மனைவி அவனைச் சேர்க்க மாட்டங்காள்.

கணவனிடம் அவள் சொல்கிறாள்.

"நீ ஒரு பரத்தை வீட்டில் இருந்து வந்திருக்கிறாய். அந்தப் பரத்தை அவள் மார்பில் அணிந்திருந்த சந்தனம் உன் மார்பில் இருக்கிறது. உன் பூமாலையும் கசங்கி இருக்கிறது. நீ உன் மார்பை அந்தப் பரத்தைப் பெண்ணின் மார்போடு சேர்த்து அவளை அணைத்ததால் உன் மார்பை அலங்கரித்த உன் பூமாலையும் கசங்கி இருக்கிறது."

"நீ என்னிடம் வராதே."

"நீ என்னைத் தொடாதே."

"நீ அவளிடமே போ."

"நீ என்னைப் புறக்கணித்து விட்டு, ஒரு பரத்தையிடம் போனாய். நீ அவளிடமே சேர்ந்து வாழ். உன்னோடு சேர்ந்து வாழ எனக்கு விருப்பம் இல்லை."

பரணர்.

கதை- 9.
நற்றிணை 350.

"கணவனால் கைவிடப்பட்ட ஒரு பெண்"

நிலவு..
பௌர்ணமி முழு நிலா,
பால்போல் அழகாக ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.
ஊர்..
ஊரில் திருவிழா நடந்து கொண்டிருக்கிறது. திருவிழாவில் கலந்து கொண்ட மக்கள் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள்.
காடு...
இது பூக்காலம். மரங்கள் பூத்துக் குலுங்குகின்றன. பூக்களில் தேன் குடித்த வண்டுகள் ஆணும் பெண்ணும் இணை இணை யாகச் சேர்ந்து கொண்டு அவைகள் விசிலடித்துக் கொண்டும், மகிழ்ச்சியோடும், பறந்து திரிகிறது.
நான்..
நான் தனிமையில் இந்த நள்ளிரவில் கண்ணுறங்காமல் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.
உலகம்..
இந்தப் பெரிய உலகம் என்னோடு போர் தொடுக் கிறதோ.?
கலகம்..
துன்பத்தை அனுபவிக்கிற என் நெஞ்சு அந்தப் பெரிய

உலகத்தை எதிர்த்துக் கலகம் செய்யத் தயாராகிக்கொண்டு இருக்கிறதோ.?

வெள்ளி வீதியார்.

கதை- 10.
நற்றிணை 348.

"பெரிய குளம்"

ஒரு குளம்.

அது ரொம்பப் பெரிய குளம்.

அந்தப் பெரிய குளத்தில் ஒரு பெரிய வாளைமீன்.

குளத்தில் மடை திறந்ததும் அந்தப் பெரிய வாளைமீன் வாய்க்காலை அடைத்துக் கொண்டு, வாய்க்கால் தண்ணீரில் வந்து கொண்டிருக்கிறது.

நீளமான அந்தப் பெரிய வாய்க்காலில் ஒரு சிறிய முக்கு, முக்குத் திரும்பியதும் ஒரு பெரிய வயல். அந்த வயலில் வாமடை திறந்து இருக்கிறது. இந்தப் பெரிய வாளைமீன் அந்த வாமடை வழியாக அந்தப் பெரிய வயலில் நுழைகிறது. வயலில் தொழி உழவு நடந்து கொண்டிருக்கிறது. உழவு மாடுகள் பின்னத்திக் கால்களை உதறுகின்றன. சேறு தெறிக்கிறது.

உழவர்களின் முகமெல்லாம் சேறு. சேறு காய்ந்து காய்ந்து, உழவர்கள் முதுகு பூராவும் புள்ளி புள்ளியா இருக்கு.

அந்தப் பெரிய வாளைமீன் அந்தப் பெரிய வயலில் சேற்றில் படுத்துக் கொண்டு புரண்டு கொண்டும். துள்ளிக் கொண்டும் ஓடி ஓடி விளையாடிக் கொண்டிருக்கிறது.

உழவர்கள் அந்தப் பெரிய வாளை மீனை தார்க்குச்சி யால் அடித்தும் தார்முள்ளால் குத்தியும் அந்த வாளை மீனிடம் விளையாடுகிறார்கள்.

அந்தப் பெரிய வயலில் இரண்டு பெரிய வரப்புகள் ஒன்று சேர்கிற ஒரு மூலையில் அந்தப் பெரிய வாளை மீன் படுத்திருக் கிறது. அந்தப் பெரிய வாளை மீனால் அந்தப் பெரிய வரப்புகளைத் தாண்டிப் போகமுடியவில்லை.

அந்தப் பெரிய வாளை மீன் அந்தப் பெரிய வயலில் அந்த மூலையில் படுத்துக் கொண்டு, அது அங்கேயே துள்ளிக் கொண்டும், புரண்டு கொண்டும் சகதியில் விளையாடிக் கொண்டு இருக்கிறது

நக்கீரர்.

கதை- 11
நற்றிணை 340.

"ஒரு பறவை அழுது கொண்டிருக்கிறது"

ஒரு சிறிய கிராமம்.

அது ஒரு கடல் ஓரக் கிராமம்.

அந்தச் சிறிய கிராமத்தில் எப்பமும் மீன் மணம் மணந்துக் கிட்டேதான் இருக்கும்.

அந்தக் கிராமத்துக்குச் சொந்தமான ஊர்ப் பொதுச் சத்திரத்தில் உயரமான ஒரு பனை மரம் இருக்கிறது.

அந்தப் பனை மரத்தில் மண்ட குலுங்கக் குலுங்க பனை ஓலைகள் ஏராளம் தொங்கிக் கொண்டிருக்கிறது.

அந்தப் பனைமரத்தில் இரண்டு நாரைகள் ஒரு கூடு கட்டி இருக்கு.

அந்த இரண்டு நாரைகளும் விடியறதுக்கு முன்னக் கூட்டியே எந்திரிச்சிரும். இவுக எந்திரிச்சதும் ஜோடியா மீன் வேட்டைக்குப் போவாக. இரவு பொழுது அடைஞ்சதுக்குப் பெறகுதான் கூட்டுக்கு வருவாக..

பெண் நாரை தான் கூட்டுக்கு மொத மொத வரும்.

இன்றைய பகல் மறைந்து விட்டது.

இரவு வேகமாக வந்து கொண்டிருக்கிறது.

அந்தச் சிறிய கடல்கரைக் கிராமம், கச கசன்னு இருட்டா இருக்கு..

ஆண் நாரை அந்தப் பனைமரத்துக்கு வந்திருக்கு.

அந்த ஆண் நாரை அதன் சொந்தக் கூட்டில் தன் பெண் நாரையைத் தேடுகிறது.

கூட்டில் பெண் நாரை இல்லை.

பெண் நாரையைக் காணோம்ன்னதும் அந்த ஆண் நாரை சத்தம் போட்டு சத்தம் போட்டு அதன் மனைவியைக் கூப்பிடுகிறது.

அந்த இரவு பூராவும் அந்த ஆண் நாரை அழுது அழுது அதன் மனைவியைக் கூப்பிட்டுக் கொண்டேயிருந்தது.

பெண் நாரை கூட்டுக்கு வரவேயில்லை.

மதுரை ஆர்வல நாட்டு ஆலம்பேரி சாத்தனார்.

கதை- 12.
நற்றிணை 338.

"மணமா மணக்கு கறி மணம்"

ஒரு காடு.

அந்தப் பெரிய காட்டில் தினை விதைச்சிருக்கு.

அந்தப் பெரிய தினைக் காட்டில் ஒரு ஆண் பண்ணியும், ஒரு பெண் பண்ணியும் மேய்ந்து கொண்டிருக்கின்றன.

ஆண் பண்ணிக்கு இரண்டு கொம்புகள் இருக்கு. அந்தக் கொம்புகள் வெள்ளை வெளேர்னு அழகா இருக்கு. அந்த ஆண் பண்ணியின் பெதடி மயிர்கள் சிலிர்த்துக் கொண்டிருக்கின்றன.

பெண் பண்ணி மெலிஞ்சிருக்கு. அதன் பால் சுரக்கும் காம்புகள் மெலிந்து தோல்தான் இருக்கு.

ஆண் பண்ணியும் பெண் பண்ணியும் தினைக் காட்டில் வயித்துக்கு மேஞ்சதுக்குப் பிறகும் அந்தப் பண்ணிகள் தினைக் காட்டைத் தாறுமாறாத் தோண்டி தினைக் காட்டை அவைகள் அழித்துக் கொண்டிருக்கின்றன.

தினைக் காட்டுக்குச் சொந்தக் காரன் ஒரு வேடன். அந்த வேடன் ஒரு புதருக்குப் பின்னால் ஒளிஞ்சி நின்னுக்கிட்டிருக் கான். அவனிடம் ஒரு வில் இருக்கு. அவன் அந்த ஆண் பண்ணியைக் குறிவைக்கிறான். அவன் வில்லிலிருந்து புறப்பட்டு சீறிக் கொண்டு பாய்ந்து போகிறது ஒரு அம்பு. அந்த அம்பு அந்த ஆண் பண்ணியைக் குத்திக் கொல்கிறது.

ஆண் பண்ணி வேடன் தலைமேல் இருக்கு.

வேடனை எதிர்பார்த்துக் கொண்டு அவன் மனைவி

வீட்டின் முற்றத்தில் நின்று கொண்டிருக்கிறாள்.

வேடன் மனைவி அழகான பெண். அவள் முடி கரு கருன்னு கருப்பாருக்கு. அழகான அந்தப் பெண் அவளுடைய அழகான தலை முடியை வாரி அழகாகக் கொண்டை முடித்திருக் கிறாள்.

ஒரு பெரிய பண்ணியைச் சொமந்துகிட்டு வாரான் அவள் கணவன்.

கணவனிடம் இருந்து. அழகான அந்தப் பெண், பண்ணியை வாங்கிக் கொள்கிறாள்.

அவள் பண்ணியை அறுக்கிறாள். கறியைக் கூறு வைக் கிறாள். பச்சை ஓலையைப் பட்டை பிடித்து பண்ணிக் கறியைப் பொதிகிறாள்.

வேடன் மனைவி பண்ணிக் கறியை எல்லா வீட்டுக்கும் கொடுக்கிறாள்.

அந்த சிறிய கிராமத்தில் எல்லா வீடுகளிலும் பண்ணிக் கறி வெந்து கொண்டிருக்கிறது. மணமா மணக்குது கறி மணம்.

கபிலர்.

கதை-13.
நற்றிணை 336.

"எருமை"

ஒரு குளம்.

அந்தப் பெரிய குளத்தில் தண்ணி கெத்துக் கெத்துன்னு கெடக்கு.

அந்தப் பெரிய குளத்தில் நாரைகள் ஏராளமாக நின்று கொண்டிருக்கின்றன. ஒரு எருமை அந்தப் பெரிய குளத்துக்கு வந்து கொண்டிருக்கிறது. அந்த எருமை பகல் பூராவும் தொழி உழவு உழுதிருக்கிறது. அந்த எருமை உடம்பில் ஒரே சகதி.

அந்தப் பெரிய குளத்தில், அந்த எருமை அது வந்த வேகத்தில் குதிக்கிறது. அந்த எருமை தண்ணீரில் குதித்த வேகத்தில் தண்ணீரில் இருந்து பொத்தடீர்னு ஒரு சத்தம் பெலமாக் கேக்கு. அந்தப் பெரிய சத்தம் அந்தப் பெரிய குளத்தில் அலை அலையாப் பரவுகிறது.

தண்ணீரில் நின்று கொண்டிருந்த நாரைகள் அந்த மொரட்டுச் சத்தத்தைக் கேட்டதும் பயந்து போய் பறந்து போய்விட்டது.

அந்தப் பெரிய குளத்துக்குப் பக்கதில் ஒரு பெரிய மருத மரம் இருக்கிறது. அந்தப் பெரிய மருத மரத்தின் அடியில் நிழல் கொட்டிக் கெடக்கு.

அந்தப் பெரிய குளத்தில் ரொம்ப நேரமாப் படுத்திருந்த அந்த எருமை எழுந்து வெளியே வருகிறது. அது மெல்ல மெல்ல

அசைந்து அசைந்து நடந்து போய் அது அந்த மரத்தின் குளிர்ந்த நிழலில் படுக்கிறது.

பகலெல்லாம் தொழி உழவு உழுது அலுத்த அந்த எருமை, மருத மரத்தின் குளிர்ந்த நிழலில் உறங்கிக் கொண்டிருக் கிறது.

ஆலங்குடி வங்கனார்.

கதை-14.
நற்றிணை 330.

"மீன் மணம்"

ஒரு பெரிய பலா மரம்.

அது ரொம்பப் பெரிய பலா மரம்,

அந்தப் பெரிய பலா மரத்தில் நீளமான ஒரு கிளை.

நீளமான அந்தக் கிளையில் பலாப்பழங்கள் பெருசு பெருசாத் தொங்கிக் கொண்டிருக்கிறது. பழங்களின் பளுவைத் தாங்க முடியாமல் அந்தக் கிளை வளைந்து கொண்டிருக்கிறது.

நீளமான அந்தக் கிளையில் ஒரு கொக்கு உக்காந்துக் கிட்டிருக்கு. அது, தன் கால்களுக்கு அடியில் ஒரு மீனை மிதித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் கொக்கு அந்த மீனைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொத்திக் கொத்தித் தின்று கொண்டிருக்கிறது. கொக்கு மீனைக் கொத்தக் கொத்த மீன் நாத்தம் அந்தப் பலாமரம் முழுதும் மணந்து கொண்டிருக்கிறது. கொக்கு உக்காந்திருக்கிற அந்தக் கிளைக்கு நேர் எதிரில் நீளமாக இன்னொரு கிளை இருக்கு. அதில் ஒரு குரங்கு உக்காந்து கொண்டிருக்கிறது. அது அழகான ஒரு பெண் குரங்கு. இந்தப் பெண் குரங்குக்கு மீன் மணம் பிடிக்கவில்லை. ஓயாமல் தும்மிக் கொண்டிருக்கிறது அழகான அந்த இளம் பெண் குரங்கு.

மதுரை மருதன் இளநாகனார்.

கதை-15.

நற்றிணை 326.

" பீர்க்கம் பூ"

"தலைவா,"

"உன்னிடம் சொல்ல எனக்கு வெக்கமாக இருக்கிறது.."

"நீ எங்கள் தினைக் காட்டுக்கு வந்து நீ என் தோழியை சந்தோசப்படுத்தினாய்."

"என் தோழி உன் மேல் பெருங்காதல் கொண்டிருக் கிறாள்."

"என் தோழியின் கண்கள் நீலநிறத்தில் அழகாக ஒளி வீசிக்கொண்டிருந்தது."

"அழகாக நீல நிறத்தில் ஒளி வீசிக் கொண்டிருந்த என் தோழியின் கண்கள் "வாடி வதங்கிய பீர்க்கம்பூ" மாதிரி, நிறம் அழிந்து ஒளியையும் அழகையும் இழந்து விட்டன.

"தலைவா.."

"என் தோழிக்கு இதுபோல் துன்பங்கள் வராதபடி செய்."

மதுரை மருதன் இளநாகனார்.

கதை-16.

நற்றிணை 326

.

"பாவாடை"

எங்கள் ஊரில் எங்கள் தெரு ஒரு பணக்காரத் தெரு.
எங்கள் பணக்காரத் தெருவில் ஒரு இளம்பெண் நடந்து வந்து கொண்டிருக்கிறாள்.

அந்த இளம்பெண் பேரழகியாருக்காள். அந்தப் பேரழகி ரொம்ப அழகா அவளை அலங்காரம் பண்ணிருக்காள். பச்சை இலைகளில் தைத்த இலைப்பாவாடையை அவள் உடுத்தியிருக்கிறாள். அது ஒரு குட்டைப் பாவாடை. அந்தப் பேரழகி அவள் இடுப்பை நளினமாக அசைத்து ஒயிலாக நடந்து வந்து கொண்டிருக்கிறாள்.

அந்த இளம்பெண் ஒரு பரத்தை,

எங்கள் தெருவில் ஒரு பரத்தைப் பெண் நடந்து வருவதைப் பார்த்த எங்கள் தெரு மக்கள் கூச்சல் போடுகிறார்கள்.

"பரத்தை வாராள்."

"பரத்தை வாராள்."

"பெண்களே.,"

"உங்கள் கணவன்மாரை ஒளித்து வைத்துக் கொள்ளுங்கள்.."

எங்கள் பணக்காரத் தெருவில் இருந்து ஒரு பணக்கார எள வட்டத்தை தன் மாய அழகால் மயக்கி கடத்திக் கொண்டு போக

வந்திருக்கிறாள் அழகான அந்த இளம் பரத்தைப் பெண்.

எங்கள் சேரி பரத்தைப் பெண்கள் காலம் காலமாக இப்படி ஒரு வைப்பாளனை அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்வது வழக்கமானதுதான்.

அசைந்து அசைந்து வருகிற அந்த இளம் பரத்தைப் பெண்ணின் பேரழகில் சொக்கி மயங்காமல் எந்த ஆம்பளையாலும் இருக்க முடியாது.

அழகான இந்தப் பரத்தைப் பெண்ணின் குட்டப் பாவாடையைப் பிடித்துக் கொண்டு தன் கணவன் இந்தப் பரத்தையின் பின்னாலேயே போறதுக்கு எந்தப்பெண் சம்மதிப்பாள்..?

எங்கள் பணக்காரத் தெருப் பெண்கள் அவர்கள் கணவன்மாரை வீட்டுக்குள் தள்ளி கதவைப் பூட்டிக் கொண்டு அவர்கள் கணவன் மாரைப் பாதுகாத்துக் கொண்டார்கள்.

கபிலர்.

கதை-17.
நற்றிணை 320.

"கொலைவாள்"

காரி..

ஒரு மன்னன் பெயர்,

ஓரி,

இதுவும் ஒரு மன்னன் பெயர்தான். இந்த இரண்டு மன்னர்களுக்கும் போர் நடந்தது.

காரி அவனுடைய கொலை வாளால் "ஓரி" யை வெட்டிக் கொன்று விட்டான்.

வெற்றி பெற்ற மன்னன் காரி,

"காரி" அவன் கொலை வாளைக் கையில் ஏந்திக் கொண்டு "ஓரி" யின் தலை நகரத்தில் நுழைகிறான்.

"காரி" யை அந்தப் பெரிய தலைநகரத்தின் மக்கள் வரவேற்கவில்லை.

அந்தப் பெரிய தலைநகரத்தின் மக்கள் அவர்களின் பாசத்திற்குரிய மன்னனைக் கொலை செய்த "காரி" யை வெறுத்தார்கள்.

அந்த மக்கள் அவர்கள் வெறுப்பைத் தெரிவித்தார்கள். ஆவேசத்தோடு அவர்கள் முழங்கினார்கள்..

"கொலைகாரன் வருகிறான்."

"கொலைகாரன் வருகிறான்."

"ஓடுங்கள்.."

"ஒளிந்து கொள்ளுங்கள்.."

வெற்றி பெற்ற மன்னன் "காரி" அவன் கையில் கொலை வாளை ஏந்திக் கொண்டு அந்தப் பெரிய தலைநகரத்தில் நகர் வலம் வருகிறான்.

அந்த நகரத்தின் பெண்கள் தங்கள் கணவன்மாரை வீட்டுக்குள் தள்ளி கதவைப் பூட்டிக் கொண்டு ஒளிந்து கொண் டார்கள்.

வெற்றி பெற்ற மன்னன் காரியை, அந்தப் பெரிய தலை நகரத்தின் மக்கள் வரவேற்கவில்லை.

கபிலர்.

கதை 18.
நற்றிணை 320.

"ஆந்தை"

இது என் காதலியின் நகரம்.

இந்தப் பெரிய நகரத்தின் ஒரு கடைக்கோடி இது.

மக்கள் நடமாட்டம் இல்லாத ஒதுக்குப் புறமான ஒரு இடம்.

இங்கு நான்கு தெருக்கள் சந்திக்கின்றன.

தெருக்கள் அகலமாக இருக்கிறது.

தெருக்கள் நீளமாகவும் இருக்கிறது.

இந்தத் தெருவில் கடல்கரை குருத்து மணல் சொத சொதன்னு கொட்டிக் கெடக்கு.

குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருக்கிறது.

இந்தக் குளிர்ந்த காற்றுக்கு மரங்கள் பூக்களையெல்லாம் உதிர்த்தி விட்டன. பூக்கள் இல்லாத இந்த மரங்கள் மொட்டை யாவும் மூளியாகவும் நின்று கொண்டிருக்கிறது.

இது நடுச்சாமம்.

கடல் அலைகளின் மொரட்டுத் தனமான இரைச்சல் ஓய்ந்து விட்டது.

மீன்கள் உறங்குகின்றன.

ஊர் இருட்டாக இருக்கிறது.

இந்த நாற்சந்தியில் ஒரு அத்திமரம் இருக்கிறது. இந்த அத்தி மரத்தில் இரண்டு ஆந்தைகள் உக்காந்திருக்கின்றன.

இந்த ஆந்தைகள் இரண்டும் ஓயாமல் கூவிக் கொண்டிருக்கிறது. ஆந்தைகளின் கூப்பாடு பயங்கரமான ஒரு திகிலை என் நெஞ்சில் ஏற்படுத்துகிறது.

நான் இந்தப் பெரிய அத்தி மரத்தின் அடியில், இந்தக் கூகை இருட்டில் உக்காந்திருக்கிறேன். நான் என் காதலியின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டு கண் உறங்காமல் முழித்துக் கொண்டிருக்கிறேன்.

விளக்குடிச் சொகிரனார்.

கதை-19.
நற்றிணை 319.

"மூதூர்"

"அக்கா.."

"நம்ம ஊரு பழங்காலத்து ஊருக்கா.."

"நம்ம ஊருல கம்மா இருக்கு. ஆறு இருக்கு..அழகான ஒரு சோலை இருக்கு..வற்றாத ஒரு பெரிய கடலும் இருக்கிறது."

"நம்ம ஊர் ஞாழல் மரங்களில் பூத்திருக்கிற சின்னச் சின்னப் பூக்களின் நல்மணம் நம் நெஞ்சங்களைக் கொள்ளை கொள்கிறது."

"நம்ம புன்னை மரங்களில் பூத்திருக்கிற பூக்களில் தேனீக்கள் தேன் குடித்துவிட்டு அவைகள் மகிழ்ச்சியாக விசிலடித்துக் கொண்டு பறந்து திரிகின்றன.."

"நம்ம தெருக்களில் மீன்களைச் சுடுகிற புகை நம்ம ஊருக்கு மேலே வானத்தில் உயர உயர எழும்பி அழகாக மிதந்து கொண்டிருக்கிறது."

"அக்கா.."

"நம்ம ஊரில் மழை பெய்தால் நமக்கு நெல் விளைகிறது.."

"நம்ம ஊரில் மழை பெய்யாமல் வெயில் காய்ந்தால் நமக்கு உப்பு விளைகிறது."

"நம்ம ஊர்ல எல்லா வளங்களும் இருக்குக்கா.."

"நம்ம தலைவன் வருகிற அழகான பெரிய தேரின் இனிமையான ஓசையைக் கேக்குறதுக்குத்தான் நம்ம காதுகளுக்குக் கொடுத்து வைக்கவில்லை."

"அக்கா.."

"நம்ம தலைவன் தேர் வந்தால் நம்ம ஊர் இன்னும் இனிமையாக இருக்கும்..என்னக்கா.."

உலோச்சனார்

கதை-20.
நற்றிணை 311.

" விறலி "

எங்கள் நகரம் ஒரு அழகான நகரம்.

எங்கள் நகரத்தில் ஒரு பெரிய குளம் இருக்கிறது. அது ஆழமான பெரிய குளம். அந்தப் பெரிய குளத்தில் தண்ணீருக்கு மேல் தாமரை இலைகள் அழகாக மிதந்து கொண்டிருக்கிறது. இளம் பெண்கள் அந்தப் பெரிய குளத்தில் இறங்கிக் குடங்களில் தண்ணீர் மோந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு வாளை மீன் அவர்களுக்குப் பக்கத்தில் வந்து தண்ணீருக்கு மேலே விளை யாடிக் கொண்டிருக்கிறது. அழகான அந்த இளம் பெண்கள் பயந்து போய் சத்தம் போட்டுக் கொண்டு ஓடு கிறார்கள்.

அழகான எங்கள் பெரிய நகரத்தில் அழகான ஒரு பெரிய மாளிகை இருக்கிறது. ஒரு விறலி அந்தப் பெரிய மாளிகை முன் நின்று கொண்டிருக்கிறாள்.

அந்தப் பெரிய மாளிகையில் தலைவியும் தோழியும் இருக்கிறார்கள்.

விறலியிடம் தோழி சொல்கிறாள்.

எங்கள் தலைவனை எங்கள் தலைவியிடமிருந்து பிரித்து நீ எங்கள் தலைவனை வஞ்சகமாக அழைத்துக் கொண்டு போய்விட்டாய். நீ எங்கள் தலைவனுக்கு ஒரு நாளைக்கு ஒரு பரத்தைப் பெண்ணை, ஏற்பாடு செய்து கொடுக்கிறாய்.

நல்லா வாழ்கிற நல்ல குடும்பங்களைப் பிரித்து நல்லவர்

களுக்குக் கேடு செய்கிற கேடு கெட்ட பெண் நீ.

ஈனத் தொழில் செய்து ஈனப் பிழைப்பு பிழைக்கிற ஈனப் பிறவி நீ..

விவரம் இல்லாத ஏழைத் தாய்மார்களிடம் நீ, வஞ்சகமாகப் பேசி, இந்த ஏழைத் தாய்மார்கள் செல்லமாக வளர்த்த அவர்கள் பெண்களை ஏமாற்றி, நீ அவர்களை அழைத்துக் கொண்டு போய் விடுகிறாய்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகிற வசீகரமான உன் பேச்சில் மயங்கி அழகான அந்த ஏழைப் பெண்கள் உன்னோடு வருகிறார்கள். அந்த ஏழைப் பெண்களை அவர்கள் மீளவே முடியாதபடி அவர்களை நீ விபச்சாரத்தில் தள்ளி விடுகிறாய்.

விபச்சாரத் தொழில் செய்வதில் உனக்கு வெக்கமோ நாணமோ இல்லை.

நீ எங்கள் வீட்டுக்கே வந்து எங்களிடமே சமாதானம் பேச வந்திருக்கிறாய்.

நீ எங்களிடம் எதுவும் பேச வேண்டாம்.

கிளம்பு..

போ..

வாசல் படியில் இருந்து கீழே இறங்கு..

பரணர்

கதை-21.
நற்றிணை 310.

" பச்ச மண் பானை "

ரொம்பச் சம்பாத்தியம் பண்ணணும்னு எனக்கு ஆசை. நான் வெளிநாட்டுக்குப் போகப் புறப்பட்டுக் கொண்டிருக் கிறேன். பிரயாணத்துக்கான எல்லா முன் ஏற்பாடுகளும் செஞ் சாச்சு. என் மனைவி அவளால் முடிந்த அவ்வளவு ஒத்தாசை களையும் அவள் எனக்குச் செய்தாள்.

நான் இன்னும் கொஞ்ச நேரத்தில் புறப்பட ணும்.

என் மனைவி என் முன்னால் வந்து நின்னுக்கிட்டிருக்காள். என் மனைவி அவளிடமிருந்த நகைகள் எல்லாத்தையும் காது களிலும் கழுத்திலும் அணிந்து கொண்டு அழகாருக்காள். என் மனைவி தலையில் உச்சி எடுத்துச் சீவி அழகாகக் கொண்டை முடிந்திருக்கிறாள். கண்ணுக்கு மை எழுதியிருக்கிறாள். என் மனைவியின் அழகான கண்களில் கண்ணீர் சோகத்தோடு உக்காந்துக்கிட்டிருக்கு.

என் மனைவி அவள் பாதங்கள் நோகாமலும் நிலம் நோகாமலும் அவள் பாதங்களை மெல்ல எடுத்து வைக்கிறாள். என் மனைவி மெல்ல மெல்ல வந்து என் மடியில் உட்காருகிறாள். அவள் என் மேல் சரிந்து சரிந்து என் மார்பில் படுத்துக் கொண் டாள்.

பச்ச மண்ணில் செய்த ஒரு மண்பானை. அந்தப் பானை மழையில் நனைந்து கொண்டிருக்கிறது. மழையில் நனைந்து

நனைந்து இந்த மண்பானை கரைந்து கொண்டிருக்கிறது. அந்தப் பச்ச மண்பானை கரைந்து கரைந்து மழைத் தண்ணீரில் அது இரண்டறக் கலந்து விட்டது. என் மனைவி என் பிரயாணத்த நிப்பாட்டிட்டாள்.

எயினந்தை மகன் இளங்கீரனார்.

கதை-22.
நற்றிணை 308.

" தட்டைக்காடு "

ஒரு தினைக்காடு.

இந்தத் தினைக்காட்டுக்கு கருது பெறக்க ஆளுக்க வந்திருக்காக,

உயரமான ஒரு காவல் பரணில் இருந்து கொண்டு, இந்தப் பெரிய தினைக்காட்டைக் காவல் காத்துக் கொண்டிருக்கிற அழகான ஒரு இளம்பெண் காவல் பரணில் இருந்து இறங்கிக் கீழே வந்துகொண்டிருக்கிறாள்.

கருது பெறக்க வந்திருக் கிற ஒரு பாட்டி, அழகான அந்த இளம்பெண்ணிடம் சொல்லுதாவ..

"தாயி..நீ.. வீட்டுக்குப் போம்மா.."

பாட்டி பேச்சக் கேட்டுக்கிட்டு அழகான அந்த இளம் பெண் உடனே வீட்டுக்குப் போகவில்லை,

தினைக்காட்டில் கருது பெறக்கிய தினைப்பயிர்கள் வெறும் தட்டைகளாக, மொட்டக் கட்டையாக நின்று கொண்டிருப்பதை அழகான அந்த இளம்பெண் வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

நேற்று வரைக்கும் தினைக் கருதுகளைத் திங்க கிளிகள் படை படையாக வந்து கொண்டிருந்தது. அழகான அந்த இளம் பெண் கிளிகளை விரட்டிக் கொண்டிருந்தாள்.

அந்த இளம்பெண் இந்தத் தினைக்காட்டில் பரணில் உட்கார்ந்து கொண்டு ஒரு அரச குமாரியைப் போல் முழு சுதந்திரத்தோடு அந்தத் தினைக் காட்டை அரசாட்சி செய்து கொண்டிருந்தாள்.

அழகான இந்த இளம் அரசகுமாரியைச் சந்திக்கிறதுக்கு ஒரு அரச குமாரன் இங்கே தினமும் வந்து கொண்டிருந்தான்.

இந்த இளம் காதலர்களுக்கு இந்தத் தினைக்காடு மகிழ்ச்சியை வழங்கியது.

அழகான இந்த இளம்பெண் அவள் காதலனை இனிச் சந்திக்க முடியாது என்பதனால், வருத்தப் பட்டுக் கொண்டு தயங்கித் தயங்கி இங்கேயே நின்று கொண்டிருக்கிறாள்.

உரோடகத்துக் கந்தரத்தனார்.

கதை-23.
நற்றிணை 306.

"தங்கம் விளையும் காடு"

என் தலைவனே..

நீ என்னைச் சந்திக்கறதுக்கு இந்த இருட்டான இருட் டில் இந்த நடுராத்திரியில் வருகிறாய்..

நீ எங்கள் காட்டுப் பாதையில் நடந்து வருகிறாய்..

நீ எங்கள் காட்டாற்றில் நீந்தி வருகிறாய்..

என் தலைவனே..

இது எங்கள் காடு,

எங்கள் காடு எங்களுக்குத் தேன் தருகிறது..சந்தனம் தருகிறது..தந்தங்கள்தருகின்றன..பளிங்குக்கற்கள் தருகிறது..எங்கள் காடு எங்களுக்குத் தங்கமும் தருகிறது.

என் தலைவனே..

எங்கள் காடு உனக்குத் துன்பத்தைத்தான் தருகிறது..

எங்கள் காட்டில் யானைகளின் நடமாட்டம் இருக்கிறது. எங்கள் காட்டாற்றில் முதலைகள் வாழ்கின்றன. எங்கள் காட்டாற்றில் நீர்ச் சுழிகளும் இருக்கிறது.

எங்கள் காட்டில் வாழ்கிற வேடர்களாலும் கூட உன் உயிருக்குத் தீங்கு ஏற்படும்..எங்கள் வேடர்களிடம் இரக்கத்தை எதிர் பார்க்க முடியாது.

என் தலைவனே..

நீ என் உயிர்..நீ எனக்கு வேணும்..

நீ இல்லாமல் நான் உயிர் வாழ்வதை என்னால் நினைத்துப் பார்க்க முடியாது.

நீ உன்னைப் பாதுகாத்துக் கொள்.

நீ என்னைச் சந்திப்பதற்கு இங்கே இரவில் வருவாயானால் நான் உயிரோடு இருக்க மாட்டேன். நீ இல்லாமல் இந்தப் பனி யில் இந்தக் கடுங் குளிரில் நான் தனியாகவும் வாழ மாட்டேன்..

என் தலைவா..

என்னைத் திருமணம் செய்து கொள்.

நல்வேட்டனார்.

கதை-24.
நற்றிணை 292.

"ஆம்பள சம்பாத்தியம் பண்ண வெளிநாடு போய்த்தான் ஆகணும் "

அழாத...

பொறுத்துக்கோ..

அழுது அழுது உன் கண்ணு செவந்து போச்சு..

அழுது அழுது நீயும் இளைச்சுப் போய்ட்டா..

சம்பாத்தியம் பண்ண ஆம்பள வெளிநாடு போகத்தான் செய்யணும்..

சம்பாத்தியம் பண்ண வெளிநாடு போறவன்தான் நல்ல ஆம்பள.

நம்ம ஊர்ல இருந்துக்கிட்டுச் சம்பாத்தியம் பண்ண முடியுமா...? நம்ம ஊர்ல என்ன இருக்கு.யோசித்துப் பாரு..

உடை மரங்கள் இருக்கு..

பாறைகள் இருக்கு..

மனைவியை விட்டுப் பிரிஞ்சி போறதுக்கு உன் கணவனுக்கும் கடினமாத்தான் இருந்திருக்கும்.. மனைவியைத் தனியாக விட்டுட்டுப் போறோமே என்று அவன் மனசும் அழுது புரண்டு கதறித் துடிச்சித்தான் இருந்திருக்கும்..

ரொம்ப சம்பாத்தியம் பண்ணணும் என்பதில் ரொம்ப்ப உறுதியா இருக்கான் உன் கணவன்.

ஒரு நல்ல கணவன் அவன் மனைவிக்கு நகைகள் வாங்கிப் போட்டு மனைவியை அழகு பாக்கணும்ன்னு ஆசப்படத்தான் செய்வான்.

ஒரு நல்ல கணவன்அவன் மனைவி பணக்காரியா வாழ ணும்னுதான் ஆசைப்படுவான்.

உன் கணவன் யாருமே போகத் துணியாத இந்தப் பாலைவனத்தின் வழியாகத் துணிச்சலாய்ப் போய்ருக்கான்.

உன் கணவனின் ஞாயமான ஆசையையும் அவனுடைய மன உறுதியையும் புரிந்து கொள்.

துறைக்குடி மாவிற் பாலங்கொற்றனார்.

கதை-25.
நற்றிணை 286.

" சோத்து உருண்டை "

ஒரு மாமரம்.

அந்த மாமரத்தில் நீளமான ஒரு பெரிய கிளை.

ஒரு காக்கா அந்தப் பெரிய கிளையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறது.

அடை மழை இரவும் பகலும் விடாமல் பெய்து கொண்டிருக்கிறது. காற்று பலமாக வீசிக் கொண்டிருக்கிறது.

அந்தப் பெரிய காற்றுக்கு அந்த மாமரம் பலமாக அசைகிறது. நீளமான அந்தப் பெரிய கிளைஅசையும் போதெல்லாம் அந்தப் பெரிய கிளையில் உட்கார்ந்திருக்கிற காக்கா ஊஞ்சல் ஆடுகிற மாதிரி அசைந்து அசைந்து ஆடிக் கொண்டிருக்கிறது.

காக்கா பசியோடு உக்காந்துக்கிட்டிருக்கு. அந்தப் பசியிலும் அந்தக் காக்கா ஒரு கனவு கண்டு கொண்டிருக்கிறது.

ஒரு அரசன். அவன்படை வீரர்களுக்கு ஒரு விருந்து வைக்கிறான். அந்த அரசன் அந்த விருந்து உணவைக் காகங்களுக்கும் படைக்கிறான்.அரசன் காகங்களுக்குப் படைத்தது ஒரு சோத்து உருண்டை, அந்தப் பெரிய சோத்து உருண்டையில் அவ்வளவும் பெரிய பெரிய ஆட்டுக்கறித் துண்டுகளா இருக்கு.

"அடைமழை வெறிக்கும்..கறியும் சோறும் கலந்த ஒரு பெரிய சோத்து உருண்டை கிடைக்கும்.." என்று அந்தக் காக்கா

கனவு கண்டு கொண்டிருக்கிறது.

கழார்க்கீரன் எயிற்றியார்.
பெண் புலவர்.

கதை-26.
நற்றிணை 281.

" ஏழை "

இரவு நேரம்.
இருட்டு கடுமையாருக்கு.
குளிர்ந்த காற்று வீசிக் கொண்டி ருக்கிறது.
தாத்தா ஒரு வயல் வரப்பில் உக்காந்திருக்கார்.
தாத்தா நெருப்பு மூட்டித் தீ வளர்க்கிறார்.
நத்தைகளைச் சுடுகிறார்.
தாத்தா உயிருள்ள ஒரு சிறிய ஆமை வைத்திருக்கிறார்.
ஆமை முதுகில் சுட்ட நத்தைகளைத் தட்டித் தட்டி உடைக்கிறார்.
நத்தையில் ஆவி பறக்கிறது.
தாத்தா ருசி பார்க்கிறார்.
வயக்காட்டில் வாடைக்காற்று வீசிக் கொண்டிருக்கிறது
தாத்தா தீ வளர்க்கிறார்.
நத்தைகளைச் சுடுகிறார்.

பரணர்.

கதை-27.
நற்றிணை 280.

"குறவர் குலம் எங்கள் குலம் "

தலைவா.

எங்களை வேட்டுவ வீரரின் பெண்கள் என்று நினைக்கா தீரும்..

எங்களை வேட்டுவ வீரரின் பெண்கள் என்று சொல்ல வும் சொல்லாதீரும்..நாங்கள் வேட்டுவ வீரரின் பெண்கள் இல்லை..

கொம்பு ஊதி வேட்டை நாய்களை ஏவி காட்டு மான் களை வேட்டையாடும் வேட்டுவர் குலப் பெண்கள் இல்லை நாங்கள்..

"குறவர் குலம் எங்கள் குலம் "

"நாங்கள் குறவர் குலத்துக் கொடிச்சியர்கள்."

"எங்கள் பெரிய தினைக் காட்டில் எங்கள் காவல்காரன் ஒரு பரண் கெட்டியிருக்கிறான். அது உயரமான ஒரு காவல் பரண். எங்கள் காவல்காரன் கெட்டிய அந்தப் பரண் அவன் தங்கு வதற்காகக் கெட்டியது. ஆனால் அந்தப் பரணில் காட்டு மயில்கள் கூட்டமாக வந்து பயமில்லாமல் படுத்து உறங்கிக் கொண்டிருக் கிறது."

"அப்பேர்ப்பட்ட நல்ல ஊராக்கும் எங்கள் ஊர்.."

"அதோ அந்த மலையில் தான் இருக்கிறது எங்கள் ஊர்.."

"நீ எங்கள் ஊருக்கு வா..."

"எங்கள் வீட்டில் கள் இருக்கிறது..

"நன்றாக முற்றி நன்றாக விளைந்த நல்ல கள்."

"எங்கள் வீட்டின் முன்னால் ஒரு வேங்கை மரம் இருக்கிறது. எங்கள் வேங்கை மரத்தடியில் நாங்கள் இன்று கூத்து ஆடப் போகிறோம்.."

"நீ எங்க கூட வா.."

"முதலில் கள் குடி..எவ்வளவு கள் வேணடுமானாலும் குடி.."

"கள் குடிச்சதுக்குப் பிறகு எங்கள் குரவைக் கூத்தைப் பார்த்து ஆனந்தப்படு. அப்புறமாக நீ மகிழ்ச்சியோடு உன் ஊருக்குப் போ..."

"இப்போது எங்களோடு வா.."

தொல் கபிலர்.

கதை-28.
நற்றிணை 276.

" அயிரை மீன்"

ஒரு கடல்.

ஒரு காட்டாறு அந்தப் பெரிய கடலில் வந்து விழுந்து கெடக்கு. காட்டாத்துக்குத் தென்கரையில் ஒரு கடல் காக்கா உக்காந்துக்கிட்டுருக்கு. அது ஒரு பெண் காக்கா. அது சினை யாருக்கு. தாய்மை அந்தப் பெண் காக்காவுக்கு ஒரு தனி அழகை வழங்குகிறது.

காட்டாத்துக்கு வட கரையில் அழகான ஒரு கிடங்கு இருக்கு. கிடங்கு நெறையாத் தண்ணி கெடக்கு. காட்டு மரங் களின் உதிர்ந்த பூக்கள் கிடங்குத் தண்ணீரை மூடிக் கொண்டிருக் கிறது.

ஒரு ஆண் காக்கா அந்தத் தண்ணிக் கிடங்கின் ஒரு மூலையில் உக்காந்துக்கிட்டிருக்கு. அந்த ஆண் காக்கா கால டியில் கிண்டுகிறது, கிண்டக் கிண்ட அழி புரள்கிறது. அழி கறுப்பா யிருக்கு. அழி நாறுது.

பொறுக்க முடியாத அழி நாத்தத்தைத் பொறுத்துக் கொண்டு ஆண் காக்கா கிண்டிக்கிட்டேயிருக்கு.

சினையாக இருக்கிற மனைவிக்கு சத்தான உணவு கொடுக் கிறதுக்காக அந்த ஆண் காக்கா அயிரை மீன்களைத் தேடிக் கொண்டிருக்கிறது.

முக்கில் ஆசான் நல்வெள்ளையார்.

கதை-29.
நற்றிணை 272.

"கூற்றுவன்"

அந்த அக்கா அவிய மாட்டுத் தொழுவில் உக்காந்துக்கிட்டு அழுதுக்கிட்டுருக்காவ.

அவிய சொல்லுதாவ..

"ஒரு காளாங்கண்ணு மாதிரிக் கொழுத்த ஒரு எளவட்டம் கூட எம்மவா ஓடிப் போய்ட்டாள்.."

"எம்மவா, அந்த எளவட்டம் சொன்ன பொய் வார்த்தை களில் மயங்கி அவன நம்பி, அவன் கூப்பிட்டான்னுட்டு அவன் பெரத்தால போய்ட்டாள்."

"நீ ஒத்தீல அழுதுக்கிட்டுக்கெட.." ன்னு எம்மவா என்னை அழ வச்சிட்டுப் போய்ட்டாள்.

"எம்மவா நடவடிக்கைகள் எதையுமே தெரிஞ்சிக்கிடாத பாதவத்தியா இருந்திட்டேன்.." நான்.

"என் சொந்தக் காரவுக என் மவளத் தேடிப் போயிருக் காவ."

"எம்மவா என் சொந்தக்காரர்களிடம் அகப்பட்டு, எம்மவள என் சொந்தக்காரர்கள் பிடிச்சி இழுத்துக்கிட்டு வந்தாகள்ன்னா.."

"நான் பெத்து வளர்த்த என் செல்ல மகளின் வாடிய முகத்தையும், நான் பெத்த எம்மவா அழுகிற கண்ணையும்

பார்க்கிறதுக்கு நான் என் உசுர வச்சிக்கிட்டு இருக்கணுமா..?"

"என்னை ஒரு பெரிய கறுப்புத் தாழிக்குள் வைத்துப் புதைக்கும்படி என் உயிரைக் கொண்டு போகாத கூற்று, அதன் வலிமையை இழந்து, அது செத்துத் தொலையணும்..."

"எம்மவா இல்லாத வீட்டில் எப்படி நான் உயிரோடு இருப்பேன்.." ?

கயமனார்.

கதை-30.
நற்றிணை 271.

"பெண்களை அவமானப் படுத்திய ஒரு அரசன்"

தமிழ்நாட்டில் இரண்டு அரசர்கள் இருந்தார்கள்.

ஒரு அரசன் பெயர் நன்னன்,

இன்னொரு அரசன் பெயர் பிண்டன்.

ஒரு நாள் அந்த இரண்டு அரசர்களுக்கும் போர் நடந்தது.போர் முனையில் பிண்டனுடைய படை தோற்று விட்டது. பிண்டன் தப்பி ஓடிவிட்டான்.

பிண்டனுக்கு ஏகப்பட்ட மனைவிமார்கள்.

பிண்டனிடம் ஒரு பட்டத்து யானையும் இருந்தது.

வெற்றி பெற்ற அரசன் நன்னன், பிண்டனுடைய அரண்மனைக்குள் நுழைந்தான். அங்கிருந்த பிண்டனின் மனைவி மார்களை வெளியே இழுத்துக் கொண்டு வந்தான். அந்தப் பெண்களின் தலையை மொட்டையடித்தான். அந்தப் பெண்களின் தலை முடியை ஒன்று சேர்த்து அதைக் கயிறாகத் திரித்தான், அந்தக் கயிற்றைக் கொண்டு பிண்டனின் பட்டத்து யானையை கெட்டிப் போட்டான்.

தமிழ் மன்னன் நன்னன் பெண்களை அவமானப் படுத்தியவன்.

பரணர்.

கதை-31.
நற்றிணை 270.

"மான்"

ஒரு மான், அது ஆண் மான், அந்த ஆண் மானுக்கு வயதாகி விட்டது.

அந்த ஆண் மானுக்கு அழகான இரண்டு கொம்புகள் இருந்தது. அந்த ஆண் மானுக்கு வயதாகி விட்டதால் அழகான அதன் இரண்டு கொம்புகளும் உதிர்ந்து விட்டன.

அந்த ஆண் மானுக்குக் கொம்புகள் உதிர்ந்து தலை மொட்டையாகி விட்டாலும் அழகான அதன் நிறமும் அழகான அதன் புள்ளிகளும்அழகழகான அதன், கோடுகளும், அந்த ஆண் மான் இப்போதும் பேரழகோடுதான் இருக்கிறது.

அந்த ஆண் மான் ஒரு பொட்டல் காட்டில் காய்ந்த புல்லை மேய்ந்து கொண்டிருக்கிறது. இரை கிடைக்காமல் அந்த ஆண் மான் மெலிந்து விட்டது.

அந்தப் பொட்டல் காட்டில் வெயில் கொளுத்திக் கொண் டிருக்கிறது. அந்த ஆண் மானால் கொளுத்துகிற வெயிலைத் தாக்குப் பிடிக்க முடியவில்லை.

வயதான அந்த ஆண்மான் தண்ணீர் வற்றிய ஒரு குளத்தில் சேற்றில் படுத்துப் புரண்டு கொண்டிருக்கிறது.

பரணர்.

கதை-32.
நற்றிணை 265.

" மலைக்காற்று "

மலை அடிவாரம்.

மூங்கில் புதர்கள் நிறைந்த காடு.

சாயங்கால நேரம்,

மேய்ச்சலுக்குப் போன பசுக்கள் வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கின்றன, பசுக்களின் மணி ஓசை கேட்கிறது.

என் காதலியை அழைத் துக்கொண்டு நான் என் ஊருக்குப் போய்க்கொண்டிருக்கிறேன்.

மலைக் காற்று என் காதலியின் கூந்தலை வருடி விடு கிறது. அந்த மலைக்காற்று என் காதலியின் கூந்தலை அவள் தலைக்கு மேலே அலை அலையாக உயர்த்திப் பிடித்துக் கொண்டிருக் கிறது.

என் நெஞ்சில் நிரம்பித் தளும்புகிற காதலோடு நான் என் காதலியைப் பார்க்கிறேன்.

தோகை விரித்து ஆடுகிற ஒரு மயிலின் பேரழகோடு என் காதலி எனக்குக் காட்சி தருகிறாள்.

நாங்கள் என் சொந்த ஊருக்குக் கிட்ட வந்து விட்டோம்.

என் வாழ்க்கையில் இன்று நான் மகிழ்சியின் உச்சாணியில் இருக்கிறேன்.

என் காதலியிடம் நான் சொல்லுகிறேன்..

"அதோ தெரியுது பார்..அது நம்ம ஊரு.."

"நம்ம ஊரு சின்ன ஊரு..நம்ம ஊரு நல்ல ஊரு.."

என் காதலியின் அழகான கூந்தலை அவள் தலைக்கு மேலே அழகாக உயர்த்திப் பிடித்துக் கொண்டிருக்கிறது மலைக் காற்று.

ஆலூர்க்காவிதி மா தேவனார்.

கதை-33.
நற்றிணை 264.

" சினை "

ஒரு பெரிய வயல்.

அந்த வயலில் ஒரு நாரை நின்று கொண்டிருக்கிறது. அது ஒரு பெண் நாரை, அந்தப் பெண் நாரை சினையாருக்கு. அந்தப் பெண் நாரைக்கு இது தலைச்சன் சூல்.

இந்தப் பெண் நாரை தினமும் அந்த மருத நிலத்தில் இருந்து நெய்தல் நிலத்துக்கு மீன் வேட்டைக்காகக் கணவனோடு அது கடலுக்குப் பறந்து போகும்.

இண்ணக்கி இந்தப் பெண் நாரை மீன் வேட்டைக்காக அது கடலுக்குப் போகவில்லை. வயிற்றில் கருவைச் சுமந்து கொண்டு அந்தப் பெண் நாரையால் அவ்வளவு தூரம் கடலுக்குப் பறந்து போக முடியவில்லை.

அந்தப் பெண் நாரை அந்தப் பெரிய வயலில் குனிந்த தலை நிமிராமல் கவனமாக அது இரை தேடிக் கொண்டிருக்கிறது. அந்தப் பெண் நாரைக்கு அந்தப் பெரிய வயலில் இரை கெடைக்கல. அது பசியோடு இருக்கிறது.

மீன் வேட்டைக்காகக் கடலுக்குப் போன ஆண் நாரை இப்போதுதான் வந்திருக்கிறது.

அந்த ஆண் நாரை தன் மனைவியின் அழகான வாயில் மீன் இரையை ஊட்டிக் கொண்டிருக்கிறது.

இள வெயினனார். கதை-34.
நற்றிணை 263.

" ஒரு பெரிய பாம்புக்கு ஒரு பெரிய யானை இரை "

ஒரு மலை.

அது உயரமான மலை,

உயரமான அந்த மலைக்கு மேலே மழை மேகங்கள் வந்து வந்து குவிந்து கொண்டு இருக்கின்றன.

அது ஒரு இரவு நேரம்.

சரியான இருட்டு.

மின்னல்கள் மின்னுகின்றன.

இடி முழங்குகிறது.

அது நடுச்சாமம். அந்த நடுச் சாமத்தில் மழை கொட்டு கொட்டுன்னு கொட்டித் தீர்த்து விட்டது.

அந்த மலையில் வைரம் பாய்ந்த ஒரு மரம்.

அந்த மரத்தில் ஒரு பெரிய பாம்பு படுத்திருக்கிறது. அந்த பாம்பின் வாயில் ஒரு பெரிய ஆண் யானை இருக்கிறது.

அந்தப் பெரிய பாம்பு அந்தப் பெரிய ஆண் யானையை வைரம் பாய்ந்த அந்த மரத்தோடு சேர்த்து சுத்திச் சுத்திக் கட்டி யிருக்கிறது. உயரமான அந்த மலையில் மின்னல்கள் மின்னிக் கொண்டிருக்கின்றன.

சேந்தம் பூதனார்.

கதை-35.

நற்றிணை 263.

" சீர்வரிசை "

தலைவர் வீட்டுக்கு, வெளியூரிலிருந்து, விருந்தாளுக்க வந்திருக்காக.

அவுக, தலைவர் மகளைப் பெண் கேட்டு வந்திருக்காக.

தலைவர் மகளைப் பெண் கேட்டு வந்திருக்கிற அந்த வெளியூர்க்காரவுக எல்லாரும் வயசானவுக. அவுக, அவர்களால் சுமக்க முடிஞ்ச அளவுக்குப் பரிசு பொருட்களை தலையில் சுமந்து கொண்டாந்திருக்காக. மாப்பிள்ளைப் பையனும் வந்துருக்கான்.

தலைவர் குடும்பம் பரம்பரை, பரம்பரையா, பணக்காரக் குடும்பம்.

தலைவர் மகா அழகா இருப்பாள். இந்தச் சம்பந்தத்தில், தலைவர் மகன்களுக்கும், தலைவருக்கும் விருப்பம் இல்லை.

இந்த மாப்பிள்ளைக்குத்தான் வாக்கப்படுவேன் என்று தலைவர் மகா பிடிவாதமாக இருக்கிறாள். மகளுக்கு ஆதரவாக தலைவர் மனைவி கணவனிடம் பேசுதாவ.

நீங்களும், உங்க குடும்பமும் ஒசத்திதான்..இல்லேங்கல.. நம்ம மகள்அழகேந்திரிதான். இல்லேன்னு சொல்லல. உங்க குடும்பப் பெருமைக்கும் நம்ம மகள் அழகுக்கும்..இந்தப் பெரியவுக கொண்டு வந்திருக்கிற இந்தப் பரிசுப் பொருள்கள் ஈடாகாதுதான்.

நம்ம மகள பெண் கேட்டு வந்திருக்கிற இந்தப் பெரியவுக,

நம்மள மதிச்சி, நம்மள நம்பி, நம்ம வீடு தேடி சம்பந்தம் பேச வந்திருக்காக.

வயசான இந்தப் பெரியவுக நமக்குக் கொண்டு வந்திருக்கிற, இந்தப் பரிசுப் பொருட்களை எடை போட்டுப் பாக்காதீக...

இந்தப் பரிசுப் பொருட்களுக்கு பண மதிப்பும் போடாதீக.

ஒங்க குடும்பப் பெருமைக்கும். நம்ம மகா முலை அழகுக்கும் சோழ மன்னன் தலைநகர் உறந்தை கூட ஈடாகாது. சேர மன்னன் தலைநகர் வஞ்சியும் கூட ஈடாகாது.

ஒங்க குடும்பப் பெருமைக்கும். நம்ம மகா அழகுக்கும் பெரிய பெரிய அந்த இரண்டு நகரங்களும் சேர்ந்தால் கூட ஈடாகாது.

சான்றோர்கள் நமக்குக் கொண்டு வந்திருக்கிற இந்தப் பரிசுப் பொருள் கொஞ்சமாக இருந்தாலும் நாம் இதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வோம்..

சான்றோர்கள் அழைத்து வந்திருக்கிற இந்தத் தம்பிக்கு நாம் நம்ம மகளத் திருமணம் செய்து கொடுப்போம்.

பாடியவர் பெயர் இல்லை.

கதை-36.
நற்றிணை 234.

"பயம் அறியாத காதலர்கள்"

ஒரு காடு. அந்தப் பெரிய காட்டில் உயரமான ஒரு மலை. அந்த மலையின் உச்சியில் இருந்து பாதாளம் வரைக்கும் இரண்டாக வெடித்து மலை இரண்டாகப் பிளந்திருக்கிறது, உயரமான அந்த மலை வாயைப் பிளந்து கொண்டு, வாயைப் பிளந்த மேனிக்கு நின்று கொண்டிருக்கிறது.

அந்தப் பெரிய காட்டில் கோங்கு மரங்கள் நெருக்க மாகவும், அடர்ந்தும் இருக்கின்றன. கோங்கு மரங்கள் பூத்துப் பேரழகோடு காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

அந்தப் பெரிய காட்டில் ஒரு பெரிய ஆண் யானை ஒரு பெரிய ஆண் புலியோடு சண்டை போட்டுக் கொண்டிருக்கிறது.

அந்தப் பெரிய ஆண் யானை அந்தப் பெரிய ஆண் புலியைக் குத்திக் கொன்று விட்டது. அந்தப் பெரிய ஆண் யானையின் கூர்மையான தந்தந்தங்களில் இருந்து ரத்தம் வடிந்து கொண்டிருக்கிறது.

அந்தப் பெரிய ஆண் யானைக்குக் கோவம் இன்னும் அடங்கவில்லை. அது ஒரு பொட்டல் தரையில் நின்று கொண்டிருந்த ஒரு பெரிய வேங்கை மரத்தை ஒடித்துக் கீழே சாய்க்கிறது. அந்த வேங்கை மரத்தில் பூ வா இருக்கு, அந்தப் பூக்களில் தேனீக்கள் தேன் குடித்துக் கொண்டிருக்கிறது.

அந்தப் பெரிய ஆண் யானையின் மனைவியும் குட்டியும். அந்தப் பெரிய ஆண் யானையிடம் வந்திருக்கிறது.

அந்தப் பெரிய ஆண் யானை அதன் இளம் மனைவியையும் குட்டியையும். பாசத்தோடு அணைத்துக் கொள்கிறது.

அந்தப் பெரிய ஆண் யானை கீழே சாய்ந்து கிடக்கிற வேங்கை மரத்தின் பூக்களில் தேன் குடித்துக் கொண்டிருக்கிற தேனீக்களைத் துரத்துகிறது. அந்த வேங்கை மரத்தின் கொழுந்து இலைகளையும் பூக்களையும் பறித்துப் பறித்துக் குட்டிக்கும் மனைவிக்கும் கொடுத்துக் கொண்டேயிருக்கிறது.

ஆண் யானையும் ஆண் புலியும் கொடூரமாகச் சண்டை போடுகிற பயங்கரமான காடு அது, பயமறியாத ஒரு இளைஞன் அழகான அவன் காதலியை அழைத்துக் கொண்டு இந்தக் காட்டுப் பாதையில் வருகிறான். அவர்கள் இரவும் பகலும் அந்தக் காட்டுப் பாதையில் மகிழ்ச்சியோடு நடந்து போய்க் கொண்டிருக் கிறார்கள்.

பாலை பாடிய பெருங்கடுங்கோ.

கதை-37.
நற்றிணை 202.

"பாணன்"

எங்கள் தெருவில் ஒரு தாத்தா வந்து கொண்டிருக்கிறார். அவர் நொச்சி மாலை அணிந்திருக்கிறார். அவர் திருவிழாச் செய்திகளைச் சொல்லிக் கொண்டு வருகிறார்.

ஒரு பெண், தாத்தாவை வழி மறிக்கிறாள்.

அந்தப் பெண் தாத்தாட்டச் சொல்லுகிறாள்..

தாத்தா..

நம்ம ஊரில் ஒரு பாணன் இருக்கிறான். இவன் யாழ் இசைப்பதில் பெரிய ஞானி. சொந்தமாகப் பாட்டுக் கட்டிப் பாடுவதிலும் இவன் நிபுணன். புழுகுவதில் இந்தப் பாணன் கைதேர்ந்தவன்.

தாத்தா..

இந்தப் பாணன் நம்ம ஊர் ஏழைப் பெண்களிடமும், அவர்களைப் பெத்து வளர்த்த ஏழைத் தாய்மார்களிடமும். கபடமாகப் பேசி நம்மூர் ஏழைப் பெண்களை இந்தப் பாணன் அழைத்துக் கொண்டு போய் விடுகிறான். நம்மூர் ஏழை இளம்பெண்களை இந்தப் பாணன் விபச்சாரிகளிடம் விற்று விடுகிறான்.

தாத்தா..

நீங்கள் நம்மூர் சேரிக்குப் போகணும். நீங்கள் நம்மூர் சேரியிலுள்ள இளம் பெண்களிடமும், அவர்களைப் பெத்து

வளர்த்த ஏழைத் தாய்மார்களிடமும் சொல்லணும்..

"பாணன் ஒரு ஏமாற்றுக்காரன்..பாணனை நீங்கள் நம்பாதீர்கள்.. பாணனிடமிருந்து நீங்கள் விலகியே இருங்கள்.. பாணனிடமிருந்து நீங்கள் உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.." என்று, நீங்கள் அவர்களிடம் தெளிவாக எடுத்துச் சொல்லுங்கள் தாத்தா.

நம்மூர் அழகான இளம் ஏழைப் பெண்கள் பாணனிடம் சிக்கிச் சீரழிவதை நீங்கள் தடுத்து நிறுத்துங்கள் தாத்தா..

கூடலூர் பல்கண்ணனார்.

கதை-38.
நற்றிணை 200.

" அழகேந்திரி "

"தம்பி."

"ஒன்னய பார்க்கும் போது முருகக் கடவுளை நேரில் கண்டது மாதிரி இருக்கு. உன் மனைவியைப் பார்கும் போது என் மகளைப் பார்த்த மாதிரியே இருக்கு..அச்சு அசலா நான் பெத்து வளர்த்த மகா மாதிரியே இருக்காள் உன் மனைவி, உன் மனைவியைப் பார்த்ததும். என் மகளையே பார்த்த மாதிரி என் கண்களில் கண்ணீராப் பெருகுது.."

"என் மகா நேத்து இந்த வழியாத்தான் போனா..எம் மகா போன வழியாத்தான் நீ வந்திருக்கா..நீ வந்த வழியில் என் மகளைக் கண்டியா தம்பி.."

"எம் மகா போன இந்தப் பாதையில் எல்லோராலும் போயிர முடியாது.."

"யா " மரங்கள் ஒயரமா வளர்ந்திருக்கும், ஓமை மரங்கள் படர்ந்து விரிந்திருக்கும். மரங்கள் அடர்ந்த இந்தக் காட்டுப் பாதையில் பயமில்லாமல் போயிருக்கா எம் மகா.."

எம் மகா அழகேந்திரி. அவள் தேமல் கூட அவளுக்கு அழகாத்தான் இருக்கும். எம் மகா வண்டி வண்டியா நகைகள் அணிய ஆசப்பட மாட்டாள். கைக்கு ஒரு வளையல் மட்டும் போட்டுருப்பாள். அவள் தலைமுடி அவள் முழங்காலுக்குக் கீழ தொங்கும். தல நெறய்யா பூ வச்சிருப்பாள்,

"எம் மகா ஒரு வாலிபன் கூட ஓடிப் போய்ட்டா தம்பி.."

"தம்பி.."

"அவள் அப்பா ஒரு பெரிய வில்லாளி, அவர் வில்லும் அம்புமாத்தான் இருப்பார். அவருடைய வலிமையான கைகள் அவர் முழங்கால்களைத் தொட்டுக்கிட்டிருக்கும். அவர் பெதடியும் அவர் தாடியும், அவர் மீசையும் கரு கருன்னு கருப்பா அடர்த்தியா இன்னைக்கும் இளமையோட இருக்கு. வாய்க்கு ருசியா நல்ல கள்ளும், வாய்க்கு ருசியா நல்ல உணவும் சாப்பிடுகிற அவள் அப்பா ஒரு பெரிய வள்ளல். அவர் வாரிக் கொடுத்த வைகளை இவ்வளவுதான்னு அளந்து சொல்லிற முடியாது.."

"அவளப் பெத்து வளர்த்த தாய் நான்."

"ஒரு பெண்ணைப் பெத்த ஒரு தாயின் துயரத்தை நீங்கள் ரெண்டு பேரும் பாத்துக்கிட்டிருக்கீங்க.."

"தம்பி.."

"எம் மகா போன வழியே நீ வந்திருக்கா.."

"தம்பி.."

"எம் மகள வழியில் நீ பார்த்திருந்தா எம் மகா உன்னி டம் என்ன பேசினாள் என்பதை என்னிடம் விலாவாரியாகச் சொல்.."

"எனக்கு அது ஆறுதலாக இருக்கும்.."

கயமனார்.

கதை-39.
நற்றிணை 198.

"பச்சோந்தி"

ஒரு பாலைவனம்,

அந்தப் பாலைவனத்தில் வெயில் சுட்டுப் பொசுக்கிக் கொண்டு இருக்கிறது. அனல் மிதக்கிறது.

அந்தப் பாலைவனத்தில் ஒரு "யா" மரம் உயரமாக வளர்ந்திருக்கிறது. அந்த யா மரத்தில் அடித்தூரில் ஒரு பச்சோந்தி உக்காந்துக்கிட்டிருக்கு. அது ஆண் பச்சோந்தி. அதுக்கு வயசாய்ட்டு. வயதான அந்தப் பச்சோந்தியால் அந்த "யா" மரத்தில் ஏற முடியல. அது உக்காந்த இடத்திலேயே உக்காந்து கொண்டு அது அடிக்கடி நிறம் மாறிக் கொண்டிருக்கிறது.

அந்தப் பாலைவனத்தில் நடந்து வந்த பாணர்கள் களைப் புத் தெரியாமல் இருப்பதற்காக வீணையை வாசித்துக் கொண்டு போகிறார்கள். பாணர்களின் வீணையில் இருந்து புறப்பட்டு வருகிற நாதம் அந்தப் பெரிய பாலைவனத்தை இசையால் நிரப்பிக் கொண்டிருக்கிறது.

வெயிலைத் தாக்குப் பிடிக்க முடியாமல் மிகவும் களைப் படைந்திருந்த வயதான அந்தப் பச்சோந்தி பாணர்களின் வீணை யில் இருந்து புறப்பட்டு வருகிற இசை நாதத்தை கேட்டதும், அது வருத்தம் எல்லாம் நீங்கி உயரமான அந்த யா மரத்தில் அது மேலே மேலே ஏறிப் போய்க் கொண்டிருக்கிறது.

பாணர்களின் வீணையிலிருந்து புறப்பட்டு வருகிற நாதம், அந்தப் பெரிய பாலை வனத்தை இசையால் நிரப்பிக் கொண் டிருக்கிறது.

அறுவை வாணிகன் இளவேட்டனார்.

கதை-40.
நற்றிணை 186

" ஊற்று "

ஒரு பாலைவனம்.

அந்தப் பாலைவனத்தில் வெயில் கடுமையா இருக்கு.

அந்தப் பாலைவனத்தில் ஒரு சிறிய கல் ஊற்று இருக் கிறது.

அந்தச் சிறிய கல் ஊற்றில் கொஞ்சங்காணு தண்ணி கெடக்கு.

ஒரு ஆண் யானை அந்தக் கல் ஊற்றுக்கு வேகமாக ஓடி ஓடி வந்து கொண்டிருக்கிறது. அது நீளமான தன் தும்பிக்கையை அந்தச் சிறிய கல் ஊற்றுக்குள் நுழைக்கிறது. அந்தச் சிறிய கல் ஊற்றுக்குள் கெட்டிக் கிடந்த கொஞ்சங்கானு தண்ணீரை அது தன் தும்பிக்கையில் உறிஞ்சி எடுத்துக் கொள்கிறது.

அந்த ஆண் யானை அந்தத் தண்ணீரைக் கொண்டுக்கிட்டு அதன் மனைவியைத் தேடிப் போய்க்கொண்டிருக்கிறது.

அந்த ஆண் யானையின் மனைவி தண்ணித் தாகத்தில் நாக்கு வறண்டு போய் அது அந்தச் சிறிய கல் ஊற்றுக்கு வந்து கொண்டிருக்கிறது.

மனைவியை வழியில் சந்தித்த அந்த ஆண் யானை தன் தும்பிக்கையில் இருந்த கொஞ்சங்காணு தண்ணீரை மனைவிக்குக் கொடுக்கிறது.

அறுவை வாணிகன் இளவேட்டனார்.

கதை-41.
நற்றிணை 186

" ஊர்க்குருவி "

கார்த்திகை மாதம்.

மழை பாட்டம் பாட்டமாகப் பெய்து கொண்டிருக் கிறது..

எங்கள் வீட்டில் எங்கள் திருணைக்கு நேர் மேலே எங்கள் கூரையில் ஊர்க்குருவி ஒரு கூடு கட்டியிருக்கு. கூட்டுக்குள்ள இரண்டு பெரிய குஞ்சுகள் இருக்கு. கூட்டின் வாசலில் அம்மாக் குருவி உக்காந்துக்கிட்டிருக்கு.

வெளியே போன அப்பா குருவி இப்பத்தான் வந்திருக்கு. அப்பாக் குருவி உடம்பில் மொரண்டை மணம் மணந்து கொண்டிருக்கிறது.

அப்பாக் குருவி கூட்டுக்குள் வேகமாக நுழைகிறது.

அம்மாக் குருவியும், பிள்ளைக் குருவிகளும் சேர்ந்து கொண்டு அப்பாக் குருவியைக் கூட்டுக்குள் நுழைய விடாமல் கொத்தித் துரத்துகின்றன.

அப்பாக் குருவிக்கு "சின்ன வீடு" இருக்கு. இவ்வளவு நேரமும் சின்ன வீட்டில் தங்கிட்டு சொந்தக் கூட்டுக்கு இப்பத்தான் வந்திருக்கு இந்த அப்பாக் குருவி.

கணவனின் ஒழுக்கக் கேட்டை மனைவி மோப்பம் பிடித்து விட்டது.

கணவனுக்குப் பாடம் புகட்ட கணவனைக் கூட்டை விட்டு ஒதுக்கி வைத்திருக்கிறது மனைவி.

அப்பாக் குருவி அவமானப்பட்டுக்கிட்டு நொந்து போய் ஓத்தீல உக்காந்துக்கிட்டிருக்கு.

அப்பாக் குருவி மழையில் நனைந்திருக்கிறது. அப்பாக் குருவியைத் தூவானம் நனைத்துக் கொண்டிருக்கிறது. அப்பாக் குருவி குளிரில் நடுங்கிக் கொண்டிருக்கிறது.

குளிரில் நடுங்கிக் கொண்டும், தூவானத்தில் நனைந்து கொண்டும், அவமானத்தோடும் தனியாக உக்காந்திருக்கிற கணவனை அம்மாக் குருவி கருணையோடு பார்க்கிறது. கணவன் மேல் அம்மாக் குருவிக்கு இரக்கம் ஏற்படுகிறது. கணவனை தன்னிடம் வரும்படி ஈர நெஞ்சோடு அழைக்கிறது அம்மாக் குருவி

எங்கள் வீட்டில் எங்கள் திருணைக்கு நேர் மேலே எங்கள் கூரையில் ஊர்க் குருவிகள் மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டிருக்கிற சிரிப்புச் சத்தம் அழகாகக் கேட்டுக் கொண்டிருக் கிறது.

உம்பர் காட்டு இளங்கண்ணனார்.

கதை-42
நற்றிணை 181

" எறும்புக் கூடு "

ஒரு வயல்,

அது பெரிய வயல்.

அந்தப் பெரிய வயலைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் வரப்புகள் உயரமாகவும் அகலமாகவும் இருக்கிறது. அந்த வரப்புகளில் பாகல் செடிகள் கொடி வீசிப் படர்ந்திருக்கிறது. அந்தப் பாகல் இலைகளில் எறும்புகள் கூடு கெட்டியிருக்கிறது. ஒரு நாரை அந்த வயல் வரப்பில் கொடி வீசிப் படர்ந்திருக்கிற பாகல் கொடிமேல் வந்து உட்காருகிறது. அந்த நாரை அந்தப் பாகல் கொடியைக் கொத்திக் கொத்தி தூக்கித் தூக்கி உதறிக் கொண்டிருக்கிறது.

பாகல் இலைகளைச் சுருட்டிக் கூடு கட்டியிருந்த அந்த எறும்புக் கூடுகள் உடைகின்றன.

அந்த எறும்புக் கூட்டில் செக்கச் செவேர்னு செவத்த எறும்புகள் கணக்கில்லாமல் இருந்தது. அந்த எறும்புக் கூட்டில் வெள்ளை வெளேர்னு சின்னச் சின்ன முட்டைகளும் எண்ண முடியாமல் இருந்தது.

அந்தச் சிவத்த எறும்புகளும் அந்த வெள்ளை முட்டைகளும் சிதறிக் கிடக்கிறதைப் பார்க்கும் போது சிகப்பு அரிசியும்

வெள்ளை அரிசியும் சிந்திக் கிடப்பது போல் இருக்கிறது.

கயமனார்.

கதை-43.
நற்றிணை. 180.

" குட்டி மான் கண்கள் "

எங்கள் தொழுவில் ஒரு பசலைக் கொடி தன்னாக்கலேயே முளைத்து அது தன்னாக்கலேயே வளர்ந்து கொடி வீசிப் படர்ந்து கிடந்தது.

கன்று ஈன்ற ஒரு பசுமாடு, அந்தப் பசலைக் கொடியை மொட்டக் கட்டையா தின்னுட்டுது.

எங்கள் தொழுவில் எங்கள் பசு மாடு எங்கள் பசலைக் கொடியைத் தின்னதைப் பார்த்துக் கொண்டிருந்த எம் மகா அழுதுக்கிட்டு கண்ணக் கசக்கிக்கிட்டு கீழே விழுந்து புரள்கிறாள். எம் மகா வெளையாண்டுக்கிட்டிருந்த பந்தைத் தூக்கித் தூர எறிகிறாள். எம் மகா அவளிடம் இருந்த பொம்மைகளை எல்லாம் தூக்கித் தூக்கித் தூரத் தூர எறிகிறாள். எம் மகா அழுவுதாள் அழுவுதாள், அப்படி அழுவுதாள். எம் மகா அவள் அடிவயிற்றில் அவள் கையைக் கொண்டு அடிச்சிக்கிட்டுக் கூப்பாடு போட்டு அழுகிறாள்.

எம் மகா கண்கள் குட்டி மான் கண்கள் மாதிரி அழகா இருக்கும். எம் மகா அழுது அழுது அவள் கண்கள் கலங்கிச் சிவந்து அவள் கண் அழகெல்லாம் கெட்டு விட்டது.

அவளைப் பெத்த நானும் அவளை வளர்த்த அம்மையும் பால் குடிக்கச் சொல்லி அவளை தாங்கு

தாங்குன்னு தாங்கினோம்.

விம்மி விம்மி அழுதுக்கிட்டிருந்தாளே தவிர பாலைக் குடிக்க மாட்டேனுட்டாள்.

அவள் அழுகையும் அவள் ஆத்திரமும் அடங்கவேயில்லை.

நான் பெத்த எம் மவா நேத்து வரைக்கும் இப்படி குழந்தைத் தனமாத்தான் இருந்தாள்.

நான் பெத்த எம் மகா நேத்து வரைக்கும் இப்படித்தான் வெகுளித் தனமாக இருந்தாள்.

நேற்று இரவு எம் மகா யாருமே போறதுக்கு அச்சப் படுகிற ஒரு பாலைவனம் வழியாப் போயிருக்காள்.

ஒரு தாடிக்கார இளவட்டடங் கூட குறுஞ் சிரிப்பாணியாச் சிரிச்சிக்கிட்டுப் போனாளாம்.

அந்தக் கருந் தாடிக்காரப் பய புளுகின பொய்யை எல்லாம் அப்படியே நம்பிக் கிட்டு. அந்தத் தாடிக்காரன் கூட போய்ட்டா எம் மகா.

நான் பெத்த எம் மகா இவ்வளவு சின்ன வயசில் எப்படித் தான் குடும்பம் நடத்துவாளோ என்று அவளைப் பெத்த என் மனம் கலங்குகிறது.

உமட்டூர் கிழார் மகனார் பரங்கொற்றனார்.

கதை-44.
நற்றிணை. 179.

" எதிர் முழக்கம் "

ஒரு பெரிய காடு.

அந்தப் பெரிய காட்டில் ஆள் நடமாட்டம் இல்லாத ஒதுக்குப் புறமான ஒரு இடம்.

ஒதுக்குப் புறமான அந்தக் காட்டில் ஒரு கூந்தல் பனை இருக்கிறது.

கூந்தல் பனையில் ஒரு பாளை வந்திருக்கு. அந்தப் பாளையிலிருந்து வெளிவந்த குலை வாட்ட சாட்டமா செழிப்பா அழகா இருக்கு.

ஒரு ஆண் பருந்து அந்தக் கூந்தல் பனையில் நீளமான ஒரு பச்சை மட்டையில் உக்காந்துக்கிட்டிருக்கு. வெளியே போன ஆண் மருந்தின் மனைவி இன்னும் கூட்டுக்கு வல்ல. வருத்தத் தோடு உக்காந்துக்கிட்டிருக்கு அந்த ஆண் பருந்து

ஆண் பருந்து அதன் மனைவியைக் கூப்பிடுகிறது.

ஆண் பருந்து கூப்பிட்ட குரலுக்கு அந்தக் கூந்தல் பனையின் அடியில் இருந்து ஒரு எதிர் குரல் கேட்கிறது.

அந்தக் கூந்தல் பனையின் அடியில் ஒரு ஆண் புலி படுத்திருக்கிறது. பருந்து கூப்பிட்ட குரலுக்குப் பதில் குரல் கொடுத்து முழங்கியது அந்த ஆண் புலி.

பாலை பாடிய பெருங்கடுங்கோ.

கதை-45.

நற்றிணை. 174.

" தேன் கூடு "

எங்கள் கிராமம், ஒரு மலைக்கிராமம்.

எங்கள் மலையில் ஒரு வேங்கை மரம் இருக்கிறது.

அந்த வேங்கை மரம் பூத்திருக்கு.

அந்தப் பூக்களில் தேனீக்கள் நுழைந்து நுழைந்து தேன் எடுத்துக் கொண்டிருக்கிறது.

அந்த வேங்கை மரத்தில் ஒரு தேன் கூடு இருக்கு. அந்தத் தேன் கூட்டில் ஒரு புழுத்தட்டு இருக்கு. அந்தப் புழுத் தட்டில் கண்ணு கண்ணா கண்ணு கண்ணா ஏகப்பட்ட அறைகள் இருக்கு. ஏகப்பட்ட புழுக்கள் இருக்கிறது அந்த அறைகளில்.

அந்தத் தேன் கூட்டில் தேன் மெழுகு ஒரு குடம் மாதிரிப் பெருசா இருக்கு. அந்தத் தேன் குடத்தைச் சுற்றி தேனீக்கள் நெமு நெமுன்னு மொய்த்துக் கொண்டிருக்கிறது.

அந்தத் தேன் குடத்துக்கு நேர் கீழே ஒரு கல் குழி இருக் கிறது. தேன் குடத்தில் இருந்து தேன் வடிந்து வடிந்து அந்தக் கல் குழியில் தேன் நிரம்பிக் கொண்டிருக்கிறது.

எங்கள் பையன்கள் அந்தக் கல் குழியைச் சுற்றி உக்காந்திருக்கிறார்கள். அவர்கள் கல் குழியில் நிரம்பி வழிகிற தேனை அள்ளி அள்ளிக் குடிக்கிறார்கள். எங்கள் பையன்கள் அந்தக் கல் குழியில் இருந்த தேனை சுத்தமா துடைத்துத் துடைத்துக் குடித்து விட்டார்கள்.

தேனில்லாத அந்தக் கல் குழியைச் சுற்றி இப்போது குட்டிக் குரங்குகள் உக்காந்திருக்கிறது. அந்தக் குட்டிக் குரங்குகள் தேனில் லாத அந்தக் கல் குழியை வழித்து வழித்து நக்கிக் கொண்டிருக் கிறது.

மதுரை அறுவை வாணிகன். இளவேட்டனார்.

கதை-46.
நற்றிணை. 168.

" பின்னங்கால்களால் நடந்து போகிறது ஒரு நரி "

ஒரு பெரிய்ய பாலைவனம்.

அந்தப் பாலைவனத்தில் நிலம் கண்டமேனிக்கு வெடிச்சிக் கெடக்கு.

வெயில் கொல்லு கொல்லுன்னு கொன்னுக்கிட்டிருக்கு.

அந்தப் பாலைவனத்தில் ஒரு நரி பசியோடு அலைந்து கொண்டிருக்கிறது.

அந்த நரி அலைந்து அலைந்து கடைசியில் அது ஒரு இரையைக் கண்டுபிடித்திருக்கிறது.

சருகுகள் அந்த இரையை மூடிக் கெண்டிருக்கின்றன.

அது மனிதப்பய பிணங்கள்.

பிணங்கள் அழுகி நாற்றம் நாறிக் கொண்டிருக்கிறது.

அந்தப் பாலைவன மக்கள், வழிப்போக்கர்களைக் கொன்று பிணங்களை அங்கே வீசி எறிந்திருக்கிறார்கள்.

பிணங்கள் அழுகி முடை நாற்றம் நாறிக் கொண்டிருக் கிறது. அந்தப் பிணங்கள் திங்க ஆகாதுன்னுட்டு நரி அழுகிய அந்தப் பிணங்களைத் திங்கல,

நரி அங்கிருந்து தன் பின்னங்கால்களால் நடந்து திரும்பிப் போய்க் கொண்டிருக்கிறது.

பேயனார். கதை-47
நற்றிணை. 164.

" விழுதுகள் "

ஒரு பாலைவனம்.

அந்தப் பாலைவனத்தில் ஒரு பெரிய இத்தி மரம் இருக்கு. அந்த இத்தி மரத்தில் விழுதுகள் ஏராளம் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த விழுதுகள் தரையைத் தொடாமல் தொங்கிக் கொண்டிருக்கிறது.

ஒரு விடியக்கால நேரம்.

மேல் காற்று வீசிக் கொண்டிருக்கிறது.

மேல் காற்றுக்கு அந்த விழுதுகள் ஊஞ்சல் மாதிரி ஆடிக் கொண்டிருக்கிறது.

அந்தப் பெரிய இத்தி மரத்தின்அடியில் ஒரு பெண் யானை படுத்து உறங்கிக் கொண்டிருக்கிறது. அந்தப் பெரிய இத்தி மரத்தின் விழுதுகள் அந்தப் பெண் யானையைத் தாலாட்டித் தாலாட்டி உறங்க வைத்துக் கொண்டிருக்கிறது.

நெய்தல் தத்தனார்.

கதை-48.
நற்றிணை. 162.

" நிழல் "

ஒரு மலை.

அந்த மலையில் ஒரு சுனை இருக்கு. அழகான பெரிய சுனை.

அந்தச் சுனைக்குப் பக்கத்தில் ஒரு வேங்கை மரம் இருக்கு.அந்த வேங்கை மரத்தில் பூக்கள் மஞ்ச மஞ்சேர்னு கொத்துக் கொத்தாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது.

அழகான அந்த வேங்கை மரத்தில் ஏராளமாய்க் குரங்குகள் உக்காந்துக்கிட்டிருக்கு.

அந்தப் பெரிய வேங்கை மரத்தில் தாழ்ந்த ஒரு கிளை. தாழ்ந்த அந்தக் கிளை அந்தச் சுனை நேருக்கு நீண்டு வளர்ந்து இருக்கிறது. அழகான ஒரு இளம் பெண் குரங்கு அந்தக் கிளையில் உக்காந்திருக்கிறது.

அந்த வேங்கை மரத்தில் உக்காந்திருக்கிற குரங்குகள் அழகான இந்த இளம்பெண் குரங்குக்குச் சொந்தக்காரர்கள். அழகான அந்த இளம் பெண் குரங்கு தலையைக் குனிஞ்சிக் கிட்டு உக்காந்துக்கிட்டிருக்கு. சுனை நீரில் தெரிகிற அதன் நிழல் உருவத்தையே அது பார்த்துக் கொண்டிருக்கிறது. அதன் நிழல் உருவத்தைப் பார்த்துப் பார்த்து கலைந்திருக்கிற அதன் தலைமுடியை அது சரிசெய்து கொண்டிருக்கிறது.

அந்த மலையில் ஒதுக்குப் புறமான ஒரு இடம். மிளகுக் கொடிகள் அங்கே பச்சப் பசேர்னு படர்ந்து கெடக்கு.

மிளகுக் கொடிகள் படர்ந்திருக்கிற ஒதுக்குப் புறமான அந்த மலங்காட்டில் அழகான அந்த இளம் பெண் குரங்கு அதன் ஆண் நண்பனோடு சந்தோசமாக இருந்தது.

இந்தக் குட்டு சொந்தக்காரர்களுக்குத் தெரிஞ்சிரக் கூடாது என்று பயந்துக்கிட்டு அழகான அந்த இளம் பெண் குரங்கு அதன் சொந்தக் காரர்களிடம் இருந்து விலகி ஒதுங்கி உட்கார்ந்து கொண்டிருக்கிறது.

இள நாகனார்.

கதை-49.
நற்றிணை.151.

"குகை"

ஒரு மலை.

அந்த மலையில் ஒரு குகை இருக்கு.

அந்தக் குகையில் ஒரு புலி படுத்துக் கெடக்கு.

குகையில் படுத்திருக்கிற அந்த ஆண் புலியைக் கொல்லு வதற்காக ஒரு ஆண் யானை அந்தக் குகைக்குள் கோபத்தோடு போய்க் கொண்டிருக்கிறது.

அந்த ஆண் யானை அந்தப் புலியின் பிடரியில் ஏறி ஓங்கி மிதிக்கிறது. அந்தப் புலியின் நெஞ்சில் அந்த யானை தன் தந்தங்களால் ஓங்கிக் குத்துகிறது. புலியின் நெஞ்சிலிருந்து ரத்தம் கொட்டுகிறது. புலி செத்து விழுகிறது.

அந்த ஆண் யானை ஒரு அருவியில் நின்னுக்கிட்டிருக்கு. அதன் தந்தங்களில் ரத்தமா இருக்கு.

அந்த ஆண் யானை தன் தந்தங்களில் படிந்திருக்கிற ரத்தக் கறையைக் கழுவுவதற்காக அது மலைமேலிருந்து கீழே இறங்கி வந்து கொண்டிருக்கிற அந்த அருவி நீரில் குளித்துக் கொண்டிருக் கிறது.

இளநாகனார்.

கதை-50.
நற்றிணை.151.

" ஒரு சிறிய ஊரில் ஒரு பெரிய கடல் இருக்கிறது."

எங்க ஊரு சின்ன ஊரு.

எங்க ஊருல ஒரு பெரிய கடல் இருக்கிறது.

எங்க ஊருல எந்தப்பக்கம் திரும்பினாலும் மரங்களாத் தான் இருக்கும்.

எங்க ஊருல கடல் காற்று எப்பமும் வீசிக்கிட்டேருக் கும்.

எங்க ஊரு எப்பமும் குளிர்ச்சியா இருக்கும்.

எங்கள் முற்றத்தில் ஒரு பனை மரம் இருக்கிறது. காற்று, குருத் து மண்ணைக் கொண்டாந்து கொட்டிக் கொட்டிப் பனை மரம் மண்ணில் புதைந்து விட்டது.

எங்கள் பனை மரத்தில் காவோலைகளும், சார ஓலை களும், கருக்கு மட்டைகளோடு ஓலைகள் அழகாகத் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

எங்கள் பனை மரத்தில் குருத்து ஓலைகள் வானத்தை நோக்கிக் கம்பீரமாக நீட்டிக் கொண்டிருக்கிறது.

எங்கள் வீடு பணக்கார வீடு

எங்களுக்கு வருமானம் வந்துக்கிட்டேயிருக்கும்.

சொத்து எங்களுக்கு சேந்துக்கிட்டேயிருக்கும்.

எங்களுக்கு இவ்வளவு சொத்து இருக்கு என்று குத்து மதிப்பாக் கூட யாராலயும் சொல்ல முடியாது.

எங்க வீட்டுக்கு எப்பமும் விருந்தாளுக்க வந்துக்கிட்டே

யிருப்பாக. விருந்தாளுக்களோடு எங்கள் முற்றத்தில் நாங்கள் கூட்டாஞ்சோறு சாப்பிடுவோம். எங்கள் விருந்தாளுக்களோடு பேசிக்கிட்டும், சிரிச்சிக்கிட்டும், கூட்டாஞ் சோறு சாப்பிடுவது மகிழ்ச்சியா இருக்கும்.

எங்கள் சொந்தக்காரர்கள் ரொம்பப் பாசமா இருப்பாக.

எங்கள் வீட்டில் விளைந்து கிடக்கிற பண்டங்களை நாங்கள் எங்கள் விருந்தாளுக்களுக்கு பெட்டி பெட்டியா அள்ளிக் கொடுப்போம். விருந்தாளுக்களுக்கு பெட்டி பெட்டியா ரெண்டு கைட்டும் அள்ளிக் கொடுக்கும் போது ரொம்ப மகிழ்ச்சியாருக்கும்.

எனக்கு எங்க ஊர் பிடிக்கும்.

தூங்கல் ஓரியார்.

கதை-51.
நற்றிணை.135.

" வீட்டுக் காவல் "

ஒரு பெரிய நகரம்.

அந்தப் பெரிய நகரத்தில் அகலமான ஒரு பெரிய தெரு.

அந்தப் பெரிய தெருவில் ஒரு பெரிய மாளிகை.

அந்த மாளிகையில் ஒரு படுக்கை அறை. அந்தப் படுக்கை அறையில் அழகான ஒரு மெத்தைக் கட்டில். அந்த மெத்தை பூக்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. அழகான ஒரு இளம்பெண் அதில் படுத்திருக்கிறாள். அழகான அந்த இளம்பெண்ணுக்கு உறக்கம் வரவில்லை.

அவளை வீட்டுக் காவலில் வைத்திருக்கிறார்கள்.

அழகான அவள் படுக்கை அறையில் காவல்காரப் பெண்கள் படுத்திருக்கிறார்கள். காவல்காரப் பெண்களை உறங்க விடாமல் குளிர் அவர்களை நடுங்க வைத்துக் கொண்டிருக்கிறது.

மழை பெய்து கொண்டிருக்கிறது.

குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருக்கிறது.

உயரமான அந்தப் பெரிய மாளிகையின் மொட்டை மாடியில் இருந்து கீழே தண்ணீர் சத்தமாக விழுந்து கொண்டிருக்கிறது.

அந்தப் பெரிய மாளிகையின் முன் காவல் நாய்கள் படுத்திருக்கின்றன. காவல் நாய்களை உறங்க விடாமல் குளிர் நடுங்க வைத்துக் கொண்டிருக்கிறது.

நடுச்சாமம்,

ஊர் காவல்காரர் மழையில் நனைந்து கொண்டு அந்தப் பெரிய தெருவில் நடந்து வந்து கொண்டிருக்கிறார். அவர் மணியடித்துக் கொண்டு வருகிறார். மணியின் நாக்கு நீளமாக நீட்டிக் கொண்டிருக்கிறது.

காவல்காரர், உறங்கிக் கொண்டிருக்கிற மக்களை எழுப்பிச் சொல்கிறார்..

சான்றோர்களே..

உங்கள் மாளிகையின் தலைவாசல் கதவு பூட்டி இருக்கிறதா என்று சரி பார்த் துக் கொள்ளுங்கள். உங்கள் பெரிய மாளிகையின் புறவாசல் கதவையும், பூட்டிக் கொள்ளுங்கள்.நீங்கள் உங்கள் கதவுகளை நன்றாகப் பூட்டிக் கொண்டு பாதுகாப்புடன் உறங்குங்கள்.

அந்தப் பெரிய மாளிகையின், அழகான அந்த இளம் பெண், அவள் காதலனை அவளைச் சந்திக்கிறதுக்கு வரச் சொல்லியிருந்தாள்.

அவளுக்கு வீட்டுக் காவல் கடுமையாக இருக்கிறது. புறச் சூழ்நிலைகளும் அவள் காதலனைச் சந்திப்பதற்கு அவளுக்குச் சாதகமாக இல்லை. அவள் காதலனைச் சந்திக்க முடியாததால் அவளுக்குக் கோவம் வருகிறது

அவள் சொல்கிறாள்..கெடுபிடியான இந்தக் காவல் வாழ்க்கையைச் சகித்துக் கொண்டு என்னால் வாழ முடியாது. இது என் கடைசி நாள். இன்று நான் செத்து ஒழிவேன்..

பெருங்கண்ணனார்.

கதை-52.
நற்றிணை. 132.

"தாழை மரம்"

எங்கள் கிராமத்தில் ஒரு ஆறு இருக்கிறது.

அது ஒரு காட்டாறு.

அந்தக் காட்டாற்றில் தண்ணீர் உப்பாக இருக்கிறது. இந்த உப்பாற்றில் ஏகப்பட்ட இறால் மீன்கள் இருக்கு. இந்த இறால் மீன்களுக்கு நல்ல ருசி. எங்க எங்க இருந்தெல்லாமோ நாரைகள் இந்த இறால் மீன்களின் ருசிக்காக எங்கள் கிராமத்துக்கு வருகின்றன.

எங்கள் உப்பாறு நெடுகிலும் நாரைகள் நின்று கொண்டிருக்கின்றன.

எங்கள் உப்பாறு நெடுகிலும் தாழை மரங்களும் நின்று கொண்டிருக்கின்றன.

தாழை மரங்களில் ஒரு மரம் கூட நேராக இல்லை. எல்லாத் தாழை மரங்களும் கோணித்துக் கொண்டுதான் இருக் கிறது.

தாழை மரங்களில் இருநது பழுத்துக் கீழே விழுந்த மடல்களின் தழும்புகள், தாழை மரங்களில் வரந்தை வரந்தையாக இருக்கிறது.

தாழை மடல்களின் ஓரங்கள் முள்ளு முள்ளாக இருக் கிறது.

எங்கள் உப்பாற்றில் ருசியான இறால் மீன்களைப் பிடித்துப் பிடித்து வகுத்துக்கும் இரை மேய்ந்த நாரைகள் தாழை

மரத்தில் வந்து உட்காருகின்றன. தாழை மரத்தில் வந்து நாரைகள் உட்கார்ந்ததும். தாழை மரத்தின் மடல்கள் வளைகின்றன. வளைந்த அந்தத் தாழை மடல்கள் ஒடிகிறது.

நாரைகளைத் தாங்கிக் கொள்ளக் கூடிய பெலம் தாழை மரங்களுக்கு இல்லை.

நாரைகளைத் தாங்கிக் கொள்ளக் கூடிய பெலம் தாழை களுக்கு இல்லா விட்டாலும் தாழை மரங்கள்தான் நாரை களைச் சுமந்து கொண்டிருக்கிறது.

உலோச்சனார்.

கதை-53.
நற்றிணை.131.

" ஒரு யானைக்கு மனிதர்கள் மேல் கோவம் "

ஒரு காடு.

அது சரியான புழுதிக்காடு.

அந்தப் புழுதிக்காடு பூராவும் உப்பு பூத்துக் கொண்டிருக் கிறது.

அந்தப் புழுதிக்காட்டில் பனை மரங்கள் ஏராளமாருக்கு. அந்தப் பனை மரங்கள் உயரமாக வளர்ந்திருக்கின்றன.

அந்தப் புழுதிக் காட்டில் ஈச்ச மரங்களும் இருக்கு. அந்த ஈச்ச மரங்களில் காய்கள் பச்சையாருக்கு. முற்றிய ஒத காய்கள் செகப்பாருக்கு. கனிஞ்ச பழங்கள் கறுப்பாருக்கு.

பனை மரங்கள் ஓங்கி வளர்ந்திருக்கிற அந்தப் பனங் காட்டில் ஒரு பெரிய ஆண் யானை வேகமாகப் போய்க் கொண் டிருக்கிறது. அந்தப் பெரிய ஆண் யானையின் உடம்பெங்கும் புழுதி அப்பிக் கொண்டிருக்கிறது. அந்தப் பெரிய ஆண் யானைக்கு மனிதர்கள் மேல் கோவம். அந்தக் கோவக்கார யானை மனிதர்களைக் கொல்லனும்னுட்டு மனிதர்களைத் தேடிப் போய்க் கொண்டிருக்கிறது.

அது ஒரு விடியல் கால நேரம்.

இந்த விடியல் கால நேரத்தில், இந்தக் குளிர்ந்த அதி காலைப் பொழுதில், மனிதர்கள் இந்தப் பனங்காட்டுக்கு

நடந்து வருவார்கள் என்று அந்தக் கோவக்கார யானை தெரிந்து வைத்திருந்தது.

அந்தக் கோவக்கார ஆண் யானை அந்தப் பனங்காட்டில் ஒரு ஒத்தையடிப் பாதையின் குறுக்கே மனிதர்களை எதிர் பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறது.

அந்த விடியக் காலத்தில் அந்தக் குளிர்ந்த நேரத்தில் அந்தப் பனங்காட்டில் அந்த ஒத்தையடிப் பாதையில் ஒரு ஆள் கூட நடந்து வரவில்லை.

மனிதர்கள் வராததால், அந்தக் கோவக்கார ஆண் யானைக்கு தலைக்கு மேலே கோவம் ஏறுகிறது.

அந்த ஆண் யானைக்கு சிரசு முட்டக் கோவம்,

அந்தக் கோவக்கார ஆண் யானை பனை மரங்களை வளைத்தும், ஒடித்தும் கோவத்தை அது தணித்துக் கொண்டிருக் கிறது.

ஓதலாந்தையார்.

கதை-54.
நற்றிணை. 126.

" விதை "

ஒரு போர் வீரன்.

போர் முனையில் இருந்து அவன் ஊருக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கிறான்.

அழகான தேர்.

நல்ல குதிரை.

திறமையான தேர்ப்பாகன்.

அழகான அந்தக் குதிரை பிடரி மயிரைச் சிலிர்த்துக் கொண்டு, காற்றைக் கிழித்துக் கொண்டு, புயல் வேகத்தில் வந்து கொண்டிருக்கிறது.

போர் வீரன் அவனுக்கு முன்னால் பார்க்கிறான்.

போர் வீரனுக்கு முன்னால் பெரிய வரகுக் காடு இருக்கிறது. வரகுப் பயிர்களில் கதிர்கள் நன்றாக முற்றி வரகு நன்றாக விளைந்திருக்கிறது.

போர் வீரன் அவனிடமே கேட்கிறான்.

இந்த வெள்ளாமை எப்படி வந்தது..?

"விதைதான் காரணம். "

உழவர்கள் முற்றிய வரகுக் கதிர்களில் இருந்து வரகு விதையைத் தேர்ந்தெடுத்து வரகு விதையைப் பாதுகாத்து சேமித்து வைக்கிறார்கள்.

உழவர்கள் கோடையில் நிலத்தை உழுகிறார்கள்.

உழவர்கள் நிலத்தை மடக்கி மடக்கி மீண்டும் மீண்டும் உழுகிறார்கள், உழவர்கள் உழுது உழுது. தரிசு நிலத்தைப் புகுதியாக்குகிறார்கள்.

புழுதியில் விதைக்கிறார்கள்.

மழை பெய்கிறது.

வரகு முளைக்கிறது.

இரண்டு இலைகளில் முளைத்து வந்த வரகுப்பயிர் நாளும் வளர்ந்து வளர்ந்து வரகுப் பயிர்கள் கதிர் வாங்கிக் கொண்டிருக் கிறது.

போர் வீரன் வரகுக் காட்டுக்கு அப்பால் பார்க்கிறான்.

ஒரு பெரிய காட்டு மரத்தின் குளிர்ந்த நிழலில் இரண்டு மான்கள் நின்று கொண்டிருக்கின்றன. ஒரு இளம் ஆண் மானும் ஒரு இளம் பெண் மானும் ஒன்றுக்கு ஒன்று முத்தம் கொடுக்கிறது. அவைகள் ஒன்றை ஒன்று கிச்சங் காட்டு கின்றன. அவைகள் கொஞ்சி விளையாடிக் கொண்டிருக்கிறது.

இளம் மான்களின் காதல் விளையாட்டைப் பார்த்த அந்தப் போர் வீரனுக்கு அவன் மனைவி மேல் என்றுமே இல்லாத ஒரு பிரியம் ஏற்படுகிறது, போர் வீரன் தனக்குத் தானே சிரித்துக் கொள்கிறான்.

தலைவன் அவன் மனைவியைச் சந்திப்பதற்கு பேரார்வத் தோடு இருப்பதைப் புரிந்து கொண்டு தேர்ப்பாகன் குதிரையை வேகமாக ஓட்டுகிறான்.

ஒரு சிறைப் பெரியனார்.

கதை-55.
நற்றிணை. 121.

" விருந்து "

ஒரு பெரிய வீடு.

அந்த வீட்டோடு சேர்ந்து இருக்கிறது ஒரு பெரிய தொழு.

தொழுவின் ஒரு பக்கத்துத் தூண்களில் எருமைக் கன்றுக் குட்டிகளைக் கெட்டிப் போட்டிருக்கு.

தொழுவின் மறுபக்கத்துத் தூண்களில் கன்றுகளை ஈன்ற எருமை மாடுகளைக் கெட்டிப் போட்டிருக்கு.

அந்த வீட்டில் ஒரு பெண் மட்டும் இருக்கிறாள்.

அந்தப் பெண் வீட்டுக்கு இன்று விருந்தாளுக்க வந்திருக் காக. விருந்தாளுக்களோடு சேர்ந்து ஒரு பரத்தை வீட்டில் தங்கியிருந்த அவள் கணவனும் விருந்துக்கு வந்திருக்கிறான்.

அந்தப் பெண் மீன் கழுவிக் கொண்டிருக்கிறாள்.

செவளம் உடைக்கிறாள். மீன்களைச் சின்னச் சின்னத் துண்டுகளாக வெட்டுகிறாள். அந்தத் துண்டு மீன்களைக் கொழுக்கக் கொழுக்கக் கழுவுகிறாள்.

மீன்களைக் கழுவி எடுப்பதற்குள். அவள் விரல்கள் ரத்தம் கன்றிச் சிவந்து விட்டன.

அடுப்பாங்கரையில் சமையல் நடந்து கொண்டிருக்கிறது.

விறகு அடுப்பு.

புகை அவள் கண்களை நிரப்புகிறது.

அவள் சின்ன நெற்றியில் வியர்வையாருக்கு. அவள் சேலை முந்தானையால் நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொள்கிறாள்.

சமையல் வேலைகள் வேக வேகமாக முடிந்து விட்டன.

விருந்தாளுக்க பந்தியில் உக்காந்திருக்கிறார்கள். விருந் தாளுக்களுக்கு இலை போட்டு சோறு பரிமாறிக் கொண்டிருக் கிறாள் அந்தப் பெண்.

பந்தியில் அவள் கணவனும் உக்காந் திருக்கிறான்.

அந்தப் பெண் பந்தியில் உக்காந்திருக்கிற அவள் கண வனைப் பார்க்கிறாள். ஒரு சிறு புன்னகை செய்து அவள் கண வனை அவள் வரவேற்கிறாள்.

விருந்தாளுக்களோடு பந்தியில் உக்காந்திருக்கிற அவள் கணவன், அவன் மனைவியை வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

மனைவியின் அழகான மாநிறம், அழகான அவள் காதுகள். அவள் விரல்களுக்கு அழகு சேர்க்கிற கல் பதித்த மோதிரங்கள் அவளுடைய ஒளி வீசும் குறும்புப் பற்கள்,

அவள் விருந்தினர்களுக்கு இளம் புன்னகையோடு சோறு பரிமாறிக் கொண்டிருக்கிறாள். அவள் கணவன் அவன் மனைவியைக் காதலோடு பார்த்துக் கொண்டிருக்கிறான்.

விருந்து அவர்களை ஒன்று சேர்த்து வைத்தது.

மாங்குடிக் கிழார்.

கதை-56.
நற்றிணை.120.

"குயில்"

எங்கள் கிராமத்தில் ஒரு ஆறு இருக்கு. அது நல்ல தண்ணி ஆறு.

ஒரு மாமரம் அந்த ஆற்றங்கரையில் ஒரு ஓரத்தில் இருக்கு. அந்த மாமரத்தில் கிளைகள் நெருக்கமாயிருக்கு. இலைகள் எல்லாம் கொழுந்து இலைகளாருக்கு, அந்த மரம் குளிர்ச்சி யாருக்கு, அழகாருக்கு அந்தப் பெரிய மாமரம்.

அழகான அந்தப் பெரிய மாமரத்தில் இரண்டு குயில்கள் உக்காந்துக்கிட்டிருக்கு.

அவுக இரண்டு பேரும் கணவனும் மனைவியும்

அவுக இரண்டு பேரும் கன்னங்கரேர்னு கறுப்பா அழகா இருக்காக. அவுக இரண்டு பேரின் கண்களும் செக்கச் செவேர்னு செகப்பா அழகாருக்கு.

அவுக இரண்டு பேரும் கிட்டக்கிட்ட உக்காந்துக்கிட்டிருக்காக.

அவுக இரண்டு பேரும் எதிரே எதிரே நெருங்கி உக்காந்துக்கிட்டிருக்காக.

அவுக இரண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் காதலோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த இரண்டு குயில்களும் கிட்டக்கிட்ட, எதிரே எதிரே, நெருங்கி உட்கார்ந்து கொண்டு அவர்கள் ஒருத்தர் முகத்தை

ஒருத்தர் காதலோடு பார்த்துக் கொண்டும், விசிலடித்துக் கொண்டும், பாட்டுப் பாடிக் கொண்டும் மகிழ்ச்சியை அவர்கள் ஆண்டு அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தப் பெரிய மாமரத்துக்கு நேர் எதிரில் ஒரு பெரிய வீடு இருக்கு.

அந்தப் பெரிய வீட்டின் ஜன்னல் கதவு திறந்திருக்கிறது. அந்த ஜன்னல் கதவு வழியாக ஒரு இளம் பெண் அந்த இரண்டு குயில்களையும் வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக் கிறாள்.

அந்த இளம்பெண் அந்த இரண்டு காதல் குயில்களையும் பார்த்துப் பார்த்துப் பெரு மூச்சு விட்டுக் கொண்டிருக்கிறாள்.

அவள் கணவன் வெளி நாட்டில் இருக்கிறான்.

பாலைபாடிய பெருங்கடுங்கோ.

கதை-57.
நற்றிணை 118.

"மூங்கில் காடு"

ஒரு காடு.

அந்தக் காட்டில் நெறையா மூங்கில் மரங்கள் இருக்கு. அந்த மூங்கில் மரங்கள் உயரமாக வளர்ந்திருக்கின்றன.

ஒரு விடியல் காலம்.

ஒரு இளம் பெண் யானை அந்த மூங்கில் காட்டுக்கு வந்திருக்கு.

அது சினை யானை.

அந்தச் சினை யானை மூங்கில் மரங்களை வளைத்து ஒடிக் கிறது. அந்த மூங்கில் மரங்களின் கட்டிக் குருத்துக்களை ஆவலோடு அது விழுங்குகிறது. அந்தச் சினை யானைக்கு எவ்வளவு தின்னாலும் செழிக்கவே இல்லை.அது மூங்கில் மரங்களை ஒடித்து மூங்கில் குருத்துக்களைத் தின்னுக்கிட்டே இருக்கு.

இரவு,

சினை யானைக்குச் சரியான வயிற்று வலி.

சினை யானை வயிற்று வலியில் துடிக்கிறது. அதன் கண்களில் இருந்து கண்ணீர் பெருகி வழிந்து கொண்டிருக்கிறது. அந்தச் சினை யானை வயிற்று வலி தாங்க முடியாமல் அந்தக் காடே அலறுகிற மாதிரிப் பிளிறுகிறது.

அந்தச் சினை யானைக்கு ரத்தம் ரத்தமாக் கொட்டுகிறது. கட்டி கட்டியா அறுத்து அறுத்து ரத்தம் கொட்டிக் கிட்டேருக்கு. சினை யானையின் கர்ப்பம் கலைந்து விட்டது.

கந்தரத்தனார்.

கதை-58.
நற்றிணை. 116.

" இடி "

மழை கொட்டு கொட்டுன்னு கொட்டிக் கொண்டிருக்கிறது.

ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

ஆங்காரமாக முழங்கிக் கொண்டிருக்கிறது இடி.

அந்தப் பெரிய காட்டில் ஒரு ஆண் யானை மெள்ளமாய் ரொம்பப மெள்ளமாய் நடந்து போய்க் கொண்டிருக்கிறது. அந்தப் பெரிய ஆண் யானை தன் தும்பிக்கையை தனக்கு முன்னால் தரையில் ஊன்றி, அது தரையை ஆராய்ந்து பார்த்த பிறகுதான் அந்தப் பெரிய ஆண் யானை அதன் முன்னங் கால்களை மெல்ல மெல்ல எடுத்து வைக்கிறது.

மலைக்கு மேலேயிருந்து சீறிப் பாய்ந்து கொண்டு தரைக்கு வந்து கொண்டிருக்கிறது ஒரு இடி.

அந்தப் பெரிய இடி அந்தப் பெரிய ஆண் யானை மேல் விழுகிறது.

செத்து விழுகிறது யானை.

செத்துப் போன அந்தப் பெரிய ஆண் யானையை ஊர் மக்கள் அறுக்கிறார்கள்.

அவர்கள் அந்தப் பெரிய ஆண் யானையின் தந்தங்களைக் கவனமாக அறுத்து எடுக்கிறார்கள்

அந்த ஊர் மக்கள் அந்தப் பெரிய ஆண் யானையின் பெரிய உடம்பைப் பெரிய பெரிய துண்டுகளாக வெட்டுகிறார்கள்.

கறி நாத்தம் நாறிக் கொண்டிருக்கிறது.

ஊர் மக்கள் ஒருத்தரும் உறங்கவில்லை.

முழித்துக் கொண்டிருக்கிற அந்த மக்கள் தெருவில் நின்று கொண்டு சத்தம் போட்டுப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஊர் சத்தக்காடாருக்கு.

காட்டாற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடிக் கொண்டிருக்கிறது.

பலத்த மழையையும், ஆவேசமான இடி முழக்கத்தையும், முழித்துக் கொண்டிருக்கிற ஊர் மக்களையும் பொருட்படுத்தாமல் ஒரு இளைஞன் அந்தக் காட்டாற்றில் நீந்திக் கரையேறி நடந்து போய்க் கொண்டிருக்கிறான்.

பயமறியாத அந்த இளைஞன் அந்த நடு ராத்திரியில் அவன் காதலியைச் சந்திக்கிறதுக்குப் போய்க் கொண்டிருக்கிறான்.

தொல்கபிலர்.

கதை-59.
நற்றிணை.114.

" செல்லமாக வளர்ந்த மகள் "

அவுக வீடு பெரிய வீடு.

ரொம்ப வசதியானவுக அவுக,

அவுக வீட்டுக்கு முன்னால் ஒரு பந்தல் இருக்கு. அந்தப் பந்தலில் பச்சப் பசேர்னு முல்லைக் கொடிகள் எப்போதும் படர்ந்திருக்கின்றன.

அந்த வீட்டில் ஒரு பாப்பா இருக்காள்.

அந்தப் பாப்பாவ வளர்க்கிறதுக்கு மட்டும் அந்த வீட்டில் ரெண்டு பாட்டி இருக்காக.

பாப்பாவுக்குத் தங்கத் தம்ளாரில்தான் பால் கொடுப்பாக,

பாலில் தேன் கலந்து கொடுப்பாக,

பாப்பா அவள் கால்களில் தங்கச் சிலம்பு அணிந்திருக்கிறாள். அழகான அந்தத் தங்கச் சிலம்பில் அழகான முத்துப் பரல்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன.

பாப்பா பால் குடிக்கிற நேரம் இது.

பால் குடிக்கிறதுக்கு பாப்பாவ ரெண்டு பாட்டியும் கூப்பிடுதாக. பாப்பா ஒரு பெரிய தூணில் சாய்ந்து நின்று கொண்டிருக்கிறாள். எனக்குப் பால் வேண்டாம் பாட்டி..எனக்குப் பால் வேண்டாம் பாட்டி..என்று அந்தப் பாப்பா அவள் தலையைத் தலையை ஆட்டிக் கொண்டிருக்கிறாள். பாப்பாளப் பிடிக்கறதுக்கு ரெண்டு பாட்டியும் ஓடுதாக.

பாப்பா ரெண்டு பாட்டியையும் ஏச்சங் காட்டிட்டு , அந்தப் பாப்பா வீட்டுக்கு வெளிய ஓட்டமா ஓடியாந்துட்டாள்.

பாப்பாளப் பிடிக் கிறதுக்கு ரெண்டு பாட்டிமாரும், அவள் பின்னாலேயே ஓடி வாராக.

முல்லைக் கொடிகள் படர்ந்திருக்கிற அந்தப் பெரிய பந்தலைச் சுற்றிக் கொண்டு பாப்பா குறுக்கும் நெடுக்குமாக ஓடிக் கொண்டிருக்கிறாள். ரெண்டு பாட்டியாலேயும் பாப்பாளப் பிடிக்க முடியல. ரெண்டு பாட்டி மார்களும் தவிச்சிப் போய் உக்காந்துட்டாக,

பாப்பா பால் குடிக்கல.

காலம் அந்தச் சின்ன மனுஷியைப் பெரிய மனுஷியாக்கியது.

பாப்பாள வகையான ஒரு இடத்தில் கெட்டிக் கொடுத்தாக.

மகா வாக்கப்பட்டுப் போன அந்த வீடு நொடிச்சிட்டுது.

பிறந்த வீட்டில் செல்லமா வளர்ந்த மகா.

புகுந்த வீட்டில் ஒரு வேளச் சோத்துக்கு மானா மருகுதாள்.

அப்பா கொடுக்கிற எதையுமே மகா வாங்க மாண்டன்னுட்டாள். வகுத்துக்குக் குடிச்சும், வகுத்துக்குக் குடிக்காமலும் கணவன் வீட்டில் வறுமையில் வாழ்ந்தாலும் மகா கண் கலங்காமல் கணவன் வீட்டில் மகிழ்ச்சியாக இருக்கிறாள். பாப்பாளப் பார்க்கிற நமக்குத்தான், செல்லமா வளர்ந்த மகா

இப்படிக் கஷ்டப்படுதாளே என்று நம்ம கண்களில் இருந்து தான் கண்ணீர் சிந்துகிறது.

பூதனார்.

கதை-60.
நற்றிணை.110

"பசு"

ஒரு தொழு,

அது பாழடைந்த தொழு.

அந்தத் தொழு, மழையில் நனைந்து சதசதன்னு சேறும் சகதியுமா கெடக்கு.

அந்தத் தொழுவில் அந்தச் சேற்றுக்குள்ள ஒரு பசு நின்று கொண்டிருக்கிறது.

அந்தப் பசு மாட்டின் தலைக்கயிற்றை பாழடைந்த அந்தத் தொழுவின் ஒரு கைமரத்தில் கெட்டியிருக்கு.

அந்தப் பசு மாட்டால் படுக்க முடியல.

அந்தப் பசு மாட்டால் நின்று கொண்டிருக்கவும் முடியல.

இரவு நேரம்.

இருட்டாருக்கு.

குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருக்கிறது.

அந்தப் பசுமாடு பாழடைந்த அந்தத் தொழுவில் அந்தச் சகதிக்குள் நிக்கிறதுக்கு முடியாமலும், படுக்கிறதுக்கு முடியாமலும், நின்ன இடத்திலேயே நின்று கொண்டு அந்தப் பசு சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறது.

அந்தப் பசுவின் துயரத்தைச் சொல்ல வார்த்தைகள் இல்லை.

மீளிப் பெரும்பதுமனார்.

கதை-61.
நற்றிணை. 109

"ஒரு விவசாயக் கிராமம்."

அது ஒரு மலைக் கிராமம்.

அந்த மலைக்கிராமம் முழுக்க முழுக்க ஒரு விவசாயக் கிராமம்.

அந்த விவசாய மக்கள் காடுகளில் தினை விதைத்திருக் கிறார்கள்.

ஒரு யானை அந்தத் தினைக் காட்டில் நுழைந்திருக்கிறது.

அந்த ஆண் யானை தினைப் பயிர்களைச் சகட்டு மேனிக்கு வளைத்துப் பிடித்துத் தின்கிறது. அந்த ஆண் யானை அந்தத் தினைப் பயிர்களை சகட்டு மேனிக்கு மிதித்து நாசம் பண்ணிக் கொண்டிருக் கிறது.

ஒரு ஆண் யானை தங்கள் தினைக் காட்டில் நுழைந்திருக் கிறது என்கிற செய்தி அந்தச் சிறிய கிராமத்தில் வேகமாகப் பரவு கிறது.

அந்தக் கிராம மக்கள் ஆண்களும் பெண்களும் வேகமாக ஓடி ஓடி வந்து ஊர் மந்தையில் கூடுகிறார்கள். அந்த மலைக் கிராம மக்கள் அணிவகுத்து நிற்கிறார்கள்.

வில்லாளிகள்.

கவண் எறிகிறவர்கள்..

கல் எறிகிறவர்கள்..

அடித் தொண்டையில் இருந்து குரல் கொடுப்பவர்கள்..

பெல சாலிகள் தலைமை தாங்குகிறார்கள்.

தலைவர்களைப் பின் தொடர்ந்து போகிறார்கள் அந்த விவசாய மக்கள், முன்னே முன்னே போய்க் கொண்டிருக் கிறார்கள். அவர்கள் அந்த ஆண் யானையைத் துரத்திக் கொண்டு முன்னேறுகிறார்கள்.

தன்னைத் துரத்திக் கொண்டு வருகிற அம்புகளுக்கும், கற்களுக்கும், விவசாய மக்களின் பயஙகரமான முழக்கத் துக்கும் பயந்து கொண்டு அந்த ஆண் யானை அந்தத் தினைக் காட்டில் இருந்து தலைதெறிக்க ஓடுகிறது.

இளவேட்டனார்.

கதை-62.
நற்றிணை.108

" ஒரு மரம் அம்மணமாக நின்று கொண்டிருக்கிறது. "

ஒரு காடு.

அந்தக் காட்டில் ஒரு பெரிய வாகை மரம்இருக்கு.

ஒரு யானை அந்த வாகை மரத்துக்குப் பக்கத்தில் வந்து நின்னுக்கிட்டிருக்கு.

அது ஒரு பெண் யானை. அந்தப் பெண் யானைக்கு கால்கள் பெருசு பெருசாருக்கு. அந்தப் பெண் யானைக்கு அதன் பெரிய கால்களில் நகங்களும் பெருசு பெருசாருக்கு.

அந்தப் பெரிய காட்டு வாகை மரத்தின் பட்டைகளை உரிச்சி உரிச்சித் தின்னுக்கிட்டிருக்கு. அந்தப் பெண் யானை. அந்தப் பெரிய பெண் யானை அந்தப் பெரிய காட்டு மரத்தின் பட்டைகளை உரிச்சி உரிச்சி சுத்தமா தின்னுட்டுது.

அந்தக் காட்டு வாகை மரத்தில் பட்டைகளே இல்லை.

ஒரு பெண் யானையிடம். ஒரு பெரிய காட்டு வாகை மரம் பட்டைகளை எல்லாம் பறி கொடுத்து விட்டு அம்மணமாக நின்று கொண்டு இருக்கிறது.

பெருவழுதியார்.

.

கதை-63.
நற்றிணை. 107.

" மனைவி "

நாங்கள் கணவனும் மனைவியும்.

நாங்கள் எங்கள் ஊர் கடல் கரையில் நின்று கொண்டிருக்கிறோம். என் மனைவியின் கால் கொலுசை கடல் அலைகள் நனைக்கிறது. என் மனைவியின் பாதங்களில் விழுந்து புரண்டு கொண்டிருக்கிற அவள் சேலையையும், கடல் அலைகள் நனைத்துக் கொண்டிருக்கிறது.

எங்களுக்கு முன்னால் ஒரு நண்டு. அது ரொம்பச் சின்ன நண்டு. அந்த நண்டு செலவுக்கு வெளியே வந்து காற்று வாங்கிக் கொண்டு இருக்கிறது. எங்களைப் பார்த்ததும் குடு குடுன்னு அந்தச் சின்ன நண்டு ஓட்டமா ஓடுது. என் மனைவி அந்த நண்டுக்குப் பின்னாலேயே ஓடுகிறாள். அந்த நண்டு குறுக்கும் நெடுக்குமாக மறிச்சி மறிச்சி ஓடிக்கிட் டேயிருக்கு. என் மனைவி அந்த நண்டை தொரத்திக்கிட்டு அந்த நண்டுக்குப் பின்னால் ஓடி ஓடி அந்த நண்டோடு சேர்ந்து மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டு இருக்கிறாள்.

என் மனைவியை ஏச்சங் காட்டிட்டு அந்தச் சின்ன நண்டு ஓட்டமா ஓடி நண்டுச் செலவுக்குள்ள ஒளிஞ்சிக்கிட்டுது.

எங்களுக்கு முன்னால் ஒரு ஞாழல் மரம் இருக்கிறது. அந்த ஞாழல் மரத்தின் கிளைகள் வளைந்து கடல் கரை குருத்து மண்ணை அது தொட்டுக் கொண்டிருக்கிறது. அந்த ஞாழல் மரம்

பூவாய்ப் பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கிறது.

அந்த ஞாழல் மரத்தின் அடியில் நானும் என் மனைவியும் நெருங்கி உட்கார்ந்திருக்கிறோம்.

நான் என் மனைவியிடம் ஒரு ரகசியம் சொன்னேன்.

என் சேக்காளிகள் வெளி நாட்டுக்குப் போறாங்க..என் சேக்காளிகள் போகும் போது அவுக கூட நானும் போறேன்..

ஒரு பெரிய கடலைப் பார்த்துக் கொண்டு, அந்தப் பெரிய கடலின் குளிர்ந்த கடல் காற்றை வாங்கிக் கொண்டு, அந்தக் கடல்கரைக் குருத்து மண்ணில் நண்டு கூட ஓடி ஓடி மகிழ்ச்சி யாக விளையாடிய என் மனைவியின் முகம் வாடி விட்டது.

என் மனைவி அந்த ஞாழல் மரத்திலிருந்து பூக்கொத்து களைப் பறிக்கிறாள். அந்தப் பூக்களைக் கசக்குகிறாள். கசங்கிய அந்தப் பூக்களைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கீழே போட்டுக் கொண்டிருக்கிறாள்.

தொண்டைமான் இளந்திரையன்.

கதை-64.
நற்றிணை.106

" காட்டுக் கொடிகள் "

ஒரு பாலைவனம்.

வெயில் அந்தப் பாலைவனத்தில் கொளுத்திக் கொண் டிருக்கிறது.

அந்தப் பாலைவனத்தில் காற்றும் பலமாக வீசிக் கொண்டிருக்கிறது.

அந்தப் பாலைவனத்தில் ஒரு இலவ மரம் இருக்கு. அந்த இலவ மரத்தின் அடிமரம் தடியாருக்கு. அடி மரத்தில் முள்ளும் இருக்கு. அந்த இலவ மரத்தைக் காட்டுக் கொடிகள் பின்னிக் கொண்டிருக்கின்றன. அந்தக் காட்டுக் கொடிகள் காய்ந்து இருக்கிறது. அந்த இலவ மரத்தில் காற்று பலமாக மோதுகிறது. அந்த இலவ மரத்தின் கிளைகள் ஒடிகின்றன.

அந்தப் பாலைவனத்தில் ஒரு மூங்கில் புதர் இருக்கு. பெண் யானைகள் தங்கள் குட்டிகளோடு அங்கே நின்று கொண்டிருக் கின்றன. அந்தப் பெண் யானைகள் அங்கே தண்ணீர் தாகத்தோடு நின்று கொண்டிருக்கிறது.

தாகத்துக்குத் தண்ணி குடிக்கிறதுக்கு அந்தப் பெண் யானைகளுக்கு அந்தப் பாலைவனத்தில் எங்கும் எங்கும் தண்ணீர் இல்லை. அந்தப் பெண் யானைகள் இளைப்பாறு வதற்கு அந்தப் பாலைவனத்தில் நிழலும் இல்லை.

வெயில் சுட்டுப் பொசுக்கிக் கொண்டிருக்கிறது.

அந்தப் பெண் யானைகள் தங்கள் குட்டிகளோடு என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துப் போய் அவைகள் வருத்தத்தோடு நின்று கொண்டிருக்கின்றன.

முட்டத் திருமாறன்.

கதை-65.
நற்றிணை.105.

"பையன்கள்"

ஒரு மலைக்காட்டில் இருக்கிறது. எங்கள் ஊர்,

எங்கள் மலையில் ஒரு வட்டப் பாறை இருக்கிறது.

எங்க பையன்கள் அந்த வட்டப் பாறையில் கூட்டமா உக்காந்திருக்காங்க. அவங்க சந்தோசமாக கொட்டு அடிச்சிக்கிட்டிருக்காங்க.

எங்க பையன்கள் சின்னச் சின்னக் கொட்டுகளை அவர்கள் வெறுங்கையால் அடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எங்க பையன்கள் அடிக்கிற கொட்டுச் சத்தம் கேட்டு தினைக் காட்டில் மேய்ந்து கொண்டிருந்த கிளிகள் பறந்து பறந்து போய்க் கொண்டிருக்கிறது.

எங்க பையன்கள் உற்சாகமாகக் கொட்டு அடிச்சிக்கிட்டிருக்காங்க.

எங்க பையன்கள் உக்காந்திருக்கிற வட்டப் பாறைக்கு நேர் எதிரில் ஒரு புலியும், ஒரு யானையும் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறது.

எங்க பையன்கள் ரசித்து ஆரவாரம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

பேரி சாத்தனார்.

கதை-66.
நற்றிணை.104

" இனிமையான நாட்கள் "

ஒரு பாலைவனம்.

அந்தப் பாலைவனத்தில் இரண்டு நரிகள் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

அவுக கணவனும் மனைவியும்,

ஆண் நரி வேட்டைக்குப் போய்ருக்கு.

பாலைவனத்தில் வெயில் கடுமையாருக்கு.

பாலைவனத் தில் எங்குமே நிழல் இல்லை.

பெண் நரி ஒரு நிழலைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறது.

அந்தப் பெண் நரியின் மார்புக் காம்புகள் மெலிந்து தோல் தான் இருக்கிறது.

பெண் நரிக்கு முன்னால் ஒரு ஈரமான சிறிய திட்டுத் தெரிகிறது. அந்தப் பெண் நரி ஓடிப்போய் அந்த ஈரத்தில் தலை சாய்த்துப் படுத்துக் கொள்கிறது. அந்தப் பெண் நரி அதன் அடி வயிற்றை அந்த ஈர மண்ணில் வைத்துக் கொண்டு படுத்திருக்கிறது.

அந்தப் பெண் நரி படுத்திருக்கிற அந்த ஈரம் ஒரு ஆண் யானை பெய்த சிறுநீரின் ஈரம்.

பெண் நரிக்குச் சரியான பசி.

வேட்டைக்குப் போன கணவன் இன்னும் வல்ல. வேட்டைக்குப் போன கணவன் கட்டாயம் இரை கொண்டுகிட்டு

வருவான் என்று அந்தப் பெண் நரி தன் கணவன் மேல் முழு நம்பிக்கை வைத்துக் காத்திருக்கிறது.

அந்தப் பெண் நரி தன் இளமைக் காலத்தில் கணவனோடு சேர்ந்து வாழ்ந்த இனிமையான காதல் வாழ்க்கையை நினைத்துக் கொண்டு அசைபோட்டுக் கொண்டு இருக்கிறது.

மருதன் இளநாகனார்.

கதை-67.
நற்றிணை.103.

" பல்லிச் சத்தம் "

ஒரு ஆண் பண்ணி.

அது சரியான ஒரு காட்டுப் பண்ணி.

அந்தக் காட்டுப் பண்ணிக்கு பெதடியில் முடிகள் வாட்ட சாட்டமாருக்கு.

அந்தக் காட்டுப் பண்ணிக்கு சின்னச் சின்னக் கண்கள்.

அந்தக் காட்டுப் பண்ணி தினைக் கருதுகளை திங்குறதுக்கு ஒரு பெரிய தினைக் காட்டுக்கு அது நடந்து போய்க் கொண்டிருக் கிறது.

அந்தப் பெரிய தினைக் காட்டில் கண்ணி வச்சிருக்காக, அந்தக் காட்டுப் பண்ணியப் பிடிக்கறதுக்கு.

அழகான ஒரு கல் குகை மாதிரி பனை ஓலைகளால் வேய்ந்த ஒரு ஓலைக் குகை. அந்தத் தினைக் காட்டில் அழகாக வேய்ந்து வைக்கப்பட்டிருக்கிறது. அந்த அழகான ஓலைக் குகை யில் இருக்கிறது அந்தக் கண்ணி.

அழகான அந்த ஓலைக் குகையில் வாசல் பெருசாருக்கு. போகப் போக அழகான அந்த ஓலைக் குகை சிறுத்துக் கொண் டே போகிறது. கண்ணி அங்கதான் இருக்கு.

அந்தக் காட்டுப் பண்ணி அந்த ஓலைக் குகைக்குள்ள அசாதாரணமாக, அது நடந்து போய்க் கொண்டிருக்கிறது.

கண்ணிக்குப் பக்கத்தில் போய் விட்டது. இன்னும் இரண்டு எட்டுக்கள் எடுத்து வைத்தால் அது கண்ணியில் மாட்டிக் கொள்ளும்.

பண்ணி தன் முன்னத்திக் காலை ஒரு காலை மட்டும் அது முன்னால் எடுத்து வைக்கிறது.

ஒரு பல்லி சடசடன்னு கூப்பிடுகிறது.

பல்லிச் சத்தத்தைக் கேட்டதும். பண்ணி திகைத்துப் போய் அப்படியே நின்று விட்டது.

பல்லிச் சத்தத்தை அந்தப் பண்ணி அறக் கடவுளின் வாக்காக எடுத்துக் கொள்கிறது.

பண்ணி யோசிக்கிறது.

"அறக்கடவுள், முன்னால் போகாதே என்று எச்சரிக்கி றார். நம்மை."

அந்தக் காட்டுப் பண்ணி தன் பின்னத்திக் கால்களை பின் பக்கமா எடுத்து வைக்கிறுது. அது மெல்ல மெல்ல பெறத்தால கூடி பெறத்தால கூடி நடந்து நடந்து அது ஓலைக் குகைக்கு வெளியே வந்து விட்டது.

உயரமான அந்தப் பெரிய மலையில் இயற்கையான கல் குகை ஒன்று இருக்கிறது. அந்தக் கல் குகையில் அழகாகப் படுத்து உறங்கிக் கொண்டிருக்கிறது. அந்தப் பெரிய காட்டுப் பண்ணி.

உக்கிரப் பெருவழுதியார்.

கதை-68.
நற்றிணை. 98.

" தண்ணித் தொட்டி "

ஒரு சிறிய குன்றின் உச்சியில் இருக்கிறது அந்தச் சிறிய கிராமம்.அந்தச் சிறிய கிராமத்தில் வேட்டுவர்கள் குடியிருக் கிறார்கள்.

அந்தச் சிறிய கிராமத்தை அடுத்து இருக்கிறது ஒரு பெரிய காடு. அந்தப் பெரிய காட்டில் ஆழமான ஒரு பெரிய கிணறு இருக்கிறது. அந்தப் பெரிய கிணத்தடியில் ஒரு தண்ணித் தொட்டி இருக்கு. அந்தத் தண்ணித் தொட்டி நெறையாத் தண்ணி இருக்கு. அந்தத் தண்ணித் தொட்டியை ஒரு மூடி போட்டு மூடி வைச்சி ருக்கு. மிருகங்களைக் கொல்ல அந்தத் தண்ணித் தொட்டிக்கு மேல் ஒரு வில்பொறி வைக்கப்பட்டிருக்கிறது.

அந்தப் பெரிய காட்டில் வெயில் வெளுத்து வாங்கிக் கொண்டிருக்கிறது.

ஒரு பெரிய ஆண் யானை, அதன் மனைவியையும், குட்டியையும் அழைத்துக் கொண்டு தண்ணி குடிக்கிறதுக்கு வந்து கொண்டி ருக்கிறது.

ஆண் யானை அந்தத் தண்ணித் தொட்டிக்கு மேல் இருக்கிற வில் பொறியை உடைக்கிறது. அந்தத் தண்ணித் தொட்டியை மூடியிருக்கிற மூடியையும் அந்த ஆண் யானை உடைத்து நொறுக்குகிறது.

பெண் யானையும் குட்டி யானையும் தண்ணி குடிச்சிக் கிட்டிருக்கு.

தன் குட்டியும் தன் மனைவியும் தண்ணி குடிக்கும் போது அந்தப் பெரிய ஆண் யானை, தன் குட்டிக்கும் தன் மனைவிக்கும் பாதுகாப்பாகக் காவல் காத்துக் கொண்டிருக்கிறது.

குட்டியும் மனைவியும் தண்ணி குடிச்சதுக்குப் பிறகு அந்தப் பெரிய ஆண் யானை தண்ணீர் குடிக்கிறது.

பெரிய தேவனார்.

கதை-69.
நற்றிணை. 92.

"ஒரு சோழ மன்னனின் நெல்லிமரக் காடு"

ஒரு மாமரம், எங்கள் ஊருக்கு மத்தியில் இருக்கிறது. அந்த மாமரத்தில் ஒரு பெரிய வவ்வால் குடியிருக்கிறது. அந்தப் பெரிய வவ்வால் அந்த மாமரத்தில் ஒரு உச்சாணிக் கொப்பில் தலை கீழாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது. அந்தப் பெரிய வவ்வால் உறங்கிக் கொண்டே ஒரு கனவு கண்டு கொண்டிருக்கிறது.

"அழிசி " என்று ஒரு சோழ அரசன், ஆர்க்காடு அவனு டைய நகரம். ஆர்க்காட்டிற்குப் பக்கத்தில் "அழிசி" மன்னனுக்குச் சொந்தமான ஒரு பெரிய காடு இருக்கிறது. அந்தப் பெரிய காட்டில் ஏகப்பட்ட நெல்லி மரங்கள் இருக்கிறது. அந்த நெல்லி மரங்கள் காய்த்திருக்கின்றன. அந்த நெல்லிக்காய்கள் முற்றிக் கனிந்திருக்கின்றன. அந்தப் பெரிய வவ்வால் ஒரு பெரிய நெல்லி மரத்தில் உக்காந்திருக்கிறது. அது நெல்லிக்கனிகளைத் தேர்ந் தெடுத்துத் தேர்ந்தெடுத்து தின்று கொண்டிருக்கிறது. அந்த நெல்லிக் கனிகளின் புளிப்புச் சுவையை அந்தப் பெரிய வவ்வால் "ரசித்து ரசித்துத் தின்று கொண்டிருக்கிறது."

வவ்வால் கனவு கண்டது போல் நானும் ஒரு கனவு கண் டேன்.

நான் என் தலைவனோடு கூடி முயங்கி நான் மகிழ்ச்சியை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்.

நக்கண்ணையார். கதை-70.
நற்றிணை. 87.

"கடவுள் வாழும் ஒரு ஆலமரம்"

ஒரு குளம்.

இந்தக் குளத்தில் பெண்கள் நல்ல தண்ணி எடுக்கிறதுக்கு. ஒரு படித்துறை இருக்கிறது.

இந்தப் படித்துறைக்குப் பக்கத்தில் ஒரு ஆலமரம் இருக் கிறது.

இந்த ஆலமரம் கடவுள் வாழும் மரம்.

இந்த ஆல மரத்தில் ஒரு கூகை குடியிருக்கிறது.

இந்தக் கூகைக்கு அம்மாசி இருட்டிலும் கூட கண் தெரிகிறது. இந்தக் கூகைக்கு நகங்கள் கூர்மையாக இருக்கின்றன. இந்தக் கூகைக்கு வாய் வளைந்து கொண்டிருக்கிறது. வளைந்த வாயை வைத்துக் கொண்டு இந்தக் கூகை சும்மா இருக்க மாட்டங்கு. இந்தக் கூகை கூவிக் கூவி உறங்கிக் கொண்டிருக்கிற ஊர்க்காரர் களை எழுப்பிக் கொண்டிருக்கிறது. இந்தக் கூகை ஓயாமல் சத்தம் போட்டுக் கூவிக் கூவி என் காதலனை என்னிடம் வர விடாமல் அது என் காதலனைப் பயங்காட்டிக் கொண்டிருக்கிறது.

இந்தக் கூகை குடியிருக்கிற இந்த ஆலமரத்தில் ஒரு பெரிய விழுதில் இந்த அமாவாசை இருட்டில் நான் ஒளிஞ்சிக்கிட்டு உக்காந்திருக்கிறேன். நான் என் காதலனை எதிர் பார்த்துக் கொண்டு, என் காதலனுக்காக நான் இங்கே உக்காந்திருக்கிறேன்.

"கூகையே.."

"கூகையே.."

"எங்கள் காதல் வாழ்க்கைக்கு இடைஞ்சல் பண்ணாமல் நீ உன் வாயைப் பொத்திக் கொண்டு சும்மா இரு."

"கூகையே.."

"கூகையே.."

"உனக்குப் பிடிச்ச வெள்ளை எலியை நான் உனக்குச் சுட்டுத் தாரேன். வெள்ளை அரிசியில் சோறு பொங்கி வெள்ளாட்டுக் கறியாக்கி, நெய் கலந்து, உனக்குத் தாரேன்."

"கூகையே.."

"கூகையே.."

"எங்கள் காதல் வாழ்க்கைக்கு இடைஞ்சல் பண்ணாமல் நீ உன் வாயைப் பொத்திக் கொண்டு சும்மா இரு."

பெருந்தேவனார்.

கதை-71.
நற்றிணை. 83.

" வள்ளி "

அந்தச் சின்ன ஊருல, ஒரு அழகான பொண்ணு.

அந்தப் பெண் வீடு சின்ன வீடு.

அந்தச் சின்ன வீட்டில் அந்தப் பெண் பேரழகியா இருக்காள்.

அவளைப் பார்த்த, என் கண்ணுக்குள் வந்து உக்காந்து கொண்டாள் அந்தப் பெண்.

என் கண்கள் அந்தச் சின்ன வீட்டின் முற்றத்தை விட்டு நகரவே மாட்டங்கு.

அந்தப் பேரழகி உக்காந்து கொண்டிருக்கிற என் கண்களால் வேறு ஒண்ணையும் பார்க்க முடியவில்லை.

இனி இந்தப் பேரழிகியோடுதான் என் வாழ்க்கை.

இவள் இல்லாத என் வாழ்க்கையை இனி என்னால் நினைத்துப் பார்க்க முடியாது.

நான் அவளிடம் பேசினேன்.

"என் கூட வாரியா..? "

" வா.."

" என் கூட வா.."

"நாம ரெண்டு பேரும் ஓடிப் போயிருவோம்..."

"நீ வராமல் நான் மட்டும் ஒத்தீல எங்க வீட்டுக்குப் போக மாட்டேன். "

"ஒன்னைய கூட்டிக் கிட்டுத்தான் எங்க ஊருக்கு நான் போவேன். "

"நீ இல்லாமல் என்னால் வாழ முடியாது.."

"நீ இல்லாமல் நான் வாழவே மாட்டேன்.."

"வா.."

"எங்கூட வா..."

"நாம ரெண்டு பேரும் ஓடிப் போயி நாம நல்லா வாழு வோம்."

"நான் ஒன்னைய நல்லா வச்சுக்குவேன்.."

"முருகன் வள்ளியை மகிழ்ச்சியா வச்சிக்கிட்ட மாதிரி நான் ஒன்னைய மகிழ்ச்சியா வச்சிக்கிறேன்.."

"வள்ளி..முருகன் கூட மகிழ்ச்சியா ஓடிப் போன மாதிரி நீயும் எங்கூட மகிழ்ச்சியோடு வா.."

"வள்ளி.."

"வா.."

"வா...எங்கூட..."

"வள்ளியின் கையை நான் பலமாகப் பிடித்துக் கொண்டிருக்கிறேன். "

"என் கையை வள்ளி பலமாகப் பிடித்துக் கொண்டிருக் கிறாள். "

அந்த இரவில் அந்த இருட்டான இருட்டில் நாங்க ரெண்டு பேரும் அந்தப் பெரிய பாலைவனத்தில் நடந்து நாங்க எங்க ஊருக்குப் போய்க் கொண்டிருக்கிறோம்.

அம்மள்ளனார்.

கதை-72.
நற்றிணை. 82.

" புறா "

ஒரு மரம்.

அந்த மரத்துக்குப் பெயர் "உகாய் மரம்."

அந்த உகாய் மரத்தில் ஒரு கிளையில் ஒரு காய் தொங்கிக் கொண்டிருக்கு. உகாய் மரத்தின் காயை வண்டுகள் மொய்த்துக் கொண்டிருக்கின்றன.

ஒரு ஆண் புறா. அந்த உகாய் மரத்துக்கு வருகிறது. அந்த ஆண் புறா. உகாய் மரத்தின் ஒரு கிளையில் உக்காருகிறது. அந்த ஆண் புறா அந்த உகாய் மரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிற ஒரு காயைப் பார்க்கிறது. அந்தக் காயை மொய்த்துக் கொண்டிருக்கிற வண்டுகளை அந்த ஆண் புறா துரத்துகிறது.

அந்த உகாய் மரத்தின் காயை அந்த ஆண் புறா பேராசை யோடு தின்று கொண்டிருக்கிறது.

உகாய் மரத்தின் காயைத் தின்ற அந்த ஆண் புறா அந்த உகாய் மரத்தின் உச்சாணிக் கொம்பில் உக்காந்திருக்கிறது.

அந்த ஆண் புறாவுக்கு தலை சுற்றுகிறது. அந்த ஆண் புறாவுக்கு அதன் பிடரி மயிர்கள் சிலிர்க்கின்றன. அந்த ஆண் புறா தலையைத் தலையை உதறிக் கொண்டு இருக்கிறது.

அந்த ஆண் புறா தின்னது ஒரு விஷக்காய்..ஒரு விஷக்

காயைத் தெரியாத்தனமா தின்று விட்டோமே என்று அந்த ஆண் புறா அந்த உகாய் மரத்தில் வருத்தத்தோடு உக்காந்திருக்கு.

மிளைக்கந்தன் நாகனார்.

கதை-73.
நற்றிணை. 66.

" தந்தம் "

ஒரு காடு.

அது ஒரு மலைக்காடு.

அந்த மலைக்காட்டில் ஒரு அருவி இருக்கிறது.

அந்த அருவிக்குப் பக்கத்தில் ஒரு புதரில் ஒரு பெரிய ஆண் புலி பதுங்கி இருக்கிறது.

அந்த அருவியில் தண்ணீர் குடிக்கிறதுக்கு. ஒரு ஆண் யானை வந்து கொண்டிருக்கிறது.

புதரில் பதுங்கி இருந்த ஆண் புலி திடீரென்று பாய்ந்து அந்த ஆண் யானையைத் தாக்குகிறது.

யானை சுதாரித்துக் கொண்டு புலியை எதிர்த்து அது ஆவேசமாகச் சண்டை போடுகிறது.

ஆண் புலிக்கும் ஆண் யானைக்கும் கடுமையான சண்டை.

ஆண் யானை அந்த ஆண் புலியைக் கொன்று விட்டது.

ஆண் யானைக்கு அதன் உடம்பெல்லாம் காயங்கள்..பெரிய பெரிய காயங்கள். ரத்தம் வடிந்து கொண்டிருக் கிறது. அந்த ஆண் யானையால் நடக்க முடியவில்லை. அது தள்ளா டித் தள்ளாடி நடக்க முடியாமல் நடந்து போய்க் கொண்டிருக் கிறது.

பெரிய பெரிய காயங்களோடு ரத்தம் வடிய வடிய நடக்க

முடியாமல் நடந்து போய்க் கொண்டிருக்கிறது.

அந்த ஆண் யானையை வேடர்கள் தொலைவில் நின்று பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள்.

வேடர்களுக்கு அந்த ஆண் யானை மேல் இரக்கம் ஏற்படவில்லை. அவர்களுக்கு அந்த ஆண் யானையின் தந்தங்கள்தான் குறி. வேடர்கள் நினைக்கிறார்கள்..

" இந்த யானையைக் கொல்வது சுலபம்.."

வேடர்களின் வில்லிலிருந்து அம்புகள் சரம் சரமாகச் சீறிக் கொண்டு போகிறது. அந்த அம்புகள் காயம்பட்ட அந்தப் ஆண் யானையின் உடம்பை மேலும் மேலும் குத்திக் குத்திக் கிழிக்கிறது. அந்தப் பெரிய ஆண் யானையின் பெரிய உடம்பில் அவ்வளவும் அம்புகள்.

அந்தப் பெரிய ஆண் யானை வலி தாங்க முடியாமல் பிளிறுகிறது. மரண வலியில் அது கூப்பாடு போடுகிறது. அந்தப் பெரிய ஆண் யானையின் மரண ஓலம் இடி ஓசை போல் பயங்கரமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

கபிலர்.

கதை-74.
நற்றிணை.65.

" நார் வேட்டி "

ஒரு சிறிய கிராமம்.

குறவர்கள் வாழ்கிற கிராமம் அது

அந்தச் சிறிய கிராமத்தில் ஒரு சிறிய வீடு.

அந்தச் சிறிய வீட்டுக்குப் பின்னால். ஒரு சிறிய வளவு இருக்கிறது.

அந்த வளவில் ஏகப்பட்ட மரங்கள் இருக்கு.

அந்தச் சிறிய வளவில் ஒரு பெரிய சந்தன மரமும் இருக்கிறது.

அந்தப் பெரிய சந்தன மரத்தைக் குறவர்கள் பெரிய வாளால் அந்தச் சந்தன மரத்தின் அடி மரத்தை அறுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நார் வேட்டி உடுத்திய அந்தக் குறவர்கள் அந்தப் பெரிய சந்தன மரத்தின் அடி மரத்தை அறுக்க அறுக்க சந்தன மரத்தின் சின்னச் சின்ன இலைகள் வாடுகின்றன.

நார் வேட்டி உடுத்திய அந்தக் குறவர்கள் அந்தப் பெரிய சந்தன மரத்தை அறுத்து அறுத்து தரையில் சாய்த்து விட்டார்கள்.

அந்தப் பெரிய சந்தன மரம், நீள வசத்தில் தரையில் கீழே விழுந்து கிடக்கிறது. கீழே விழுந்து கிடக்கிற அந்தப் பெரிய சந்தன மரத்தின் சின்னச் சின்னக் குச்சிகளும் கம்புகளும் கிளைகளும்

கூட வாடிவிட்டன.

அந்தச் சிறிய வளவில் இருந்து அந்தப் பெரிய சந்தன மரத்தை நார் வேட்டி உடுத்திய அந்தக் குறவர்கள் வெளியே கொண்டு போய்விட்டார்கள்.

அந்தப் பெரிய சந்தன மரம் இல்லாத அந்தச் சிறிய வளவு, அதன் உண்மையான அழகை இழந்து விட்டது.

உரோடகத்தனார்.

கதை-75.
நற்றிணை. 64.

" பெருமூச்சு "

ஒரு பெரிய ஆண் யானை.

அந்தப் பெரிய ஆண் யானையின் ஒரு பெரிய காலில் ஒரு இரும்புச் சங்கிலியைக் கொண்டு கெட்டியிருக்கு.

அந்தப் பெரிய ஆண் யானையை அந்த இரும்புச் சங்கிலி யால் ஒரு பெரிய தூணில் கெட்டிப் போட்டுருக்கு.

அந்தப் பெரிய ஆண் யானை, அது நேற்று வாழ்ந்த வாழ்க் கையையும், இன்று அது வாழ்ந்து கொண்டிருக்கிற வாழ்க்கை யையும் அசை போட்டுக் கொண்டிருக்கிறது.

தன்னைப் பெத்த அம்மையோடும், அய்யாவோடும், தன் சொந்தக்காரவுகளோடும், சேர்ந்து வாழ்ந்த கூட்டு வாழ்க்கையை அந்தப் பெரிய ஆண் யானை நினைத்து நினைத்து அசை போட்டுக் கொண்டு இருக்கிறது.

அந்தப் பெரிய ஆண் யானை அதன் இளம் காளை வயதில், தன் இளம் காதலியோடு ஆண்டு அனுபவித்த மகிழ்ச்சியான நாட்களை அது நினைத்துப் பார்க்கிறது.

அருவியில் குளித்தது..சுனை நீரைக் குடித்துத் தாகத் தைத் தீர்த்துக் கொண்டது.. காட்டற்றில் ஓடுகிற பெரிய பெரிய வெள்ளத்தில் நீந்தி விளையாடியது..காட்டு மரங்களின் இளம் தளிர்களையும், அப்போதுதான் பூத்த புத்தம் புதுப் பூக்களையும் வேண்டிய மட்டும் தின்னு அனுபவித்தது. எல்லாத்தையும்

நினைத்துப் பார்க்கிறது. அந்தப் பெரிய ஆண் யானை.

ஒரு பெரிய தூணில் இரும்புச் சங்கிலியால் தன்னைக் கெட்டி வைத்திருக்கிற இந்த அநீதியை, நின்ற இடத்தை விட்டு நகர முடியாமல் நின்ற இடத்திலேயே நின்று கொண்டிருக்கிற இந்தத் துயரத்தை, கிடைப்பதை மட்டும் கிடைக்கிற நேரத்தில் மட்டும் தின்னு வாழ வேண்டிய இந்தத் துன்பத்தை நினைத்து வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தப் பெரிய ஆண் யானை.

அந்த ஆண் யானை தன் துயரத்தையெல்லாம் நினைத்துப் பார்த்து நினைத்துப் பார்த்து பெருமூச்சு விட்டுக் கொண்டிருக் கிறது.

இளங்கீரனார்.

கதை-76.
நற்றிணை. 62.

" திலகம் "

ஒரு பெரிய பாலைவனத்தில் நான் நடந்து போய்க் கொண்டிருக்கிறேன்.

அது ஒரு இரவு நேரம்.

நான் வானத்தை அண்ணாந்து பார்க்கிறேன்.

ஒரு முழு நிலவு மலைகளுக்கு மேல் ஊர்ந்து அழகாகப் போய்க் கொண்டிருக்கிறது.

இந்த முழு நிலவைப் போல் என் மனைவியும் ஒரு முழு நிலவுதான். வட்ட முகம்.. ஒளி வீசும் பற்கள்..நறுமணம் கமழும் சிறிய நெற்றி..என் மனைவி அவள் நெற்றியில் வரைந்திருக்கிற அழகான திலகம்.

எங்கள் மலைமேல் இருக்கிறது எங்கள் ஊர். எங்கள் ஊர் மரங்கள் எல்லாம் இலைகளையெல்லாம் உதிர்த்தி விட்டு மொட்டையாக நின்று கொண்டிருக்கின்றன.

காற்று, எங்கள் ஊரில் இரைச்சல் போட்டுக் கொண்டு பலமாக வீசுகிறது.

ஒரே ஒரு ஒத்தக் கல்லில் உயரமாக ஓங்கி வளர்ந்திருக் கிறது எங்கள் மலை. உயரமான எங்கள் மலைக்கு மேல் இருக்கும் எங்கள் கிராமத்தில் இருக்கிறாள் முழு நிலவைப் போல் என்

இளம் மனைவி.

ஒரு பெரிய பாலைவனத்தில் நான் நடந்து போய்க் கொண்டிருக்கிறேன்.

இளங்கீரனார்.

கதை-76.
நற்றிணை. 62.

"காமம்"

"தோழி.."

"கேள்..."

"நேத்து இரவு நான் உறங்கவே இல்லை."

"எனக்கு அவன் நினைப்பாகவே இருக்கிறது.."

" பெரு மூச்சு விட்டுக்கிட்டு நெளிந்து கொண்டும் புரண்டு கொண்டும் காதல் வலியில் நான் துடித்துக் கொண்டிருந்தேன்.."

"அம்புபட்ட ஒரு பெண்மான்..வலியில் அது எப்படித் துடிக்கும்..? "

" நான் அப்படித் துடித்துக் கொண்டிருந்தேன். "

"உறங்காமல் நான் நெளிந்துகொண்டும் புரண்டு கொண்டும் வருவதைப் பார்த்த எங்க அம்ம முழிச்சிட்டாவ.. "

"எங்க அம்ம ஏங்ட்டக் கேக்காவ.."

"நான் பெத்த..என் செல்லம்..நீ இன்னும் ஒறங்கலை யாம்மா?

"எங்க அம்மைக்கு நான் என்ன பதில் சொல்வேன்..? ."

"எங்க அம்மைக்கு நான் சொல்ல வேண்டிய பதிலை மெல்லமாய், ரொம்ப ரொம்ப மெல்லமாய் நான் என் மனசுக் குள்ளேயே சொல்லிக் கொண்டேன்..."

" பெரிய மலைகளும், பெரிய காடுகளும் சூழ்ந்த ஒரு

பெரிய நாட்டை ஆளுகிற ஒரு பெரிய தலைவனைக் காதலிக்கிற உன் மகளுக்கு ஒறக்கம் வருமா அம்மா..?.”

சிறுமேலாதனார்.

கதை-78.
நற்றிணை.61

“ நாற்றங்கால் ”

பொழுது இப்பத்தான் மறைஞ்சிருக்கு.

எங்க அய்யா நேரத்தோடயே படுத்துட்டார்.

எங்க அய்யா நேரத் தோடயே படுத்துட்டாரே தவிர அவர் இரவு பூராவும் உறங்கல.

நாளைக்கி நாங்க எங்க வயல்ல நாத்து நட்டப் போறோம். எங்க அய்யா நாளைக்கி நடுவை போடுவதைப் பத்தியே யோசிச் சிக்கிட்டு இரவு பூராவும் உறங்காமல் படுத்திருக்கார்.

எங்க அய்யா நேரத்தோடயே படுத்த மாதிரி எங்க அய்யா நேரத்தோடயே எந்திரிச்சிட்டார்.

நேரம் இன்னும் விடியல.

எங்க அய்யா எங்க வீட்டில் எங்க அடுப்பாங்கரையில் இருக்கார். நெல்லுச் சோத்துப் பானையில் தண்ணீர் விட்ட நெல்லுச் சோறு ஒரு பானைச் சோறும் அப்படியே இருக்கு.

மீன்கறிச் சட்டியில் சுண்டச் சுண்டச் சுட வைத்த மீன் கறி சட்டியில் சுண்டிப் போயிருக்கு.

எங்க அய்யா ஒரு மண் சட்டியில் நெல்லுச் சோத்த அள்ளி அள்ளி வைக்கிறார். மீன் கறியை மீன் கறிச் சட்டியோடு நெல்லுச் சோற்றில் கொட்டுகிறார். எங்க அய்யா நெல்லுச் சோத்தையும் மீன் கறியையும் சேர்த்துப் பிசைகிறார். அவர் பிசைந்த சோத்தை உருட்டி உருட்டி உருண்டைப் பிடிக்கிறார். எங்க அய்யா அந்தச்

சோத்து உருண்டையைக் கவளம் கவளமாக விழுங்குகிறார்.

எங்க அய்யா சாப்பிட உட்கார்ந்ததே தெரியல. அவர் சாப்பிட்டுக் கையைக் கழுவி விட்டார். சாப்பிட்ட சட்டியையும் கழுவிக் கவுத்திட்டார் .

எங்க வயலில் நடுவை நடந்து கொண்டிருக்கிறது.

எங்க சொந்தக்காரவுக. குலவை போட்டுக்கிட்டும், நடுவைப் பாட்டுப் பாடிகிட்டும், வாய் நெறையச் சிரிச்சிக் கிட்டும், நிறை நிறையா நின்னு அவர்கள் நெல் நாற்றுக்களை அழகாக நட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

எங்க அய்யா நாற்றங்காலில் மண்டி போட்டு உக்காந்துக் கிட்டிருக்கார்.

தூங்கல் ஓரியார்.

கதை-79.
நற்றிணை. 60.

"உடும்பு"

ஒரு பெரிய்ய காடு.

ஒரு வேடன் அந்தப் பெரிய்ய காட்டுக்கு வேட்டையாட வந்திருக்கிறான். அந்தப் பெரிய காட்டில் ஒரு பெரிய காட்டு மரம். அந்தக் காட்டு மரத்தில் பட்டைகள் எல்லாம் காய்ந்து அந்தப் பட்டைகள் சில்லுச் சில்லாக வெடித்து அந்த மரப்பட்டைகள் சொரிச் சொரியாருக்கு.

அந்த மரத்தில் ஒரு உடும்பு உக்காந்துக்கிட்டிருக்கு. அந்த உடும்பு அச்சு அசலா அந்த மரப்பட்டை மாதிரியே இருக்கு.

வேடன் உடும்பைப் பார்க்கிறான்.

வேடன் மூச்சுக் காட்டாமல் பையப் பையா நடந்து நடந்து அந்தப் பெரிய மரத்துக்குப் பக்கத் தில் அந்த உடும்புக்குக் கிட்டத்தில் போய்ட்டான். அந்த வேடன் அவன் ரெண்டு கைட்டும் அந்த உடும்பைப் பெலம்மாப் பிடிச்சிக்கிட்டான்.

உடும்பு திமிறுகிறது. அது எகிறி எகிறிக் குதிக்கிறது. அது தன் பெலத்தையெல்லாம் உபயோகித்து வேடனிடமிருந்து தப்பிப்பதற்கு அந்த உடும்பு போராடிக் கொண்டிருக்கிறது.

உடும்பை, உடும்புப் பிடியாய் பிடிச்சிக்கிட்டான் வேடன். வேடன் அந்த உடும்பை அப்படியே அலாக்காத் தூக்கிட்டான். உடும்பு, வேடன் பைக்குள்ள இருக்கு. வேடன் அந்தப் பெரிய பையின் வாயை இறுக்கிக் கெட்டுகிறான். வேடன் அவன்

பையைத் தூக்கி அவன் தலைமேல் வைக்கிறான்.

வேடன் அவன் வீட்டில் உக்காந்துக்கிட்டுருக்கான். வேடனுக்கு முன்னால் ஒரு புதிய கள் கலயம் இருக்கிறது. கள்ளுக் கலயத்தில் கள் நுரை பொங்கிக் கொண்டிருக்கிறது. புதிய கலயத்தில் இருக்கிற அந்தப் புளித்த கள் அழகாக மணந்து கொண்டிருக்கிறது.

வேடன் கள் பூராத்தையும் குடிச்சிட்டு கள் கலயத்தைக் கவிழ்த்து வைக்கிறான்.

வேடன் அங்கேயே படுக்கிறான்.

வேடன் இரண்டு கால்களையும் நீட்டிக் கொண்டு அவன் இரண்டு கைகளையும் விரித்துக் கொண்டு மல்லாக்கப் படுத்திருக்கிறான். உறக்கம் அவனைத் தாலாட்டித் தாலாட்டி உறங்க வைத்துக் கொண்டிருக்கிறது.

கபிலர்.

கதை-80.
நற்றிணை. 59.

" காட்டுப் பசு "

ஒரு காடு.

அந்தக் காட்டில் ஒரு பெரிய வேங்கை மரம் இருக்கிறது.

அந்த வேங்கை மரத்தின் நிழலில் ஒரு காட்டுப் பசு படுத்து உறங்கிக் கொண்டிருக்கிறது. அந்தக் காட்டுப் பசுவுக்குப் பக்கத்தில் அந்தக் காட்டுப் பசுவின் கன்றுக்குட்டியும். படுத்து உறங்கிக் கொண்டிருக்கிறது.

அந்தப் பெரிய வேங்கை மரத்தில் குரங்குகள் கூட்டமாக உட்கார்ந்து கொண்டிருக்கிறது. அந்தக் குரங்குகள் காட்டுச் சத்தம் போட்டுக் கத்திக் கொண்டிருக்கின்றன.

ஒரு தாய்க் குரங்கு சைகை செய்து தன் கூட்டத்தாரிடம் " கூச்சல் போடாதீங்க " என்று கேட்டுக் கொள்கிறது.

கூச்சல் போடுவதை அந்தக் குரங்குக் கூட்டம் நிறுத்திக் கொண்டன.

அந்தத் தாய்க் குரங்கு அந்தப் பெரிய வேங்கை மரத்திலிருந்து இறங்கிக் கீழே வருகிறது. அது பையாப் பையா பம்மிப் பம்மி நடந்து உறங்கிக் கொண்டிருக்கிற அந்தக் காட்டுப் பசுவுக்குப் பக்கத்தில் வந்து உக்காந்திருக்கிறது. அதன் குட்டியும் அதன் கூடவே வந்து தாய்க்குப் பக்கத்தில் உக்காந்திருக்கிறது,

காட்டுப் பசுவின் மடியில் பால் சுரந்து பால்மடி கனத்திருக்கிறது. தாய்க் குரங்கு காட்டுப் பசுவின் மடியில் இருந்து மெல்லமாய்

ஒரு பால் காம்பை மட்டும் எடுக்கிறது. அது பால் கறக்கிறது.

குட்டிக் குரங்கு தாயிடமிருந்து பாலை வாங்கி வாங்கிக் குடித்துக் கொண் டிருக்கிறது.

பொதும்பில் கிழார்.

கதை-81.
நற்றிணை.57.

" ஒரு இளம் பெண்ணை தேனீக்கள் மொய்த்துக் கொண்டிருக்கிறது."

ஒரு தாய்.

அந்தத் தாய் விறகு அடுப்பில் சோறு பொங்கிக் கொண் டிருக்கிறாள்.

அடுப்பில் சந்தன விறகுகள் எரிந்து கொண்டிருக்கிறது.

மகள் தோழியும், மகளும் தாய்க்குப் பக்கத்தில் உட்கார்ந்து விளையாடிக் கொண் டிருக்கிறார்கள்.

தாய், மகளை உற்று உற்றுக் கூர்ந்து பார்க்கிறாள்.

தேனீக்கள் மகள் மேல் மொய்த்துக் கொண் டிருக்கின்றன.

தாய் மனம் பதறுகிறது. தாய் கண்களில் கொலை வெறி தாண்டவம் ஆடுகிறது.

மகள் கண்களை உற்றுப் பார்த்துக் கொண்டு அந்தத் தாய் கோவத்தோடு கேட்கிறாள்.

தேனீக்கள் உன்னை மொய்க்கிறது. இது எத்தனையாவது தடவை..?

மகள், தாய்க்குப் பதில் சொல்லவில்லை.

மகள் தோழியைப் பார்க்கிறாள்.

தோழி அவளுக்கு உதவுகிறாள்.

அடுப்பில் எரிந்து கொண்டிருக்கிற ஒரு சந்தன விறகைத் தோழி அவள் கையில் எடுக்கிறாள். எரிந்து கொண்டிருக்கிற

அந்தச் சந்தன விறகைத் தாயிடம் காண்பித்துக் கொண்டு தோழி சொல்கிறாள்..

" அம்மா..அடுப்பில் எரிந்து கொண்டிருந்த இந்தச் சந்தன விறகில் இருந்துதான் இந்தத் தேனீக்கள் வந்தது."

கண்களில் கொலை வெறியோடு மகளிடம் கேள்வி கேட்டுக் கொண்டிருந்த தாயை அசாதாரணமாகச் சமாளித்த தோழிதான் இந்தக் கோவக்காரத் தாயின் மகளுக்கு ஆலோசனைகள் சொல்லி அவளுக்கு எல்லா உதவிகளும் செய்து கொண்டிருக்கிறாள்.

இந்தக் கோவக்காரத் தாயின் மகள் ஒருத்தனைக் காதலிக்கிறாள். காதலர்கள் இரவில் சந்திக்கிறதுக்கு இந்தத் தோழிதான் காதலர்களுக்கு எல்லா உதவியும் செய்து கொண்டிருக்கிறாள்.

பெருவழுதியார்.

கதை-82.
நற்றிணை.55

" புது வெள்ளம் "

என் சேக்காளியும் நானும் எங்கள் வீட்டில் பல்லாங்குழி வெளையாண்டுக்கிட்டு இருக்கோம்.

எங்க அம்ம எங்கள்ட்டச் சொல்லுதாவ..

"விடிய விடிய மழ..இரவு பூராவும் இடி முழங்கிக் கிட்டேதான் இருந்தது.. சாமத்துக்குப் பெறகு மழ பெலம்மா பிடிச்சிக்கிட்டுது.."

"வெள்ளம் பெருவாரியாய்ப் போகுது.. அந்தப் பெருவாரி வெள்ளத்தில் ஆற்றில் தண்ணியே தெரியாமல் பூக்கள் மிதந்துக்கிட்டுப் போகுது.."

இது..

புது மழ.

இது..

புது வெள்ளம்.

"எம் மகா தொடைநடுங்கியாருக்காள்..இப்படித் தொடை நடுங்கியாவா இருப்பாள். ஒரு கொமரி.."

"சேக்காளிகள் ரெண்டு பேரும் குளிக்கப் போங்க.."

"இந்தப் புது வெள்ளம் மனிதர்களுக்கு நல்ல மருந்து . "

"நீங்க ரெண்டு பேரும் ஒங்க ரெண்டு கைட்டும் புதுத் தண்ணியக் கை நெறையா அள்ளிக் குடிங்க.. "

"வயிறு குளுந்தாக்கல இருக்கும்."

"வெள்ளத்தில் முங்கிக் குளிங்க.. வெள்ளத்தில் நீந்தி விளையாடுங்க.."

"கண்ணு செவக்கிற வரைக்கும் குளிங்க.."

"சேக்காளியும் சேக்காளியும் கண்ணு செவக்கக் குளிச்சிட்டு மலையில் இருக்கிற மரங்களையெல்லாம் பாருங்க.. செடிகளையும் பாருங்க..மலையெங்கும் கொடி வீசிப் படர்ந்திருக் கிற பச்சக் கொடிகளையும் பாருங்க.."

"நிதானமா நின்னு பொறுமையாப் பாருங்க.."

"பொறுமையாக் குளிச்சிட்டுப் பொறுமையா வாங்க.."

"எம்மகளத் தொடை நடுங்க வைத்துக் கொண்டிருக்கிற நோய்கள் எல்லாம் ஓடிப் போயிரும்.

மிளைக்கிழான் நல் வேட்டனார்.

கதை-83.
நற்றிணை.53.

"கருவாட்டில் நெய் வடிந்து கொண்டிருக்கிறது"

தோழி வீட்டுக்கு வந்திருக்கிறான் தலைவன்.

தோழி தலைவனிடம் பேசுகிறாள்.

"நீ பட்டணத்தில் பிறந்தவன். உன் குடும்பம் கொடி கெட்டி வாழ்ந்து கொண்டிருக்கிற குடும்பம்.. நீ ரெண்டு குதிரை கள் பூட்டிய தேரில் பிரயாணம் செய்கிறவன்.."

" இவள் எங்கள் பரதவப் பெண். இவள் பிறந்த வீடு ஒரு சிறிய வீடு. இவள் பிறந்திருக்கிறது இந்தச் சிறிய கடலோரக் கிராமத்தில்.."

"இந்த வெயிலில் காய்ந்து கொண்டிருக்கிற இந்த மீன் துண்டுகள் ஒரு கொழுத்த சுறா மீன் துண்டுகள். எங்கள் பரதவ இளைஞர்கள் இந்தக் கொழுத்த சுறாவைப் பிடித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். நெய் வடிந்து கொண்டிருக்கிற இந்தக் கரு வாட்டைக் கொத்திக் கொண்டு போவதற்கு அங்கங்கே மரங் களில் காகங்கள் உக்காந்திருக்கின்றன. காகங்களைத் துரத்து வதற்கே எனக்கு வேலை சரியாக இருக்கிறது."

"எங்கள் வயல், எங்கள், கடல்தான்.."

"எங்கள் கடல் எங்களுக்குக் கொடுக்கிற மீன் எங்கள் வாழ்க்கைக்குப் போதும்.."

"எங்கள் கடல் எங்கள் பரதவர்களுக்கு எப்போதும் மீன்

கொடுத்துக் கொண்டே இருக்கிறது."

"எங்கள் பரதவர்களிலும் பணக்காரர்கள் இருக்கிறார்கள்"

"எங்கள் பரதவர்களிலும் ஒழுக்கமான நல்ல இளைஞர்கள் இருக்கிறார்கள்."

"எங்கள் இளைஞர்கள் கடலுக்குப் போனால் கடலே கலங்குகிறது. சமுத்திரத்தையே கலக்கும் வலிமை உள்ளவர்கள் எங்கள் இளைஞர்கள். மீன்களைக் கொலை செய்யும் மரபினர் நாங்கள், எங்கள் பரதவ இளைஞர்களால் உனக்கு ஆபத்து வரலாம்.."

"கிளம்பு..போ.."

"நீ எங்கள் பரதவப் பெண்ணுக்கு ஏற்றவன் இல்லை.."

உலோச்சனார்.

கதை-84.
நற்றிணை. 84.

"மின்மினிப் பூச்சிகள்"

ஒரு தோட்டம்.

அந்தப் பெரிய தோட்டத்தில் பெரிய பெரிய பலா மரங் கள் இருக்கிறது. அந்தப் பலா மரங்களில் பெரிய பெரிய பலாப் பழங்கள் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அந்தப் பலா மரங்களில் மின் மினிப் பூச்சிகள் அடைந்திருக்கின்றன. மின்மினிச் பூச்சிகள் நெருக்கமாகவும் இடைவெளியே இல்லாமலும் கசகசன்னு அடைந்திருக்கிறது.

மின்மினிப் பூச்சிகள் நெருக்கமாகக் கசகசன்னு அடைந் திருக்கிற அந்தப் பெரிய பலா மரங்களில் மின்மினிப் பூச்சிகளின் வெளிச்சம் அழகா நல்ல வெளிச்சமாயிருக்கு.

விவசாயிகள் அவர்கள் வீட்டின் முற்றத்தில் உட்கார்ந்து கொண்டு மின்மினிப் பூச்சிகளின் பிரகாசமான வெளிச்சத்தில் வானத்தை அண்ணாந்து பார்க்கிறார்கள்.

மின்மினிப் பூச்சிகளின் பிரகாசமான வெளிச்சத்தில், மழை மேகங் களின் இயக்கம் வானத்தில் எப்படி இருக்கிறது. என்பதை அந்த ஊர் விவசாயிகள் துல்லியமாகத் தெரிந்து கொள்கிறார்கள்.

பெருங்கோசிகனார்.

கதை-85.
நற்றிணை. 85.

" கறி "

ஒரு மலை.

அந்த மலையில் மூங்கில்கள் உயரமாக வளர்ந்திருக்கிற ஒரு மூங்கில் காடு.

மூங்கில் காட்டில் கடுமையாருக்கு வெயில்.

அந்தப் பெரிய மூங்கில் காட்டில் ஒரு சின்ன நரி.

நரிக்குப் பெரும் பசி.

இந்தக் கடுமையான வெயிலில் வாடி வதங்கிக் களைத்துப் போன ஒரு பெரிய ஆண் மான் நடக்க முடியாமல் மெல்லமாய் நடந்து வந்து கொண்டிருக்கிறது..

பெரும் பசியில் இருக்கிற நரி மானைத் துரத்துகிறது.

ஓட முடியாத அந்தப் பெரிய மான் அந்தச் சின்ன நரியிடம் அகப்பட்டுக் கொண்டது.

நரி, மானைக் கொல்லுகிறது.

பசி அடங்கும் வரை நரி அந்தப் பெரிய மானை தின்று கொண்டேயிருந்தது.

அந்தப் பெரிய மானின் அவ்வளவு கறியையும் அந்தச் சின்ன நரியால் திங்க முடியவில்லை.

நரி தின்றுவிட்டுப் போட்ட மிச்சக் கறி அங்கேயே கெடக்கு.

இந்த மிச்சக் கறி பசியோடு வருகிற பிராணிகளின் பசியை அமர்த்தும்.

எயினந்தையார்.

கதை-86.
நற்றிணை. 43.

"தவளைகள் கத்திக் கொண்டிருக்கிறது"

ஒரு வருசத்துக்குப் பிறகு இப்போதுதான் நான் எங்கள் ஊருக்குப் போய்க் கொண்டிருக்கிறேன்.

மழை பெய்து கொண்டிருக்கிறது.

தண்ணீர் தேங்கிய கிடங்குகளில் இருந்து தவளைகள் கத்திக் கொண்டிருக்கின்றன. தவளைகள் கத்திக் கொண்டிருப்பதால் என் தேரில் பூட்டிய என் குதிரைகளின் நல்ல மணியோசை என் மனைவிக்குக் கேட்கவில்லை.

என் தேர் என் மாளிகை முன் வந்து நின்று கொண்டிருக்கிறது.

இரண்டு குதிரைகள் பூட்டிய என் தேரில் இருந்து இறங்கி நான் என் மாளிகையில் நுழைந்து கொண்டிருக்கிறேன்.

ஓடி வாராள் என் மனைவி.

என் மனைவி என்னை அவள் மார்போடு சேர்த்து அணைத்துக் கட்டிப் பிடித்துக் கொள்கிறாள்.

என் மனைவி அவள் தலைக்கு எண்ணெய் தேய்க்கவில்லை. தலைவாரி சடை பின்னவில்லை தலையில் பூ வைக்கவில்லை. என் மனைவி குளிக்கவுமில்லை. என் மனைவி நல்ல சேலை உடுத்தவும் இல்லை

என் மனைவி என்னை அவள் மார்போடு சேர்த்து அணைத்துக் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறாள்.

மழை வெறித்திருக்கிறது.

தண்ணீர் தேங்கிய கிடங்குகளில் இருந்து தவளைகள் கத்திக் கொண்டிருக்கின்றன.

குடவாயில் கீரத்தனார்.

கதை-87.
நற்றிணை. 42.

"விழா"

ஒரு பெரிய நகரம்.

அந்தப் பெரிய நகரத்தில் ஒரு பெரிய வீடு.

அந்தப் பெரிய வீட்டுக்கு முன்னால் புதுப் பந்தல் போட்டிருக்கு.

பந்தலுக்குக் கீழே அந்தப் பெரிய முற்றத்தில் குருத்து மண்ணைக் கொட்டி அந்தக் குருத்து மண்ணை அழகாக விரித்து வைத்திருக்கிறார்கள்.

அந்தப் பெரிய வீட்டில் யாழிசைக் கலைஞர்களின் யாழ் இசை நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது.

நல்ல நல்ல நகைகள் அணிந்து கொண்டு நல்ல நல்ல அழகான பெண்கள் விருந்தினர்களை வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தப் பெரிய வீட்டில் ஒரு விழா நடந்து கொண்டிருக்கிறது.

அந்தப் பெரிய வீட்டில் ஒரு குழந்தை பிறந்திருக்கிறது.

அந்தப் பெரிய வீட்டில் ஒரு படுக்கை அறை. அந்தப் படுக்கை அறையில் ஒரு புதிய மெத்தை. அந்த மெத்தை மேல் ஒரு மெல்லிய போர்வை விரிச்சிருக்கு. அந்த மெத்தையில் நறுமணம் வீசிக் கொண்டிருக்கிறது. அந்த மெத்தையில் பச்சக் குழந்தையைப் படுக்க வைத்திருக்கிறார்கள். அந்தப் பச்சக் குழந்தை கண்களை மூடிக் கொண்டு உறங்கிக் கொண்டு இருக்கிறது.

குழந்தைக்குப் பக்கத்தில் வளர்ப்புத் தாய் படுத்திருக்கிறாள்.

தாய், குழந்தை பெத்த அசதியில் சோர்வாகப் படுத்திருக்கிறாள்.

குழந்தையின் அப்பா அவன் பெத்த குழந்தையைப் பார்ப்பதற்கு அவன் சொந்த வீட்டிற்குள் திருடனைப் போல் நுழைந்து கொண்டு இருக்கிறான்.

குழந்தையின் அப்பன் குழந்தையின் தாயிடமிருந்து பிரிந்து போய் ஒரு பரத்தையோடு வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

கோமால் நெடுங் கோடனார்.

கதை-88.
நற்றிணை. 40.

"எங்கள் எல்லாருக்கும் சொந்த வீடு இருக்கிறது."

எங்கள் ஊர். கடல் ஓரக் கிராமம்.

எங்கள் கடலில் எங்கள் பரதவர்களுக்கு நல்ல மீன் பாடு இருக்கிறது.

பரதவர்கள் அழகாக வியாபாரம் செய்கிறார்கள்.

பரதவரிடம் நல்ல பணப்புழக்கம் இருக்கிறது.

எங்கள் ஊரில் மழைக்குக் குறைச்சலில்லை.

கம்மா, கிடங்கு, ஊரணிகளில் எப்போதும் தண்ணீர் இருக்கிறது.

தோட்டக் காடுகள் செழித்திருக்கிற ஊர் எங்கள் ஊர்

எங்கள் ஊரில் ஏகப்பட்ட பனை மரங்கள் இருக்கு.

பனை மரங்கள் எங்களுக்கு ஓலை தருகிறது.

எங்கள் கொட்டாரத்தை நாங்கள் பனை ஓலைகளால் அடைத்திருக்கிறோம்.

பனை மரங்கள் கள் தருகிறது. கள் வியாபாரம் எங்கள் ஊரில் கொடிகட்டிப் பறக்கிறது.

நாங்கள் எல்லோரும் வேலை செய்கிறோம்.

எங்கள் ஊரில் எங்கள் எல்லாரிடமும் பணப் புழக்கம் இருக்கிறது.

எங்கள் எல்லாருக்கும் சொந்த வீடு இருக்கிறது.

எங்கள் ஊர் செழிப்பாக இருக்கிறது. நாங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறோம்.

உலோச்சனார்.

கதை-89.
நற்றிணை.38.

" ஊர் "

இது எங்கள் ஊர்.

எங்கள் ஊரில் ஒரு பணக்கார வீடு இருக்கிறது.

அந்தப் பணக்கார வீட்டில் அழகான ஒரு இளம் பெண் இருக்கிறாள்.

ஒரு வெளியூர்ப் பையன் இரவில் எங்கள் ஊருக்கு வந்து அந்தப் பெண்ணைச் சந்திக்கிறான்.

இது ரொம்ப நாளாக நடந்து கொண்டிருக்கிறது.

இது ஊர் பூராத் தெரியும்.

சில பொம்பளையாளுக்க அந்தப் பொட்டப்புள்ளய சாடை மாடையாக வைவாக. சில பொம்பளையாளுக்க அந்த பொட்டப்புள்ள முகத்துக்கு நேராக வைவாக.

அந்த வெளியூர்ப் பையன் எங்கள் ஊருக்குள் வந்தால் அவனை அடித்துத் துரத்துவது என்று ஊர் எளவட்டங்கள் முடிவெடுத்திருக்கிறாரகள்.

எங்கள் ஊர் எளவட்டங்கள் எங்கள் ஊரை இரவு நேரத்தில் காவல் காக்கிறார்கள்.

எங்கள் ஊர் ஆம்பளையாளுக்களும் பொம்பளையாளுக் களும். இரவில் உறங்காமல் முழித்து இருந்து தெருவில் நின்று கொண்டு சத்தம் போட்டுப் பேசிக் கொண்டு இருப்பார்கள்.

எங்கள் ஊர் அந்தப் பையனைக் காவல் காக்கிறது.

அவள் வீடு அந்தப் பெண்ணைக் காவல் காக்கிறது.

அந்தப் பெண் அவள் காதலனைச் சந்திக்காமல் மெலிஞ்சிட்டாள்.

அந்தப் பெண் ஊரக்காரர்களைப் பார்த்துக் கேட்கிறாள். " நான் என் காதலனை இழந்தேன். நான் என் பெற்றோர்களின் ஆதரவை இழந்தேன். நான் என் உடல் நலத்தை இழந்தேன். நான் என் உறக்கத்தையும் இழந்தேன்.."

"நான் இழந்தது ஏராளம்.."

"ஊர் எதை இழந்தது..?"

"ஊர் இந்த நடு இரவில் கண்ணுறங்காமல் கண் முழித்துக் கொண்டு இருக்கிறதே என்னத்துக்கு...?"

மதுரை சீத்தலைச் சாத்தனார்.

கதை-90.
நற்றிணை. 36

" அழகான ஒரு கடல் கரை. "

ஒரு கடல்.

கடல் பொங்கி எழும்புகிறது.

கடல் அலைகள் கரையில் மோதி உடைகின்றன.

கடல் கரை அழகாருக்கு.

கடல் கரையில் ஒரு நாவல் மரம் இருக்கிறது.

அந்த நாவல் மரத்தில் இருந்து ஒரு நாவல் பழம் கீழே விழுந்து கிடக்கிறது. அந்த நாவல் பழத்தை வண்டுகள் மொய்த்துக் கொண்டிருக்கின்றன.

நாவல் பழத்தை மொய்த்துக் கொண்டிருக்கிற வண்டுகளை ஒரு நண்டு துரத்துகிறது. அந்த நாவல் பழத்தை வண்டுகளிடம் இருந்து அந்த நண்டு பறித்துக் கொண்டது.

ஒரு நாரை நண்டைக் குறி வைத்து வந்து கொண்டிருக்கிறது.

தன்னை நோக்கி வந்து கொண்டிருக்கிற நாரையைப் பார்த்ததும் நண்டு ஓட்டமாக ஓடுகிறது. நண்டு ஓட்டமாக ஓடிப்போய் அது ஒரு நண்டுச் செலவுக்குள் புகுந்து ஒளிந்து கொண்டது.

கடல் அலைகள் கரையில் மோதி உடைகின்றன.

கடல் பொங்கி எழும்புகிறது.

கடல் கரை அழகாக இருக்கிறது.

அம்மூவனார்.

கதை-91.

நற்றிணை.35.

"சாமர்த்தியம் இல்லாத கணவன்"

ஒரு தினைக்காடு.

தினைக்காட்டில் தினைக் கருதுகள் நல்லா வெளைஞ் சிருக்கு.

அந்தத் தினைக்காட்டில் உயரமான ஒரு காவல் பரண் இருக்கிறது. ஒரு பெண் அந்தப் பெரிய தினைக்காட்டைக் காவல் காத்துக் கொண்டிருக்கிறாள்.

ஒரு பெண் குரங்கு சத்தங்காட்டாமல் அந்தத் தினைக் காட்டுக்கு வந்து ஒளிஞ்சிக்கிட்டு உக்காந்துக்கிட்டிருக்கு. அந்தப் பெண் குரங்கு, காவல்காரப் பெண்ணுக்குத் தெரியாமல் தினைக் கருதுகளைக் களவாண்டு கொண்டிருக்கிறது. அந்தப் பெண் குரங்கு அது களவாண்ட கருதுகளை மறைத்து வைத்துக் கொண்டு ஒளிஞ்சி ஒளிஞ்சி போய் மலை மேல் ஏறி உட்கார்ந்து கொண்டிருக்கிறது.

உயரமான ஒரு வட்டப் பாறையில் உட்கார்ந்து கொண் டிருக்கிறது அந்தப் பெண் குரங்கு. அந்தப் பெண் குரங்குக்கு நேர் எதிரில் உட்கார்ந்து கொண்டிருக்கிறது பெண் குரங்கின் கணவன்.

ஆண் குரங்குக்கு சாமர்த்தியம் போதாது.

ஆண் குரங்குக்கு களவாங்கத் தெரியல.

ஆண் குரங்குக்கு கருதுகளைக் கசக்கவும் தெரியாது.

ஆண் குரங்குக்கு கசக்கிய தினை அரிசியைக் கொம்மை

இல்லாமலும், பொக்கு இல்லாமலும் ஊதி ஊதிச் சுத்தப் படுத்தவும் தெரியாது.

பெண் குரங்கு அது களவாண்ட தினைக் கருதுகளை இரண்டு கைட்டும் கசக்குகிறது. கசக்கிய தினை அரிசியை இரண்டு கையிலும் மாத்திப் போட்டு மாத்திப் போட்டு தூற்றித் தூற்றி, ஊதி ஊதி தினை அரிசியைத் தூற்றி எடுக்கிறது.

அந்தப் பெண் குரங்கு தனக்கு எதிரில் உட்கார்ந்திருக்கிற தன் கணவனுக்கு, கணவன் வாயில் தினை அரிசியை ஊட்டி விடுகிறது.

ஆண் குரங்கு இடது கடைவாயில் இருந்து வலது கடை வாய்க்கும், வலது கடை வாயில் இருந்து இடது கடை வாய்க்கும் அந்தத் தினை அரிசியை நவட்டி நவட்டிச் சுவைத்துக் கொண் டிருக்கிறது.

நல்வேட்டனார்.

கதை-92.
நற்றிணை. 22.

" சேவல் "

ஒரு காடு.

அந்தக் காட்டில் இரவு பூராவும் மழை பெய்து கொண்டிருந்தது.

அந்தப் பெரிய மழை இப்போதுதான் வெறித்திருக்கிறது.

பொழுதும் இப்போதுதான் விடிந்திருக்கிறது.

அந்தக் காட்டில்அழகான ஒரு காட்டுச் சேவல்.

அந்தப் பெரிய காட்டில் அந்தக் காட்டுச் சேவல் ஒத்தீல நின்று கொண்டிருக்கிறது.

காட்டுச் சேவல் பார்க்கப் பார்க்க அழகாருக்கு.

அந்தக் காட்டுச் சேவலின் நிறங்கள் கண்களைப் பறிக்கின்றன. வண்ண வண்ண நிறங்களில் அழகான பொடிப் பொடிப் புள்ளிகள் சேவலின் றெக்கைகளில் கண் சிமிட்டிக் கொண்டிருக்கிறது.

மழைத் தண்ணீர் வடிந்து ஓடிய பள்ளமான ஒரு ஈர நிலத்தில் காட்டுச் சேவல் கம்பீரமாக நின்று கொண்டிருக்கிறது.

சேவல் ஈரமான மண்ணைக் கிண்டுகிறது.

சேவல் ஈர மண்ணைக் கிண்டக் கிண்ட, ஈர மண்ணின் அடியில் இருந்து ஒரு மண்புழு மேலே வருகிறது.

தன் காலடியில் நெளிந்து கொண்டிருக்கிற ஒரு மண்புழுவை அழகான அந்தக் காட்டுச் சேவல் பார்க்கிறது. சேவலுக்கு மகிழ்ச்சி என்றால் அவ்வளவு மகிழ்ச்சி.

சேவல் மனைவியைத் தேடுகிறது.

அழகான அந்தக் காட்டுச் சேவலின் கண்களுக்கு, கண்ணுக்கு எட்டிய தூரம் வரைக்கும் அந்தச் சேவலின் மனைவியைக் காணவில்லை.

சேவல் மனைவியைக் கூப்பிடுகிறது.

கணவன் கூப்பிடுகிற சத்தம் கேட்டதும் அந்த பொட்டக் கோழி ஓடோடி வருகிறது.

அந்தப் பொட்டக் கோழி தன் காதல் கணவன் அருகில் ஒட்டி நின்று கொண்டிருக்கிறது.

காட்டுச் சேவல் தன் காலுக்கு அடியில் மிதித்துக் கொண்டிருந்த அந்த மண்புழுவை மனைவியிடம் கொடுக்கிறது.

கணவன் காலடியில் நெளிந்து கொண்டிருக்கிற நீளமான அந்த மண்புழுவை அந்தப் பொட்டக் கோழி கொத்திக் கொத்தி உதறி உதறிக் கொல்லுகிறது.

மனைவி இரை தின்னும் அழகை ரசித்துக் கொண்டு பெருமை பொங்கக் கம்பீரமாக நின்று கொண்டிருக்கிறது அழகான அந்தக் காட்டுச் சேவல்.

மருதன் இளநாகனார்.

கதை-93.
நற்றிணை. 21

" அழுகைச் சத்தம் "

ஒரு பெரிய ஆண் யானை. தன் இளம் காதல் மனைவியை அழைத்துக் கொண்டு அந்தப் பெரிய காட்டில் அது மகிழ்சியோடு வந்து கொண்டிருக்கிறது.

ஒரு பாம்பு, அந்த ஆண் யானையைப் பிடித்துக் கொண்டது.

அந்தப் பெரிய பாம்பு அந்தப் பெரிய ஆண் யானையை விழுங்கிக் கொண்டிருக்கிறது. பெண் யானையின் கண்ணுக்கு முன்னால் இந்தத் துயரம் நடந்து கொண்டிருக்கிறது.

அந்தப் பெரிய பாம்பின் வாய்க்குள், அந்தப் பெரிய ஆண் யானைபடுகிற பாட்டைக் காணச் சகிக்காமல் அந்தப் பெண் யானை துக்கம் தாங்காமல் அழுது கொண்டிருக்கிறது.

அந்தப் பெண் யானை இரவெல்லாம் கண் உறங்காமல் அது இரவு பூராவும் அழுது கொண்டிருந்நதது.

அந்தப் பெண் யானையின் அழுகைச் சத்தம் நீளமான அந்தப் பெரிய மலையிலும், பள்ளத்தாக்கிலும் மோதி அந்தப் பெண் யானையின் சோகத்தை எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

மாமூலனார்.

கதை-94.
நற்றிணை.14.

" ஞாபகார்த்தமாக "

ஒரு சிறிய கிராமம்.

அந்தச் சிறிய கிராமத்தில் ஒரு சிறிய வீடு.

அந்தச் சிறிய வீட்டில் ஒரு பெரிய மண்பானை இருக்கிறது.

அது மோர் கடைகிற பெரிய மண் பானை.

அந்தப் பெரிய மண் பானையில் வெகு நாட்களாக மோர் கடைந்து மோர் கடைந்து நாள்பட்ட மோர் மணம் புளிப்பேறிப் புளிப்பேறி அது மொடை மணம் வீசிக் கொண்டிருக்கிறது. இந்த மொடை மணத்தை மாற்றுவதற்காக அந்தப் பெரிய மோர்ப் பானையில் விளாம்பழங்களைப் போட்டு வைத்திருக்கிறார்கள்.

மோர் கடைகிற முரட்டுக் கயிறால் கடைந்து கடைந்து மத்து அங்க அங்க தேய்ந்திருக்கிறது.

அந்தச் சிறிய வீட்டில் ஒரு இளம்பெண்.

அழகான அந்த இளம்பெண் அவள் முகம் தெரியாமலும், அவள் உடம்பு தெரியாமலும் ஒரு துணியால் மூடியிருக்கிறாள்.

இருட்டு தேய்ந்து தேய்ந்து, இருட்டு மெல்ல மெல்ல விலகிக் கொண்டிருக்கிற அழகான ஒரு விடியக் காலம்.

தன்னை முழுவதும் ஒரு துணியால் மூடிக் கொண்டிருக்கிற அழகான அந்த இளம்பெண், அவள் கால்களில் அணிந்திருக்கிற கால் சிலம்புகளைக் கழட்டுகிறாள். இவ்வளவு நாளும் அவள் விளையாடிக் கொண்டிருந்த, வண்ண வண்ண நூல்களால்

சுற்றிய அழகான பந்தை அவள் தேடி எடுக்கிறாள்.

வண்ண வண்ண நூல்களால் அழகாகச் சுற்றிய அவளுடைய அழகான பந்தையும், அவள் கால்களில் அணிந்திருந்த அவளுடைய அழகான கால் சிலம்புகளையும், அவள் வீட்டில் உள்ளவர்கள் பார்வைக்குத் தெரியும்படியான ஒரு இடத்தில் வைக்கிறாள். அந்தப் பெண்.

இவைகளைப் பார்த்துப் பார்த்து நீங்கள் கண்ணீர் வடித்துக் கொண்டிருங்கள். என்று அவள் ஞாபகார்த்தமாக அவைகளை அங்கே அவள் வைக்கிறாள்.

அழகான அந்த இளம்பெண் அவளை முழுசாக மூடிக் கொண்டு அவள் வீட்டைவிட்டு வாசல் படியைத் தாண்டிப் போய்க் கொண்டிருக்கிறாள்.

அழகான அந்த இளம்பெண்ணின் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருக்கிறது.

கயமனார்.

கதை-95.
நற்றிணை. 12.

" நிலா வெளிச்சம் "

கடல் கரையில் குருத்து மணல் கொட்டிக் கெடக்கு.

கடல் அலைகளால் கரை ஒதுங்கிய பூக்கள் அந்தக் கடல் கரை நெடுகக் கெடக்கு.

அந்தக் கடல் கரைப் பாதையில் ஒரு தேர் அசைந்து அசைந்து மெள்ள மெள்ள வந்து கொண்டிருக்கிறது.

அந்தக் கடல்கரைப் பாதை நெடுகிலும் நண்டுகள் அங்கிட்டும் இங்கிட்டும் ஓடிக் கொண்டிருக்கின்றன.

குறுக்கும் நெடுக்குமாக ஓடிக் கொண்டிருக்கிற அழகான அந்தச் சின்னஞ் சிறு நண்டுகள் மேல் தேர்ச்சக்கரம் ஏறி நண்டுகள் செத்து விடக்கூடாது என்று தேர்ப்பாகன் குதிரையின் வாரை இழுத்துப் பிடித்துக் கொண்டிருக்கிறான். தேர்ப்பாகன் அவன் குதிரைகளை மெல்லமா லாகவமா நடக்க வைக்கிறான்.

தேர்க்காலில் சிக்கி நண்டுகள் நசுங்கிச் சாகாமல் இருக்க தேர்ப்பாகனுக்குப் பகல் போன்ற நல்ல வெளிச்சத்தைக் கொடுத்து உதவிக் கொண்டிருக்கிறது முழு நிலவு.

உலோச்சனார்.

கதை-96.
நற்றிணை.11

" பொய் இல்லாத வார்த்தைகள் "

வளம் செழிக்கும் ஊருக்கு அதிபதியே..

பொய் இல்லாத வார்த்தைகளுக்குச் சொந்தக்காரனே..

உன் வார்த்தைகளை அப்படியே ஏற்றுக் கொண்டு இவள் உன்னோடு நடந்து வந்து கொண்டிருக்கிறாள்.

நிமிர்ந்து உயர்ந்திருக்கிற இவள் மார்புகள் சாய்ந்த காலத்திலும், பொன்னிறமான இவள் மேனியில் புரண்டு கொண்டிருக்கிற இவள் கருங் கூந்தலில் நரை தோன்றிய காலத்திலும் நீ இவளை விட்டுப் பிரியாமல் இவளைப் பாதுகாத்து அருள் செய்.

குடவாயில் கீரத்தனார்.

கதை-97.
நற்றிணை. 10.

" அல்லிப் பூ "

ஒரு பெரிய வயலில் அறுவடை நடந்து கொண்டிருக்கிறது.

அந்தப் பெரிய வயலில் நெல் அறுவடையின் போது, ஒரு அல்லி மொட்டு அறுபட்டு நெல்லுக் கெட்டோடு சேர்ந்து அது களத்து மேட்டுக்கு வந்திருக்கிறது.

அந்தக் களத்து மேட்டில் ஒரு நெல் சூடு இருக்கு.

அந்தப் பெரிய நெல் சூட்டில் இந்த அல்லி மொட்டு அழகாகப் பூத்திருக்கிறது.

கண்ணகனார்.

கதை-98.
நற்றிணை.8.

"மூங்கில் அரிசி"

ஒரு மூங்கில் காடு.

அந்த மூங்கில் காட்டில் அரிசி கொட்டிக் கெடக்கு. அந்த மூங்கில் அரிசி வெள்ள வெளேர்னு அழகாருக்கு.

அந்த மூங்கில் காட்டுக்கு ஒரு யானை வந்திருக்கு.

அந்த யானை அந்த மூங்கில் அரிசியை வளைத்துப் பிடித்துத் தின்கிறது. அந்த யானை வயிறு நெறைஞ்சதுக்குப் பிறகு அது அசைந்து அசைந்து நடந்து போய்க் கொண்டிருக்கிறது.

அந்தப் பெரிய காட்டில் பெரிய பெரிய சந்தன மரங்கள் இருக்கின்றன. அந்தப் பெரிய சந்தன மரங்களுக்கு ரொம்பச் சின்ன இலைகள், இந்தச் சின்ன இலைகள் வெயிலுக்கு வாடி இருக்கிறது.

மூங்கில் காட்டில் இருந்து அசைந்து அசைந்து நடந்து போய்க் கொண்டிருந்த அந்த யானை ஒரு சந்தன மரத்தின் நிழலில் படுத்திருக்கிறது.

சந்தனக் காற்று தாலாட்டித் தாலாட்டி யானையை உறங்க வைக்கிறது.

நல் வெள்ளியார்.

கதை-99.
நற்றிணை.7.

"பருந்து"

ஒரு வேப்ப மரம் ஊருக்கு மத்தியில் இருக்கிறது.

அது பெரிய வேப்பமரம்.

அந்தப் பெரிய வேப்பமரம் இலைகளையெல்லாம் உதிர்த்து விட்டு மொட்டையாக நின்று கொண்டிருக்கிறது.

அந்தப் பெரிய வேப்ப மரத்தில் பட்டைகள் எல்லாம் காய்ந்து சில்லுச் சில்லாக வெடித்திருக்கிறது.

அந்தப் பெரிய வேப்ப மரத்தின் நிழலில் வெயிலும் நிழலும் கலந்து கெடக்கு.

எங்கள் ஊர்ப் படிக்காத பையன்கள் அந்த நிழலில் தெள்ளு விளையாட்டு விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சத்தம் போட்டுப் பேசிக் கொண்டும்,சத்தம் போட்டுச் சிரித்துக் கொண்டும் அவர்கள் மகிழ்ச்சியோடு விளையாடிக் கொண்டிருக் கிறார்கள்.

அந்தப் பெரிய வேப்ப மரத்தில் உச்சாணியில் ஒரு பருந்து உக்காந்திருக்கிறது.

அது கூடு கெட்டியிருக்கு, அது குஞ்சும் பொரிச்சிருக்கு. குஞ்சுகளுக்கு இரை இல்லை.

அந்தப் பருந்து குஞ்சுகளுக்கு இரை கிடைக்காத வருத்தத்தில் கவலையோடு உக்காந்திருக்கிறது.

இளங்கீரனார்.

கதை.100
நற்றிணை. 3.

நன்றி..!

பாசத்துடன்

மு. சுயம்புலிங்கம்.

கல்யாணி சுயம்புலிங்கம்.

M. S. ரிஷி அவர்கள்.

S. செல்வம் அவர்கள்,

லட்சுமி பிரியா செல்வம் அவர்கள்,

S. கணேஷ் குமார் அவர்கள்

நாகஜோதி கணேஷ் குமார் அவர்கள்,

S. தவயோக ராஜன் அவர்கள்,

பேபி **S.** சஹானா

பேபி **G.** மோனிகா

நற்றிணை கதைகள் நூறு.